



கல்கி
ALKI
18-8-1963
30
காசு



துள்ளி
விளையாடும்
பொழுதோ



ஒய்வு பெறும்
பொழுதோ...
அவர்கள்
எப்பொழுதும்
வளர்ந்து
கொண்டே
இருக்கிருர்
கள்!




கல்ஸாஞு-டி

வைட்டமின் நிவிரச் சேர்க்கையுடைய கால்சியம்

GR.AD.SO. TAM

கல்கி பொருளடக்கம்

சோபகிருது, ஆவணி 2உ ● ஆகஸ்டு 18உ 1963



பட விளக்கம் 29-ம் பக்கம் பார்க்கவும்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே

புகைபிடிக்கும் இங்கிதம்

உதவுவீர் முன்னே, ஊதுவீர் பின்னே



நாலுபேருக்கு நடுவில் புழங்கும் போது, சொந்த சிகரெட்டைப் பற்றவைப்பதற்கு முன்பாக, பிறருக்கு வழங்குவதே ஒழுங்கு. ஒரு பெட்டியைக் கச்சிதமாக நீட்டினீர்களேயானால் அதுவே மெச்சுதற்குரிய வழி. பிறரிடமிருந்து பெறும் ரகங்களைக் குறைகூறாம லிருத்தல் சிறந்த பண்பாட்டுக்கு அறிகுறி

உயரிய பண்போடு உபயோகிப் பதற்கும் உதவுவதற்கும் உகந்தது **பனாமா**



விசேஷக் கலவை செய்வோர்:
கோல்டன் டுபாக்கோ கம்., ப்ரைவேட் லிட்.
பம்பாய்-56.

இழுக்க இழுக்க இன்பம் - இறுதிவரை

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT. 416 TAM — Greens' Advtg.



மலர் 23 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 3

திருநாளன்று சில சிந்தனைகள்

பதினாறாண்டுகளுக்கு முன்பு பாரதம் சுதந்திரம் பெற்றபோது எப்படியெல்லாம் ஆடினோம், பள்ளுப் பாடினோம், என்ன மகோன்னதங்களையெல்லாம் எதிர்பார்த்தோம் என்பதை இன்று எண்ணிப் பார்த்தால் நமது ஆசை அபிலாஷை யாவும் ஒரு சிதைந்த கனவாகி விட்டதுதான் தெரிகிறது. ஆனால் மனத்தைத் தளர விடுவதில் பயனில்லை. ஆண்டவனின் அருளில் நம்பிக்கை வைத்து, நாட்டுக்குக் கிடைத்த சுதந்திரம் மக்களுக்கெல்லாம் கிடைக்கப் பாடுபட வேண்டியதே நம் கடமை. சீன அபாயத்தைப் போலவே உள்நாட்டு அபாயங்களையும் உணர்ந்து, அவற்றைத் தீர்க்கும் உபாயங்களை எண்ணிப் பார்க்க வேண்டும். இவ்விஷயமாகத் தலைவர் ராஜாஜி அவர்களின் சுதந்திர தினச் சிந்தனைகளைக் 'கல்கி' நேயர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

மொழிவாரி மாநிலங்கள் அமைந்தது முதற்கொண்டு சுதந்திர இந்தியா ஒரே நாடு என்ற ஒற்றுமை உணர்வு குலைந்து, ராஜ்யங்கள் ஒவ்வொன்றும் தன்னைத் தனி நாடாக எண்ணத் தொடங்கியிருக்கிறது. இந்த விபரீத நிலையை ராஜாஜி முதலில் ஆராய்கிறார். இப்படியே சென்றால் தேசப்பற்று போய், பிரதேசப் பற்றோடு பொது வாழ்வு முடிந்துவிடும் எனக் கருதுகிறார். இதற்கு மருந்தாக எண்ணி மத்திய சர்க்காரிடம் அதிக அதிகாரங்களை அளிப்பது சரியாகாது; அதனால் ராஜ்யங்களின் எதிர்ப்புணர்ச்சி மேலும் அதிகமாக வளரும் என்கிறார். இன்று கொஞ்சநஞ்சமுள்ள ஐக்கிய உணர்ச்சியும் குலையாமலிருக்க வேண்டுமானால் ஆட்சிமொழிச் சட்டம் போன்ற பட்சபாதச் சட்டங்களை ஒழிக்க வேண்டும்.

சுதந்திர பாரதத்தின் இரண்டாவது பிரச்னையாகப் பொதுத் தேர்தல்களைக் கருதுகிறார் ராஜாஜி. இப்போது நடப்பதுபோல் தேர்தல்களைப் பணச் சந்தையாக்கினால், ஆளும் கட்சியைப் போன்ற திரவிய வசதியில்லாத எதிர்க்கட்சிகள் எல்லாம் தேர்தலிலிருந்து விலகிவிட வேண்டியதுதான்; கம்யூனிஸ நாடுகளைப்போல், தேர்தல் என்ற போலிப் பெயரில் ஆள்கிற கட்சி ஒன்றுதான் தேர்தல்களில் போட்டியிட முடியும். ஜனநாயக முறையில் உண்மைத் தேர்தல்கள் நடைபெறும் காலம் விரைவிலேயே அஸ்தமித்துவிடும் என்று எச்சரிக்கிறார் ராஜாஜி. இந்த நிலைமை மாற ஒரே வழி, ஏதேதோ தொழில்களைத் தேசியமயமாக்கத் துடிக்கும் சர்க்கார் முதலில் தேர்தல்களைச் சர்க்காரின் நேர்பொறுப்பாக்க வேண்டும். சர்க்காரே தேர்தல் செலவுகளை ஏற்கவேண்டும். அதாவது, வாக்காளர்களைப் பதிவு செய்து தேர்தல் சீட்டு வழங்கும் செலவை ஏற்றுச் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் வீடு வீடாகச் சென்று வோட்டுக்களைச் சேகரிக்க வேண்டும். தேர்தல் தினத்துக்கு ஒரு வாரத்துக்கு முன்பே எல்லாக் கட்சிப் பிரசாரங்களையும் தடுத்துவிட வேண்டும். இதெல்லாவற்றுக்கும் பூர்வாங்கமாகத் தேர்தலுக்கு ஆறு மாதத்துக்கு முன்பே மந்திரி சபைகள் ராஜிநாமா செய்து ராஷ்டிரபதி ஆட்சியும், கவர்னர் ஆட்சியும் நடைபெற வேண்டும். பிரதேசப் பிரச்னைகளையும், அகில இந்தியப் பிரச்னைகளையும் குழப்பாமல், பிரதேசப் பிரச்னைகளை முன் வைத்து ராஜ்ய சட்டசபைத் தேர்தல்களையும், அகில இந்தியப் பிரச்னைகளை முன் வைத்து லோகசபைத் தேர்தல்களையும் வெவ்வேறு சமயத்தில் நடத்த வேண்டும் என்கிறார் ராஜாஜி. இப்படிச் செய்தால்தான் கூடிய வரையில்

கொள்கைகளின் அடிப்படையில் மக்கள் வாக்குப் பதிவு செய்வது சாத்தியமாக இருக்கும்.

மூன்றாவது பிரச்னை நமது வெளி நாட்டுக் கொள்கை. 'நடுநிலைமை', 'கூட்டுச் சேராமை' போன்ற மந்திரங்களை ஆட்சியாளர்கள் ஜபம் செய்து கொண்டிருந்தாலும் நடைமுறையில் அவர்கள் மேல் நாடுகளுடன் இணையவே செய்வார்கள் என்ற நன்னம்பிக்கை ராஜாஜிக்கு உள்ளது. சீன அபாயம் காரணமாகவே நாடு மேலும் மேலும் யதார்த்த நிலையையும், அதற்கான பரிகாரத்தையும் உள்ளபடி உணர்ந்து விவேகமான முடிவுக்கு வரும் எனக் கருதுகிறார் அவர்.


கொள்கை கோஷங்களால் எப்படிச் சீனாவும், ருஷியாவும் ஒன்றுபட முடியாமல் சரித்திர — பொருளாதார அம்சங்களின் மேல் பிளவு படுகின்றனவோ, அதே காரணத்துக்காக இந்தியாவும் பாகிஸ்தானும் அபத்த கோஷங்களால் பிரிந்து போகாமல், சரித்திர — பொருளாதார யதார்த்த அம்சங்களின் மேல் ஒற்றுமை கொள்வதுதான் இயற்கையான முடிவு என்கிறார் ராஜாஜி. பரஸ்பர சந்தேகத்தின் மீது அநாவசியமாக இவ்விரு நாடுகளும் ஆயுதப் போட்டியில் ஈடுபடுவதைத் தவிர்த்துத் தங்களது பொதுப் பிரச்னைகளையும், பொது அபாயங்களையும் ஏகோபித்துச் சமாளிக்க வேண்டும். இதற்கு முதல்படியாக ஜம்மு — காஷ்மீரை 1947ம் ஆண்டுக்கு முன் இருந்தது போல் சுயாட்சிப் பொறுப்புள்ள நாடாக்கி, ஐ.நா.வின் கண்காணிப்பிலோ, அல்லது இந்தியா—பாகிஸ்தானின் கூட்டு சகாயத்தின் பேரிலோ அங்கு நிர்வாகம் நடைபெற வழி செய்ய வேண்டும் என்கிறார் ராஜாஜி. காஷ்மீர விஷயத்தில் இரு நாடுகளுமே சிறிது கூட விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. விட்டுக்கொடுக்க வேண்டுமென யோசனை கூறினால் அது தேசத் துரோகமாகக் கருதப்படும் ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது. என்றாலும் சென்று போனதை யெல்லாம் ஓரளவு மறந்து எதிர்காலத்தில் கவனம் செலுத்தினால் இவ்விஷயத்தில் இரு நாடுகளும் தங்கள் கொள்கையை இளக்கிக் கொண்டு, இணக்கம் காண வேண்டியதன் அவசியம் புலப்படாமலிராது. காஷ்மீரப் பிரச்னையை ஒருவாறு தீர்த்துக் கொண்டால் அதன் பின் இந்தியாவும் பாகிஸ்தானும் மேல் வல்லரசுகளின் உதவியுடன் கூட்டு ராணுவப் பாதுகாப்பு அமைத்துக் கொள்வது சாத்தியமாகும். அப்போதுதான் சீனாவும் சரி, வேறெந்த நாடும் நம்மீது கைவீச அஞ்சும். பதினாறு ஆண்டுகளுக்கு முன் இந்தியாவும் பாகிஸ்தானும் அந்நியர்களிடமிருந்து பெற்ற சுதந்திரம் அப்போதுதான் ஸ்திரமாகும்.

காமராஜின் யோசனை


பதவியில் உள்ள பெரும் காங்கிரஸ் தலைவர்கள் பதவியைத் துறந்து காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்த வேண்டும் என்று தமிழக முதன் மந்திரி ஸ்ரீ காமராஜ் அவர்கள் தெரிவித்த யோசனையைப் பற்றிப் பலவிதமான கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. ஆனால் இந்த யோசனையில் உள்ளடங்கியுள்ள உண்மையான ஆபத்தைப் பலரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

காங்கிரஸ் கட்சி வேறு, அரசாங்கம் வேறு என்ற பாகுபாட்டை ஆட்சியாளர்கள் என்றுமே வரையறை செய்து பின்பற்றியதில்லை. இதனால் ஏற்கனவே பாமர மக்கள் குழம்பிப்போய் காங்கிரஸ் கட்சிதான் அரசாங்கம் என்று பிரமை கொண்டிருக்கிறார்கள். ஸ்ரீ காமராஜின் யோசனை அமுலானால் இந்தக் குழப்பம் மேலும் வலுவாகும். இன்று வரை ஆட்சி பீடத்தில் அமர்ந்த

காங்கிரஸ் கட்சியின் பரிணாமம்!



இறங்கித் தள்ளுங்கள்!



உத்தரவுகளைப் 'பிறப்பித்து வரும் தலைவர்கள் நாளைக்கு ஸ்தாபன நிர்வாகத்தில் மட்டும் செயல் புரிவதாகச் சொல்லிக்கொண்டாலும், பொதுமக்களுக்கு யார் ஆட்சித் தலைவர், யார் கட்சித் தலைவர் என்ற வித்தியாசமே விளங்காமல் போகும். பொது மக்கள் என்ன, போலீஸாரும் ராணுவத்தினரும் கூட கட்சித் தலைவர்களைக் கண்டவுடன் ஸல்யூட் வைப்பார்கள். உண்மையாகவே ஆட்சியிலிருந்து வெளியேறும் தலைவர்களும் நிர்வாகத்தில் குறுக்கிட்டபடிதான் இருப்பார்கள். ஏனெனில் முக்கியமான தலைவர்கள் பதவியிலிருந்து விலகியபின் ஆட்சிப் பொறுப்பேற்கும் இரண்டாந்தரத் தலைவர்கள் அவர்களைத்தானே ஒவ்வொரு முடிவுக்கும் எதிர்பார்த்து வருவார்கள்! தாங்கள் வெளியேறிய பின் சூத்திரப் பாவையாக ஆட்டிவைக்கக்கூடிய கையாட்களை இப்போதே சில முதன் மந்திரிகள் தயாரித்து வைத்து விட்டனர். அப்படித் தயாரித்து வைக்காததால்தான் சில முதன் மந்திரிகள் இன்னமும் பதவியிலிருந்து விலகச் சுணங்குகிறார்கள். பதவியிலிருந்து விலகிய உயர் அதிகாரிகள் தொழிலகங்களில் வேலைக்கமர்ந்து தங்கள் நிறுவனத்துக்குச் சர்க்கார் சலுகைகள் பெற்றுத் தருவதாகச் சமீபத்தில் பிரதமர் காரசாரமாகக் கண்டனம் தெரிவித்தார். பதவியிலிருந்து விலகியும் மந்திரி சபைகளை மேய்க்கப் போகிற தலைவர்கள் இதைவிடப் பெரிய அந்தம் விளைவிக்கப் போகிறார்கள். வெளிப் பார்வைக்கு ஏதோ நிர்வாகம் என்றும் ஸ்தாபனம் என்றும் வெவ்வேறாகச் செயலாற்றுவதாக வேஷம் போட்டாலும் நாளுக்கு நாள் இரண்டும் அத்வைதமாக ஐக்கியமாகிவிடும். சீனா, ஸோவியத் தர்பார்கள் இந்தியாவிலும் நடைமுறையாகும். இந்தத் தர்பாரின் உச்சியில் இன்று போல் என்றுமே நேருஜி இருக்கப் போகிறார் என்பதால் நிர்வாகத்தில் பெரிய மாறுதல் எதுவும் ஏற்பட்டுவிடாது.

இன்னொரு விஷயத்தையும் கவனிக்க வேண்டும். கட்சியைப் பலப்படுத்துவது என்ற ஒரே காரணத்துக்காகப் பல மந்திரிகள் ராஜிநாமா செய்வதென்பது சட்டசபையையும் பாராளுமன்றத்தையும் அவமதிப்பதற்குச் சமமாகும்; நாட்டின் நிர்வாகத்தை விடக் கட்சியின் யோக க்ஷேமமே பெரிதாக எண்ணிச் செய்யப்பட்ட ஆலோசனை இது. 'காங்கிரஸ் கட்சி விஷயம்' என்று இதைச் சொன்னாலும் இதில் உள்ளடங்கியுள்ள ஏககட்சி ஏகாதிபத்தியக் கருத்தை உணர்ந்து எதிர்க் கட்சியிலுள்ள ராஜாஜி இவ் விஷயத்தை வன்மையாகக் கண்டிக்கிறார். மக்கள் யாவரும் கண்டிக்கவேண்டிய திட்டம் இது.

காங்கிரஸ் ஆட்சியா? கம்யூனிஸ்ட் ஆட்சியா?

"விஷயம் தெரியக்கூடிய சட்ட அறிஞர்களுக்குக் கிளர்ச்சி செய்யக் கூடிய திராணியில்லை. கிளர்ச்சி செய்யக்கூடிய பொதுமக்களுக்கு (என்ன ஆபத்து வருகிறது என்ற) விஷயம் அறியக் கூடிய படிப்பில்லை. இதுதான் நாட்டில் நிலவும் பரிதாப நிலைமை!" என்று சென்ற வாரம் ராஜாஜி பெங்களூரில் சுதந்திரக் கட்சியின் சார்பில் நடைபெற்ற பதினேழாவது அரசியல் சாஸனத் திருத்தப் பிரேரணை எதிர்ப்பு மகாநாட்டில் கூறினர்.

இந்த மசோதாவின் வரலாற்றைச் சற்றுப் பார்த்தால் இதில் உள்ள வயிற்றெரிச்சல் புரியும்.

கேரளத்தில் கம்யூனிஸ்ட் ஆட்சி நிலவியபோது இதேபோல் சிறு நிலச்சுவான்தார்களை அழித்து விடக் கூடிய ஒரு மசோதா கொண்டு வந்தார்கள். அதை ஆட்சேபித்து அன்று எதிர்க் கட்சியிலிருந்த காங்கிரஸ்காரர்கள் பெரும் கிளர்ச்சி செய்தார்கள். கேரள கம்யூனிஸ்ட் ஆட்சி ஒழிக்கப்பட்டு காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டது. அந்தக் காங்கிரஸ் ஆட்சியில் முன்பு எந்த நிலச் சட்டத்தை எதிர்த்தார்களோ, அதே மாதிரியான சட்டத்தை — நிலச்சுவான்தார்களின் வாழ்க்கையை நாசமாக்கும் சட்டத்தை— கொண்டு வந்து நிறைவேற்றினர்கள். இதை ஆட்சேபித்துச் சிலர் வழக்காடினர்கள். கேரள நீதி மன்றமும் டில்லி உயர் நீதி மன்றமும் சிலவகைப்பட்ட நிலச்சுவான்தார்களை இந்தச் சட்டம் பாதிக்காது என்று அரசாங்கத்துக்கு எதிராகத் தீர்ப்புக் கொடுத்தன. இப்போது, அந்த உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பைச் சூனியமாக்குவதற்காக மத்திய அரசாங்கம், அரசியல் நிர்ணயச் சட்டத்தில் மக்களுக்கு அளிக்கப்படும் ஜீவாதார உரிமையையே மாற்றி விட்டது. இந்தியாவில் எல்லாப் பிரதேசங்களிலும் குடியானவர்கள் தங்கள் நிலங்களை இழக்கும் வழியில் இந்தப் பதினேழாவது திருத்தப் பிரேரணையைக் காங்கிரஸ் ஆட்சியினர் கொண்டு வருகிருர்கள்.

கேரளத்தில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் சர்க்கார் செய்ய வந்த நிலச் சீர்திருத்தம் கேரள ராஜ்யத்துடனவது நின்றிருக்கும். அதை ஆட்சேபித்த காங்கிரஸ் இன்று தேசம் முழுவதற்கும் அதே கபளீகரத் திட்டத்தைக் கொண்டு வருகிறது. கம்யூனிஸ்ட் கொள்கை காங்கிரஸ் போர்வையில் எவ்வளவு வெற்றிகரமாகச் செயல்படுகிறது என்பதைக் கவனியுங்கள்.

இந்தப் பதினேழாவது திருத்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டால் மக்களுடைய சுதந்திர வாழ்வின் வேரைக் கெல்லி வெந்நீர் ஊற்றியதாகும்.

இதைச் சிறிது சட்ட ஞானம் உள்ளவர்களும் அறிவார்கள்! அவர்கள் சும்மா இருப்பது அபாயம்.

விநோத வரிச் சலுகை!

ஒரிஸ்ஸாவின் முன்னுள் முதன் மந்திரியாக இருந்தவரும், காந்தியடிகளின் பக்தரும், சர்வோதயத் தலைவருமான ஸ்ரீ நபா கிருஷ்ண சௌத்திரி அவர்கள் வெளியிட்டுள்ள ஒரு தகவல் நம்மைத் தூக்கிவாரிப் போடுகிறது.

காங்கிரஸின் தேர்தல் நிதிக்காகத் தொழில் துறையினரிடமிருந்து வரம்பின்றி நிதி வசூலிப்பதைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள அவர் இப்படிக் கட்சிக்கு உதவுபவர்களிடமிருந்து சர்க்கார் கஜானுவுக்குச் சேரவேண்டிய வரிப் பணத்தில் பெரும் பங்கை ஆட்சியாளர்கள் மனமறிந்து விட்டுக் கொடுக்கும் அநியாயத்தைக் குறிப்பிட்டிருக்கிறார். காங்கிரஸுக்கு நிதியளிப்பவர்களும், பெறுபவர்களும் சரிவரக் கணக்குகள் வைத்துக் கொள்வதில்லை. அதோடு, சரியாகக் கணக்கு வைத்துக் கொள்ளாத 'அபிமானி'களைச் சர்க்கார் கண்டிப்பதோ, தண்டிப்பதோ இல்லை. காங்கிரஸ் பணப் பெட்டிக்கு ஒரிஸ்ஸா வியாபாரிகள் சிலர் பன்னிரண்டு லட்சம் ரூபாய் வழங்கிய காரணத்துக்காக அவர்களிடமிருந்து ஒரிஸ்ஸா சர்க்கார் 30 லட்சம் ரூபாய்தான் வரி வசூலித்தார்கள். இதே வியாபாரிகளிடமிருந்து ஸ்ரீ நபாகிருஷ்ண சௌத்திரி முதன் மந்திரியாயிருந்த போது தொண்ணூறு லட்சம் ரூபாய் வரி வசூலித்தாராம்.

இதைப் போன்ற முறைகேட்டையும், ஒழுங்கீனத்தையும் செய்யும் ஆட்சியாளரை வேறெந்த நாடேனும் சகித்துக் கொண்டிருக்குமா?

என்ன சேதி?

ஆந்திர மந்திரியின் ஆத்திரம்

சமுதாய நலத் திட்ட மந்திரி ஸ்ரீ எஸ். கே. தே சென்ற வாரம் ஹைதராபாத்துக்கு வந்தபோது, சிலர், சமுதாய நலத் திட்ட பிளாக்குகளைத் தாலூக்கா வாரியாகப் பெரிய அளவில் அமைக்க வேண்டும் என்று ராஜ்ய சர்க்கார்கள் விரும்புவதை அவர் அங்கீகரிக்கிறாரா என்று கேட்டதற்குத் தாம் அதை அங்கீகரிக்கவில்லை என்றும் ராஜ்ய சர்க்கார்களும் அவற்றின் கருத்தை மாற்றிக் கொண்டுவிட்டன என்றும் கூறினார்.

அங்கிருந்த சமுதாய நலத் திட்ட ஆந்திர ராஜ்ய மந்திரி ஸ்ரீ சென்னா ரெட்டி தாம் அப்படியொன்றும் தம் கருத்தை மாற்றிக் கொண்டுவிடவில்லை என்று மத்திய மந்திரியின் முகத்தில் அடித்தாற் போல் சொல்லிவிட்டார்.

ராஜ்ய சர்க்கார்களுக்கும் மத்திய சர்க்காருக்கும் இந்த விஷயம் செய்யும் துறையிலேயே இத்தகைய அபிப்பிராய ஒற்றுமை நிலவுகிறது! இந்த நிலையில் — இத்திட்டம் படு ஊழல் என்று பகிரங்கமாகக் கூறிவிட்ட பின்னும் விடாப் பிடியாக நடத்துவானேன்! மக்களின் பணத்தை வீணடிப்பானேன்?

"அழுக்கைக் கழுவாதீர்!"

காங்கிரஸ்காரர்கள் தங்களுக்குள் ஏற்பட்டுள்ள உட்பூசல்கள் காரணமாக ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களின் தவறான செயல்களை அம்பலப்படுத்தி வருகிறார்கள் அல்லவா? இதைக் காணக் காண ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரி அவர்களுக்கு பயம் பொத்துக்கொண்டு வருகிறது. "இப்படிச் சண்டை பிடித்துக்கொண்டு நம் ஊழல்களையெல்லாம் பகிரங்கப்படுத்தாதீர்கள்!" என்று அவர் உத்தரவிட்டிருக்கிறார்.

அழுக்கையும் வியாதியையும் மூடி மூடி வைத்துக் கொண்டிருந்தால் அதனால் தீமைதான் அதிகமாகும். காங்கிரஸைப் பற்றிக்கொண்டுள்ள அழுக்கைப் பொதுவில்தான் கழுவியாக வேண்டும். ஏனெனில் இன்று காங்கிரஸ் தனியொரு கட்சி மட்டுமல்ல; அதுவே ஆளும் கட்சியுமாகும். நாட்டை ஆள்வதால் அந்தக் கட்சியினருக்குக் கிடைத்துள்ள ஆதாயங்களைப் பெறுவதில் கட்சிக்காரர்களுக்குள் ஏற்பட்டுள்ள போட்டிதான் உட்பூசலின் முக்கியமான காரணம். மக்கள் தங்கள் வரிப் பணத்தைப் பெற்று ஆள்கிறவர்களைப்பற்றிய எல்லா உண்மையையும் அறிந்தே ஆகவேண்டும். எனவே லால் பகதூரின் வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல், காங்கிரஸ்காரர்கள் இன்று போல் என்றும் தங்களுக்குள் சண்டைபிடித்துக்கொண்டு மக்களுக்குத் தங்களின் சுயரூபத்தை நன்றாக வெளிப்படுத்தி வரவேண்டுமென விரும்புகிறோம்.


அட்டைப் பட விளக்கம்


வினை தீர்க்கும் விநாயகன்

விநாயக சதுர்த்திக்கு முன்பு வெளியாகும் இவ்விதழட்டையில் கல்கிப் பத்திரிகையின் இஷ்ட தெய்வமான ஆனைமுகன் திவ்விய தரிசனம் தருகிறான். வாதாபியில் வாழும் இந்த விக்கின ராஜனை இங்கு வண்ணத்தில் அளித்திருப்பவர் ஓவியர் மணியம். வண்ணத்தில் காணும் வாரணமுகனை நம் எண்ணத்திலும் இருத்திக் கொள்கிறோம். ஜீவகோடிகளின் உட்பகை, வெளிப் பகைகளை மாய்த்துக் காக்கும் பெருமான் நாட்டுக்கு நேர்ந்துள்ள உட்பகை, வெளிப்பகைகளையும் நீக்கித் தர வேணுமென்பதே இன்று நம் பிரார்த்தனை.

இறைவி இறைவன் இரண்டும் ஒன்றாகித்
தாயாய்த் தந்தையாய், சக்தியும் சிவனுமாய்
உள்ளொளியாகி உலகெலாம் திகழும்
பரம்பொருளேயோ! பரம்பொருளேயோ!
வேண்டாதனைத்தையும் நீக்கி
வேண்டியதனைத்தும் அருள்வதுன் கடனே!

என்று கரிமுக வரதனை — கலியுக வரதனை — வேண்டிக் கொள்கிறோம்.





பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு
பிரைவேட் லிமிடெட்

"பாலுஸேரி பில்டிங்ஸ்"

3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி
தபால் பெட்டி நெ. 414. மதராஸ்-5
தந்தி: 'EVERMANS' போன்: 85834

சரக் கடைசி தேதி 22-8-1963 ... முதல் ஏலத் தேதி 24-8-1963

25 மாதங்கள்	மாதாந்திரச் சீட்டுகள் (4-வது சனிக்கிழமை ஏலங்கள்)	25 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
B	ரூ. 100/-	ரூ. 2,500/-	E	ரூ. 20/-	ரூ. 500/-
C	ரூ. 50/-	ரூ. 1,250/-	F	ரூ. 15/-	ரூ. 375/-
D	ரூ. 25/-	ரூ. 625/-	G	ரூ. 10/-	ரூ. 250/-

40 மாதங்கள் — நீண்டகால ஏலச் சீட்டுகள் — 40 அங்கத்தினர்கள்

ஏலத் தேதி பின்பு அறிவிக்கப்படும்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
B	ரூ. 250/-	ரூ. 10,000/-

விலாசம் தெளிவாக எழுதிக் கேட்பவர்களுக்கு எங்கள் விதிகள் இலவசமாக அனுப்பப் படும். சீட்டில் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளும் உரிமை பண்டைச் சேர்ந்தது.

(போர்டார் உத்திரவுப்படி) எம். வி. சுப்ரமணியம், மானேஜிங் டைரக்டர்

இதர கிளைகள்: புது டெல்லி * பம்பாய் * பெங்களூர் * கல்கத்தா

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை

எடின்பரோ கலை விழா





டாக்டர் நாராயண மேனன்




சித்திரப் பிரசித்தியும், சௌந்தரியமும் வாய்ந்த எடின்பரோ நகரத்தில் இந்த ஆகஸ்ட் பதினெட்டாம் தேதியிலிருந்து செப்டம்பர் ஏழாம் தேதி வரை எடின்பரோ சர்வ தேச விழாவின் பதினேழாவது ஆண்டு வைபவம் நிகழ்கிறது. எடின்பரோ மாநகராட்சி, பிரிட்டிஷ் கலைக் குழுவின் ஸ்காட்டிஷ் கமிட்டி (Scottish Committee of the Arts Council of Great Britain) பிரிட்டிஷ் கவுன்சில் இவற்றோடு சேர்ந்து எடின்பரோ விழாச் சங்கத்தினர் இத்திருவிழாவை நடத்துகிறார்கள். நமது மேயருக்குச் சமமான எடின்பரோவின் 'ப்ரவோஸ்ட்' (Lord Provost) விழாச் சங்கத்தின் தலைவர். தற்போது அதன் கலை நிர்வாகி (Artistic Director) ஹார்வுட் பிரபு அவர்கள்.

விழா நிர்வாகத்தினரின் வார்த்தைகளில் இந்த விழாவின் நோக்கம்; சர்வதேசிய நல்லெண்ணத்தையும் நட்பையும் வளர்க்கத் தொண்டு புரிவதாகும். 'சர்வ தேசிய' என்ற சொல்லை இவ்வளவு காலமாகப் பயன்படுத்தி வந்தாலும், இதுவரை விழாவின் எல்லை ஐரோப்பா, அமெரிக்கா இவற்றை அதிகமாகத் தாண்டிச் செல்லவில்லை. அவ்வப்போது ஒரு சில ஆசியக் கலைஞர்கள்—சில இந்திய நடனக் குழுக்கள் கூட — எடின்பரோ விழாவில் பங்கு கொண்டதோடு சரி. ஆனால் இம்முறை நடக்கும் பதினேழாவது விழா உண்மையாகவே சர்வ தேசியமானது. முதன் முறையாக மேல் நாட்டு சங்கீதம், நாட்டியம் இவற்றுக்கு மாற்றான கலைப் பண்புடைய ஒரு நாடு பெரும் அளவில் பங்கு கொள்ளுமாறு திட்டமிட்டுள்ள விழா இதுவே. அந்த நாடு பாரதமே. இதற்குக் காரணம் நிர்வாகி ஹார்வுட் பிரபு இந்தியக் கலைகளில்

மேலே: எடின்பரோ கலை விழாவின் ராணுவ அணிவகுப்பையும், விழா நிர்வாகி ஹார்வுட் பிரபுவையும், விழாச் சின்னத்தையும் காணலாம். கீழே: ஹெப்ஸிபா மெனுஹின் (பியானோ), யெஹூதி மெனுஹின் (வயலின்), லோரின் மேஜல் (பி. பி. ஸி. ஆர்க்கெஸ்ட்ரா)







கொண்டுள்ள ஆழ்ந்த ஊக்கமும், உற்சாகமும்; யெஹூதி மெனுஹின் போன்ற இந்தியாவின் நண்பர்கள் காட்டிய ஆவலும், ஆதரவும், ஆர்வமும்; இவற்றோடு பாரத சர்க்கார் விழாவில் கலந்து கொள்ளும் கலைஞர்களில் சிலருடைய பிரயாணச் செலவுக்குத் தாராளமாக நிதி வசதி தந்துள்ளதையும் குறிப்பிட வேண்டும்.




இந்தியக் கலைஞர்களை அறிமுகம் செய்யும் நாராயண மேனன்

எடின்பரோ சர்வதேச விழாவில் இசைக்கும், நாட்டியத்துக்கும் தான் முதல்முக்கியத்துவம். எனினும் சிறிது காலமாகப் பிரதானமான எல்லாக் கலைகளுக்கும் பங்கு தர வேண்டும் என்ற நோக்கோடு, சங்கீதம், பாலே நடனம் இவற்றோடு நாடகம், திரைப்படம் முதலிய காட்சிக் கலைகளும் இடம் பெறுமாறு விழாவின் நோக்கம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டு விழாவில் புகழ்பெற்ற ஏழு தொகையிசை கோஷ்டிகள் (Symphony Orchestra) பங்கு பெறுகின்றன. இவற்றில் இங்கிலாந்து வானொலியான பி. பி. ஸி. ஸிம்ஃபனி ஆர்க்கெஸ்ட்ரா, லண்டன் ஸிம்ஃபனி ஆர்க்கெஸ்ட்ரா, ஹாலந்தைச் சேர்ந்த கான்ஸெர்ட்கிபூ ஆர்க்கெஸ்ட்ரா ஆகியன குறிப்பிடத் தக்கவை. பொது மேடைக்காக அன்றி இல்லங்களுக்கு எடுத்த சேம்பர் சங்கீதக் குழுக்கள் பலவும் விழாவில் கலந்து கொள்கின்றன. மேலும் தனிக் கச்சேரியில் பிரக்யாதிபெற்ற யெஹூதி மெனுஹின், ஹெப்ஸிபா மெனுஹின், ஐஸாக் ஸ்டெர்ன், பெஞ்சமின் பிரிட்டன், பீட்டர் பியர்ஸ், ஜூலியன் பிரீயாம், வாரி ஆட்லர் ஆகிய பலரும் பங்கு பற்றுகிறார்கள். ஆபரா எனப்படும் சங்கீத நாடகத்துக்கு நேபிள்ஸைச்சேர்ந்த ஸான் கார்லோஸ் ஆபரா, இங்கிலிஷ் ஆபரா குரூப், புடாபெஸ்ட் ஆபரா பாலே ஆகியன பிரதிநிதித்துவம் தாங்குகின்றன. ஸ்டட்கார்ட் ஸ்டேட் தியேட்டர் பாலே குழுவும், மார்தா கிரஹாமின் நாட்டிய சங்கமும் பாலே ஆடல் வழங்குகின்றன. ஐரோப்பிய நாடகங்களில் தொன்மையாக நிலை பெற்றவற்றிலிருந்தும் நவயுக பரீட்சார்த்தமுறை நாடகங்களிலும் பலவற்றை ஆறு குழுவினர் நடித்துக் காட்டுகிறார்கள். சர்வ தேச திரைப்பட விழாவொன்றும் அங்கம்பெறுகிறது. மாடிக்லியானி, ஸூடீன் ஆகியோரின் சிருஷ்டிகள் ஒரு கலைக் காட்சியாக வைக்கப்படுகின்றன. நாடகத்தைப் பற்றி ஒரு மகாநாடு நடைபெறுகிறது. 'டாட்டூ' எனப்படும் ராணுவ அணிவகுப்பு ஊர்வலமும் நிகழ்கிறது. மற்ற சுவாரஸ்யமான நிகழ்ச்சிகளில் ஸ்காட்லண்ட் விளையாட்டுக்களைக் குறிப்பிட வேண்டும். எடின்பரோ நகரத்தில் உள்ள பிரசித்தி பெற்ற பூங்காக்களுக்குக் கலைஞர்கள் செல்ல வசதி செய்திருப்பதும் ரஸமான பல அநுபவங்களைத் தரும்.





ரவிசங்கர் (ஸிதார்)

அலி அக்பர்கான் (ஸரோட்)



அல்லா ரக்கா (தபேலா)



பாலக்காடு ரகு

இந்தியாவின் பங்கைப் பற்றிச் சொல்ல வேண்டுமல்லவா? சாஸ்திரீய சங்கீதக் கச்சேரிகள் ஆறு நடைபெறுகின்றன. ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் இரண்டு கச்சேரி செய்கிறார். அலி அக்பர் கான் ஒரு கச்சேரி செய்கிறார். ஸ்ரீரவிசங்கர் ஒரு கச்சேரிசெய்கிறார். அலிஅக்பரும், ரவிசங்கருமாகச் சேர்ந்து ஒரு கச்சேரி செய்கிறார்கள். கடைசியாக, தாள வாத்தியக் கச்சேரி ஒன்றும் நடைபெறுகிறது. இதில் ஸ்ரீமான்கள் பாலக்காடு ரகு, டி. கே. மூர்த்தி, ஆலங்குடி ராமச்சந்திரன், டி. ரங்கநாதன், அல்லா ரக்கா ஆகியோர் பங்கெடுத்துக் கொள்கிறார்கள். இந்தக் கச்சேரியில் ஸ்ரீ டி. விசுவநாதன் வேணுகானம் செய்கிறார்.

எடின்பரோ சர்வதேச விழாவில் ஸ்ரீமதி பாலசரஸ்வதி எட்டு பரதநாட்டியக் கச்சேரிகள் செய்கிறார்.

'இந்தியக் கலையின் இசையும், ஆடலும்' என்பது குறித்துக் கண்காட்சியொன்று நடைபெறுகிறது. இந்தக் கண்காட்சியானது சங்கீதம், சிற்ப சித்திரம், நாட்டியம் இவற்றுக்குள் உள்ள எந்த இணைப்பை இந்திய மரபு எப்போதுமே போற்றி வந்திருக்கிறதோ, அந்த இணைப்பை அற்புதமாக விளக்கி, புதியதொரு அநுபவத்தை உண்டாக்கும். இசை ஒலி, சங்கீத வாத்தியங்கள் இவற்றின் நாதகோஷத்துடன் மாறுவேஷங்கள், புகைப்படங்கள், சிற்பங்கள், சித்திரங்கள் இவையும் இக்காட்சியில் நூதனமாக இணைந்து விளங்கும். இது இந்தியாவில் சிருஷ்டிகரமான கற்பனையை மலர்த்துவதற்கு ஒரு கதவைத் திறக்கும்.

இரண்டு விவாத நிகழ்ச்சிகளும் கலை விழாவில் இடம் பெறுகின்றன. இவற்றில் ஒன்றில் யெஹூதி மெனுஹினும் நானும் விழாவில் இந்தியக் கச்சேரி முறையின் பங்கினைவிளக்கிப் பேசுவோம். மற்ற விவாதத்தில் இந்திய சங்கீத வித்துவான்களும்மேனாட்டு இசைக் கலைஞர்களும் ஒன்றுசேர்ந்து இரு மார்க்கங்களுக்கும் பொதுவான அம்சங்களை விளங்கிக்கொண்டு ஆராய்வார்கள். இந்த விழாவுக்கென்றே வனராஜ் படியா என்ற இளம் இந்திய சாகித்திய கர்த்தா எழுதியுள்ள நூலும் இரண்டாம் விவாதத்தில் இடம் பெறும்.

இந்தியர்களை விசேஷமாகக் கவரக் கூடிய மற்ற நிகழ்ச்சிகளில் ஒன்று ஸத்ய ஜித்ராயின் 'மஹா நகர்' என்ற புதிய படமாகும்.

அமைதியும் கௌரவமும் நிரம்பிய எடின்பரோ நகரம் மூன்று வாரங்களுக்கு விழாக் கோலம் பூண்டு ஆனந்தமாக ஆடிப் பாடப் போகிறது! எடின்பரோ விழா என்பது சங்கீதக் கச்சேரிகளையும், நடன நிகழ்ச்சிகளையும் கோத்த ஒரு சரம் மட்டும் அல்ல. விழா என்ற பதத்துக்கு லக்ஷணமாகக் களிப்பும் குதூகலமும் தருவன எவை உண்டோ அவை எல்லாம் நிரம்பிய நிகழ்ச்சி எடின்பரோ விழா. மொத்தம் ஆயிரத்துக்கு மேற்பட்ட கலைஞர்கள் இவ்விழாவில் பங்கு கொள்கிறார்கள். எல்லா வித மக்களையும் ஏதோ ஒரு முறையில் ஈர்க்கக்கூடிய பல காட்சிகள் மூன்று வாரங்களுக்கு இடையறாமல் நிகழும். இவ்வளவு மகத்தான அளவில், அதுவும் தேர்ந்த தரமான முறையில் ஒரு விழாவைத் திட்டமிடுவதும், திட்டமிட்டபடியே நடத்தி வைப்பதும் மாபெரும் செயலாகும். இப்படி நடந்து வெற்றி கண்டு வந்துள்ளது இவ் விழா. இந்த வெற்றிச் சிறப்பில் பெரும் பங்கு இவ் விழாவின் கலை நிர்வாகியான ஹார்வுட் பிரபுவின் தீர்க்க தரிசனம், செயல் திட்டம், நிர்வாகத் திறன் இவற்றையே சாரும்.

விசுவநாதன் (புல்லாங்குழல்)



ரங்கநாதன் (மிருதங்கம்)





போகிற போக்கில்..

உலகப் புகழ் படைத்த ஹாஸ்ய நடிகர் சார்லி சாப்ளின் ஒரு சமயம் ஐரோப்பா சென்றிருந்தார். ஒவ்வொரு ஊராகச் சுற்றிப் பார்த்து விட்டு ஒரு கிராமத்துக்கு அவர் வந்தபோது சுவையான நிகழ்ச்சி ஒன்று நடந்தது. கிராமவாசிகள் பலர் ஒன்றுகூடி சார்லி சாப்ளின் மாதிரி உடையணிந்து மேடைக்கு வந்து ஒரு வாக்கியம் பேசுவோருக்குப் பரிசு தருவதாக அறிவித்திருந்தார்கள். இதற்கென மாலையில் ஒரு போட்டியும் நடக்கப் போவதாக அந்த அறிவிப்பு கூறியது.

மாலையில் குறித்த இடத்துக்குப் போய்ச் சேர்ந்தார் சார்லி. இவரைப் போல் உடையணிந்திருந்த பலர் ஒவ்வொருவராய் மேடைக்கு வந்து நடித்தும் பேசியும் காட்டினார்கள். சார்லிக்கோ சும்மா உட்கார்ந்திருக்க முடிய வில்லை. இவரும் போட்டியில் கலந்து கொண்டார். இறுதியில் நீதிபதிகள் தம் தீர்ப்பை வெளியிட்டார்கள். அதில் யாருக்கு முதல் பரிசு கிடைத்தது தெரியுமா?

சார்லி மாதிரி வேஷம் அணிந்தவருக்கே கிடைத்தது. சார்லிக்கு அல்ல. அசலைவிட நகலுக்குத்தான் அதிக மதிப்பு. நகல் கொஞ்சம் எடுப்பாக இருந்து விட்டால் அசலையே மறந்து விடுவார்கள்.

இந்த அசல் — நகல் விவகாரம் இன்று டில்லியில் நடக்கும் கூத்துக்கு ரொம்பப் பொருத்தமானது. அரசியலமைப்பை 16 தடவை திருத்தியது போதாது என்று 17வது திருத்தம் என்று டில்லி புறப்பட்டிருக்கிறது. பதினைந்து ஆண்டுகளில் 17 தடவை திருத்தம் என்றால் இன்னும் கொஞ்ச நாளில் அசலே பறந்து விடும். திருத்தங்கள்தான் ''புது அமைப்பாக'' ஆகி விடும். பிறகு அதற்குப் பெயர் அரசியல் அமைப்பு என்றிருக்குமா அல்லது 'திருத்தமைப்பு' என்று நாமகரணம் சூட்டுவார்களா என்பது அவர்களுக்கே வெளிச்சம்! போகிற போக்கைப் பார்த்தால் வெள்ளி மூக்குகள் பஞ்ச கல்யாணிகளாகப் பெயர் மாற்றம் எடுத்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. சோஷலிஸ காலமல்லவா?

ஃ ஃ ஃ

இரும்பு மந்திரி திரு சுப்பிரமணியம் டில்லிக்குப் போனதிலிருந்து சில நல்ல கருத்துக்களைக் கூறி வருகிறார். சென்ற ஆண்டில் சர்க்கார் நடத்தும் தொழில்கள் ஆமை நடை போடுகின்றன என்று பேசினார். பலர் இதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டார்கள்; சிலர் புருவத்தை நெரித்தார்கள். இந்தச் சிலர் யாரென்று கூறத் தேவையில்லை.

இப்போது இன்னொரு பெரும் போடு போட்டிருக்கிறார். ''சிக்கலான கண்ட்ரோல்களைப் போட்டிருப்பதால் உற்பத்தி பெருக்கம் ஏற்பட வில்லை'' என்று பேசி யிருக்கிறார்.

இதைத்தான் நாட்டில் உள்ள நல்லறிஞர்கள் கூறுகிறார்கள். அவர்கள் கூற்றை வாயாரத் திட்டி வந்த காங்கிரஸார், தம்மில் ஒருவர், அதுவும் முக்கிய அமைச்சர் இப்படிப் பேசுவதைக் கண்டு என்ன சொல்லுவார்கள் என்று தெரியவில்லை.

திரு சுப்பிரமணியம் கூறுவது நூற்றுக்கு நூறு உண்மை. ஒவ்வொரு தொழிலதிபரும் விடிந்தால் என்ன கண்ட்ரோல் உத்தரவு வருகிறது என்று பயப்படுகிறார்கள். அவர்களின் நேரம் முழுதும் இந்தக் கண்ட்ரோலைச் சமாளிக்கவே போதவில்லை. இந்த நிலையில், உற்பத்திப் பெருக்குக்கோ, தொழிலபிவிருத்திக்கோ எப்படி யோசிப்பது? எப்படித் திட்டமிட்டு உழைப்பது?

இன்றுள்ள சட்டதிட்டப்படி ஒவ்வொரு தொழில்காரரும் டில்லி நோக்கி வாராந்தரம் அல்லது மாதாந்தரக் காவடி எடுக்க வேண்டும். டில்லி தேவதைகள் மனம் வைக்காவிட்டால் அவர்களால் எதுவும் செய்ய முடியாது. இதற்காகத் தொழில் ஸ்தாபனங்கள் எல்லாம் டில்லியிலும் ஒரு கிளையைத் திறந்து வைத்து ஆட்களை நியமித்திருக்கிறார்கள். இந்த ஆட்கள் தினமும் செக்ரிட்டேரியட் சென்று அங்குள்ள பெரிய பூசாரி, சின்னப் பூசாரிகளைத் தரிசித்து வரவேண்டும். இதில் சிறிது தவறினால்கூடக் காரியம் நடக்காது. இதில் ஏற்படும் செலவு கணிசமானது. இந்தக் கஷ்டத்தை அனுபவியாத தொழிலதிபரே இல்லை எனலாம்.

ஃ ஃ ஃ

பாரசீக வளைகுடாவில் புளியங்கொட்டை அளவில் ஒரு தேசம் இருக்கிறது. இதைக் குவைட் என்று அழைப்பார்கள். ஷேக் ஒருவர் ஆளுகிறார். இந்த ஷேக் ஆட்சி பற்றிப் பல கதைகள். இந்தக் கதைகளைக் கொண்டு இந்த ராஜ்யத்துக்கு இதுவரை மவுசு இருந்தது. இப்போது இன்னொரு மவுசு சேருகிறதாம். அதாவது இந்தியா இந்தத் தேசத்திடம் ஐந்து கோடிப் பவுன் கடன் கேட்டிருக்கிறதாம். இந்தத் தேசமும் இந்தக் கடனைத் தரப் போவதாக ஒரு செய்தி கூறுகிறது. இக்கடனுக்கு ஏற்பாடு செய்தவர் வெளிநாட்டிலாகா உதவி மந்திரி ஸ்ரீமதி லட்சுமிமேனனும்!

முன்பெல்லாம் திரு மொரார்ஜிதான் வெளிநாடுகளுக்குக் கடன் கேட்கப் போய் வந்தார். இப்போது ஸ்ரீமதி மேனனும் செல்வதிலிருந்து கடன் கேட்கிற வேலையை ஓர் இலாகா செய்தால் போதாதென இரு இலாகாக்கள் சேர்ந்து செய்கின்றன என்று தெரிகிறது. இந்த இரு இலாகாக்களோடு இது நிற்குமா அல்லது மூன்றாவது திட்ட முடிவுக்குள் எல்லா மந்திரிகளுமே இதில் ஈடுபடுவார்களா என்பது தெரியவில்லை. அப்படி ஈடுபட்டால் மந்திரி சபை முழுதுமே திருவோடு தூக்க ஆரம்பித்துவிடும். — சிட்டுக்குருவி





பெண்மணிகளும், சிறுமிகளும் தங்கள் வயதைக் குறைத்துச் சொல்வது வழக்கம் என்று ஆண்கள் பரிகாசம் செய்கிறார்கள்.

ஆனால் அந்த ஆண்கள் விஷயம் எப்படியோ?

இப்போது கல்யாணம் செய்து கொள்கிற பையன்களை அவர்களது வயதைப் பற்றி விசாரித்துப் பாருங்கள். 'இருபத்தெட்டு', 'இருபத் தொன்பதே கால்', 'இருபத்தொன்பதே முக்காலே மூணு வீசம்' இப் படித்தான் பதில் வரும். ஒருவருக்காவது முப்பது பிறந்திராது. இத் தனைக்கும் அவர்கள் பல பெரிய பரீட்சைகள் கொடுத்து விட்டுப் பிறகு உத்தியோகத்தில் அமர்ந்திருப்பார்கள். பத்துப் பன்னிரண்டு வருஷங்கள் 'ஸர்வீஸ்' ஆகி யிருக்கும். பென்ஷன் வாங்கிக்கொள்கிறதற்கு முன்னால் அதிக காலம் உத்தியோகத்தில் இருக்க ஆசைப்படுவார்கள். அதற் காக வேறு பிறந்த தேதியை நாலைந்து வருஷங்கள் தள்ளி எழுதிக் கொடுப்பார்கள்.

பெண்களுக்கு இந்தத் தில்லுமுல்லு காரியங்கள் எல்லாம் செய்யத் தோன்றவே தோன்றாது. சில பைத்தியங்கள் தங்கள் வயதை அதிக மாகவே சொல்லிக் கொள்கின்றன.

உமாவுக்கு அடுத்த மாதம் கல்யாணம் நடக்கவிருக்கிறது. "ஏன், உமா! உனக்கு என்ன வயசாகிறது?" என்று பேச்சுவாக்கில் மெது வாக விசாரித்தேன்.

"எனக்கா, எனக்கா? இருங்கள் சொல்கிறேன்" என்று ஒரு நிமிஷம் யோசனை செய்து பார்த்தாள்.

"முப்பத்து மூன்றரையை எடுத்துக் கொள்ளுங்கள்!" என்றாள்.

"எடுத்துக் கொண்டேன்" என்றேன்.

"அதில் ஒரு ஐந்தைக் கழியுங்கள்!"

"ஐந்தையா? கழிக்கிறேன்....வந்து பாக்கி இருபத்தெட்டரை."

"அதுதான் என் வயசு" என்று உமா சிரித்துக் கொண்டே சொன்னாள்.

"இதென்ன கணக்கு உமா? எதற்காக முப்பத்து மூன்றரையை எடுத்துக் கொள்கிறதாம்?" என்று கேட்டேன்.

"அதுதான் அவர் வயசு!"

"எவர்?"

"அவரேதான். என்னைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகி றவர்....." என்று தலையைக் குனிந்து கொண்டு வெட்கப்பட்டுக் கொண்டு சொன்னாள்.

"சரி, அந்த ஐந்து?"

"கல்யாணப் பிள்ளைக்கும் பெண்ணுக்கும் வயசு வித்தியாசம் ஐந் துக்கு மேல் இருந்தால் இளப்பமாகப் பேசுவார்கள். அதற்காகத் தான் இப்படிக் கணக்குப் போட்டு..."

"உன் நிஜ வயசு என்ன?"

"இருபத்தைந்து. இந்த வயசைச் சொல்லவே எனக்கு வெட்கமாக இருக்கிறது. ஏதோ ஒன்றிரண்டு குறைந்திருந்தால் பெருமையாக இருக்கும். எனக்கு முப்பது ஆகவில்லையே என்றிருக்கிறது" என்றாள்.

"ரொம்ப அழகாக இருக்கிறது. காதலும் ஆசையும் இந்த இரண்டு மூன்று வயது வித்தியாசத்தைக் கணக்காகப் பார்த்துக்கொண்டுதான் ஏற்படுகிறதாக்கும். இப்படியே போனால், கொஞ்ச காலம் கழித்துப் பிள்ளைகளை விடப் பெண்கள் அதிக வயது சொல்லிக் கொள்கிறது 'பாஷனு'ம் விடப் போகிறது" என்றேன்.



கிழவிகள் தங்கள் வயதைக் குறைத்துச் சொல்வதில்லை. அதுவும் நூறு வயதுக்கு மேலானவர்கள் நூற்றுக்கு நூறு உண்மையைச் சொல்லிவிடுவார்கள். ஆந்திர ராஜ்யத்தில் நூறு வயதுக்கு மேற்பட்ட ஸ்திரீகள் 1481 பேர் இருக்கிறார்கள். சென்ற வாரம் ஆந்திர சட்ட சபையில் இந்தத் தகவலைத் தெரிவித்தார்கள். கிழவிகள் தங்கள் வயதைக் குறைத்துச் சொல்லாததனால் தானே இந்தப் புள்ளி விவரம் கிடைத்தது?

ஏன், பாரதத்திலேயே பெரும் தொழிலதிபர்களாகத் திகழும் பிர்லா சகோதரர்களது அன்னை ராணி யோகேஸ்வரி தேவி பிர்லாவும் நூறாண்டு நிறைவான வாழ்க்கை வாழ்ந்து சமீபத்தில் இறைவனடி சேர்ந்தவர்தாம். தமது கணவருடன் காசியில் வானப்பிரஸ்த வாழ்க்கை வாழ்ந்து வந்தார். கணவரது மறைவுக்குப் பின் ஏழை எளியவர்களுக்கு உதவி புரிந்த வண்ணம் ஆண்டவனது நினைவிலேயே லயித்து இருந்தார். எல்லாப் பிணிகளிலும் பெரிதான பசிப்பிணியை அகற்றுவதில் ஆனந்தம் கண்டார். கோடை, மழைக் காலங்களில் வாடும் எளியோர்களுக்குக் குடை வழங்கும் கொடைத்தன்மையை மேற்கொண்டார். இப்படியாக வாழ்வு முழுவதையும் நற்பணியில் அர்ப்பணித்த அவர் கடைசிவரை நல்ல நினைவுடனும் தர்ம சிந்தனையுடனும் வாழ்ந்ததில் வியப்பென்ன? பிர்லா சகோதரர்களுக்கு அன்னையின் பிரிவாற்றாமை தாளாதுதான் என்றாலும் பூர்ணாயுசு வாழ்ந்து அவர்களது வாழ்வுக்கு வழி வகுத்துத் தந்த அன்னையின் நினைவே அத்துயரை மறக்கவும் வழி காட்டுமல்லவா?

நூறு வயதுக்கு மேற்பட்டவர்கள் ரஷ்யாவில்தான் அதிகம். அங்கே 130, 140 என்று வயதானவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சஷ்டியப்த பூர்த்தி செய்து கொள்கிறதாயிருந்தால் ஆயுளில் இரண்டு மூன்று தரம் கூடச் செய்து கொள்ளும்படி இருக்கும்.

பழுத்த கிழமாகி விட்டால் கண், காது, மூளை மூன்றும் வேலை செய்வதில்லை. நடப்பதற்கும் முடியாது. இருந்தாலும் உயிருடனேயே இருந்து கொண்டிருக்க வேண்டும் என்ற ஆசை மட்டும் குறைவதேயில்லை.

ஒரு பாட்டி இருந்தாள். அவளுக்கு வாழ்க்கையில் அலுப்புத் தட்டிப் போய் விட்டது. ஒரு நாள் "தர்மராஜா! என்னை அழைத்துக் கொண்டு போக மாட்டாயா?" என்றாளாம். "இதோ வந்து விட்டேன். அழைத்துக் கொண்டு போகிறேன்" என்று யமதர்மனே வந்துவிட்டாராம். உடனே பாட்டி "உன்னை இல்லேடா, அப்பா! பக்கத்து வீட்டுத் தர்மராஜன் என்னை சினிமாவுக்கு அழைத்துக் கொண்டு போகிறேன் என்றான். அவனைக் கூப்பிட்டேன்" என்றாளாம்.

அதிக வயசு ஜீவித்திருக்கும் ஆசையைப் பற்றி இன்னொரு கதையும் சொல்வதுண்டு. ஒரு கிழவியின் பிரார்த்தனைக் கிணங்கக் கடவுள் அவள் முன்னால் ஆஜரானார்.

"ஒரே ஒரு வரம், ஒன்றே ஒன்று மட்டும் கேட்பாயாக!" என்று கடவுள் திருவாய் மலர்ந்தருளினார். அப்போது வரன் ரேஷன் செய்யப்பட்டிருந்தது போலும்!

கிழவி கேட்டாள்: "நான் ஓர் அரண்மனையின் ஐந்தாவது உப்பரிகையில் உட்கார்ந்து கொண்டு என் கொள்ளுப் பேரனது கொள்ளுப் பேரனுக்கு இருபத்து நாலு காரட் தங்கக் கிண்ணத்தில் பால் சாதம் வைத்துக் கொண்டு ஊட்ட வேண்டும்."

இதைக் கேட்டுக் கடவுள் மூக்கில் விரலை வைத்துக் கொண்டே, "அப்படியே அருளினேன். ஆனால் இருபத்திநாலு காரட் விஷயத்துக்கு நான் ஜவாப்தாரியல்ல" என்றாராம்.

நூறு வயதுக்கு மேற்பட்டவர்களில் எத்தனையோ மகத்தான காரியங்களைச் செய்தவர்களும் இருக்கிறார்கள். ஏழெட்டு வருஷங்களுக்கு முன்னால் பம்பாயில் அந்த நகரம் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்திருக்க வேண்டும் என்று ஒரு கிளர்ச்சி நடந்ததல்லவா? அப்போது சரஸ்வதி பாய் என்பவர் அதில் ஈடுபட்டார். அவருக்கு வயது 110.

அவர் பக்கத்தில் அவரைவிடச் சிறியவரான அதாவது 101 வயது ஆன ஓர் அம்மாளும் 62 வயதான 'கொள்ளு' நாட்டுப் பெண்ணும் சென்றார்கள்.

இப்போது வேண்டிய வைத்திய வசதிகள் இருப்பதால் நாம் நூறு வயது வரையோ, அதற்கும் அதிகமாகவோ ஜீவித்திருப்பது சுலபம். ஆனால், அதற்குப் பாலியத்திலிருந்தே உடம்பை நன்றாக வைத்துக் கொண்டு வர வேண்டும். ஏன், பிறப்பதிலிருந்தே கவனம் செலுத்த வேண்டும்.

குழந்தைகள் சுலபமாகப் பிறக்கச் செய்ய என்னென்ன முறைகளோ கண்டுபிடித்துக் கொண்டு வருகிறார்கள். ஆரம்பத்தில் பிரசவ வேதனையை உணராதிருப்பதற்காக மயக்க மருந்து கொடுக்கலானார்கள். குளோரோ

மில்லியன் கணக்கில் டாலர்களைச் சம்பாதிக்கும் ஒரு பிரபல அமெரிக்க நாவலாசிரியரைப் பத்திரிகை நிருபர் ஒருவர் பேட்டி கண்டார்.



"தங்களுடைய இலக்கியக் கற்பனைகளில் தலைசிறந்ததென்று தாங்கள் எதைக் கருதுகிறீர்கள்?"

நாவலாசிரியர் கணப்பொழுது கூடத் தாமதிக்காமல் பதிலளித்தார்: "நேற்றைய தினம் வருமான வரி இலாகாவுக்கு நான் அனுப்பிவைத்த கடிதமும் கணக்குகளும்!"

பார்ம், ஈதர். மூக்கில் காட்டும் மயக்க மருந்துகள் போன்ற இஞ்செக்‌ஷன் செய்து வருகிறார்கள்.

இப்போது டாக்டர் ஓ. எஸ். ஹேய்ன்ஸ் என்ற ஆஸ்திரேலியர் வேறு ஒரு புதிய முறையைக் கண்டுபிடித்திருக்கிறார்.

பிரசவிக்கவிருக்கும் ஸ்திரீ ஒரு நாற்காலியில் சாய்ந்து கொண்டு ஏதாவது ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கலாம். அதிக வேதனையின்றிக் குழந்தை பிறந்துவிடும்.

கர்ப்ப ஸ்திரீயை நாற்காலியில் உட்கார்ந்து கொள்ளச் சொல்லிக் கவசம் போன்ற ஓர் உடையை உடல் மேலே பொருத்துகிறார் அந்த டாக்டர். அது கழுத்திலிருந்து கால் வரை நன்றாக மூடிக்கொள்ளும். அது பிளாஸ்டிக்கினாலானது. அது கருங்காமலிருக்க அதற்குள் ஏதோ அட்டையை வைத்திருக்கிறார்.

போர்வை போன்றுள்ள இந்த உடைக்குள்ளிருந்து காற்று வெளியே போக முடியாது. வெளியேயிருந்து உள்ளேயும் வர முடியாது. தண்ணீர் அடிக்கும் பம்பு பார்த்திருப்பீர்களே, அதுமாதிரி ஒன்று உடைக்குள் பொருத்தப்பட்டிருக்கும். அதை இப்படியும் அப்படியும் அசைத்து வேலை செய்யச் செய்யும் பிடி மேற்பக்கம் இருக்கும்.

ஆடை, ஸ்திரீயின் கைகளை மூடிக்கொள்ளுவதாது. ஆகையினால் அவள் கைகளைத் தாராளமாக உபயோகிக்க முடியும்.

உடைக்கும் உடலுக்குமிடையே காற்று இருக்குமே, அந்தக் காற்று வயிற்றை அழுத்திக் கொண்டிருக்கும். ஸ்திரீ பம்பின் பிடியை ஆட்டினால் அந்தக் காற்று ஒரு குழாய் வழியாக வெளியேறி விடும். காற்று அழுத்தம் இவ்வளவு இருக்கும் வரை அடிக்க வேண்டும் என்பதைக் காண்பிக்க ஒரு மீட்டர் இருக்கிறது.

பிரசவிக்கவிருக்கும் ஸ்திரீ செய்ய வேண்டியதெல்லாம் டாக்டர் கூறும் கணக்குப் படி 'பம்பி'ன் பிடியை அசைத்துக் கொண்டிருக்க வேண்டியதுதான்.

வயிற்றில் ஏதோ வலிப்பது போன்றிருக்கும். இரண்டு மணி நேரத்தில் குழந்தை தானாகப் பிறந்துவிடும். இது எப்படிச் சாத்தியமாகிறது?

கர்ப்பப்பை என்பது அநேகமாக உருண்டையாக இருக்கும் ஓர் அவயவம். பிரசவத்தின்போது அது நன்றாக வேலை செய்ய வேண்டுமானால் அந்த உருண்டை வடிவத்துடனேயே இருக்க வேண்டும். ஆனால் பிரசவ சமயத்தில் வயிற்றின் தசைநார்கள் புடைத்துக்கொண்டுவிடும். அப்போது கருப்பப்பை அழுக்கப்படுவதால் அது தட்டையாகிவிடுகிறது. தசைநார்கள் புடைத்துக் கொள்வதும், கருப்பப்பை தட்டையாவதும்தான் தாங்க முடியாத வலியை உண்டாக்குகின்றன. ஆகவே, தசைநார்கள் புடைத்துக் கொள்ளச் செய்யாதிருந்தால் வலியும் அதிகமாக ஏற்பட முடியாதல்லவா?

இந்த வேலையைத்தான் பம்ப் செய்கிறது.

'பாலிவினைல் குளோரைட்' என்ற பெயருள்ள இந்தப் பிளாஸ்டிக் உடை, இந்த வைத்தியத்தைச் செய்து விடுகிறது.

இதை உபயோகிப்பதனால் பிரசவமாகும் குழந்தைகள், எந்த விதமான அங்கஹீனமும் இன்றிப் பலமாகவும் இருக்கின்றனவாம்.

குடும்ப அகராதி

அரச மரம்

கலியாணமான தினத்தன்றே சண்டை போட்டுக் கொண்டு பேச்சு வார்த்தை இல்லாத தம்பதிகள் இருவரும் அரச மரத்தை நூற்றெட்டு தரம் சுற்றி வர வேண்டும் என்று புராதன காலத்தில் தண்டனை விதித்திருந்தார்கள். அந்தத் தண்டனை முறை பிற்காலத்தில் இயற்கையையும், வைத்தியத்தையும் ஏமாற்றி விட்டுக் குழந்தை பிறக்கச் செய்து வரும் யுக்தியாக மாறியது. வருடா வருடம் வனமகோற்சவம் நடந்து வருவதால் பட்டுப் போன அரசஞ் செடியாவது சுற்றி வருவதற்கு எங்கேயாவது இருந்து கொண்டிருக்கும்.

அரிசி

நமது முக்கிய உணவு இது. பத்துப் பலம் பாதம்ஹல்வா, அரைப் படி பால் சாப்பிட்ட பிறகும்கூட அரிசிச் சாதம் ஓர் உருண்டையாவது உள்ளே சென்றால்தான் வயிறு நிரம்பியது போலிருக்கும்.

இதைக் களியாகக் கிண்டலாம், காயாகச் சமைக்கலாம், மல்லிகைப் பூவைப் போல் பக்குவமாகச் செய்யலாம். எல்லாம் சமைக்கும் பெண்ணின் சாமர்த்தியத்தையும் சாப்பிடுபவர்களின் 'அதிர்ஷ்ட'த்தையும் பொறுத்தது. ஈரல், குலைக் கட்டி வைத்தியர்கள் லட்சாதிபதிகளாவதற்காக அரிசிச் சாதத்தைக் குழந்தைகளுக்கு ஒரு வயது நிறையு முன்னமே — மூன்று மாதத்திலிருந்தே — வயிற்றில் திரப்பி வரலாம்.

இதன் விலை ஏறும்; ஆனால் இறங்காது. 'கிடைக்கும்', 'கிடைக்காது' 'ரேஷன்' என்ற வார்த்தைகள் இது சம்பந்தமாக அடிபட்டுக் கொண்டிருக்கும்.



எனக்கு ஒரே குஷி!

இனிமே க்ளாக்ஸோ—குழந்தைகளின்

உணவு—நிறைய கிடைக்குமாம்:

எல்லா ஊர்லேயும்

எல்லாக் கடையிலேயும்

நிறைய இருக்காம்.

"தாராளமாக் கிடைக்கும்"னு

அம்மாவே சொல்லிட்டா.

க்ளாக்ஸோ சாப்பிட்டு

பலசாலியா வளந்துடுவேன்.

ஆரோக்கியமாயும் இருப்பேன்.

எல்லாம் உங்களுக்கு தெரிஞ்சதுதானே?

அப்புறம் குஷிக்குக் கேக்கணுமா?

தாய்ப்பாலில் உள்ள எல்லா
நல்ல அம்சங்களும் க்ளாக்ஸோ
வில் இருக்கின்றன...ஆம்!
உங்கள் குழந்தை பலசாலியாக
வளர அவசியமான
யாவுமே உள்ளன. இலவசமாக
'க்ளாக்ஸோ குழந்தைப் புத்தகம்'
(தமிழ்) பெற விரும்புவோர்
(தபால் செலவுக்காக)
50 நயா பைசாவுடன்,
'க்ளாக்ஸோ, வுட்ஸ் ரோட்,
சென்னை-2' என்ற
விலாசத்திற்கு எழுதவும்.



Glaxo

க்ளாக்ஸோ—குழந்தைகளுக்கான மிகச் சரியான பாலுணவு.

GLY—I—TAM

அறிவுக் கனலே

மழைக் காலம் வந்தது.

அந்தக் காலத்தில் தக்ஷிணேசுவரத்து கங்கை மிகவும் உப்பேறிப் போவது வழக்கம். உடல்நிலை மிகவும் சீர்குலைந்து போயிருந்த ராமகிருஷ்ணர் அந்த நீரை உட்கொண்டால் மீண்டும் ரத்தக்கடுப்பு ஏற்படலாம் என்று அன்பர்கள் பயந்து விட்டனர்.

எனவே ராமகிருஷ்ணர் தாம் பிறந்த கமார்புகூருக்குக் கிளம்பினார் — ஹிருதயர், பைரவி பிராம்மணி ஆகிய இருவருடனும்.

பைரவி பிராம்மணி எங்கிருந்து வந்தாள் என்று வாசகர்கள் எண்ணலாம். ஆனால் இந்தச் சரிதத்தை அவர்கள் கூர்ந்து கவனித்தால், ராமகிருஷ்ணருக்குத் தந்திரப் பயிற்சியும் வைஷ்ணவ பாவ அப்பியாசங்களும் அளித்த பின்னும் பைரவி பிராம்மணி தக்ஷிணேசுவரத்தை விட்டகலவில்லை என்பதைக் காண்பார்கள். ஸ்வாமி தோதாபுரியின் கீழ் ராமகிருஷ்ணர் அத்வைதத்தை அப்பியசித்தபோதும் பைரவி தக்ஷிணேசுவரத்தில்தான் இருந்தாள். வெறுமனே இல்லை; வெந்து கொண்டிருந்தாள்.

தோதாபுரி பக்தியைப் புரிந்துகொள்ளவில்லை யென்றால், பைரவி அத்வைதத்தைப் புரிந்து கொள்ளவில்லை. ஞான மார்க்கத்தில் சென்றால், பக்தி குன்றிவிடும் என்று கூறி ராமகிருஷ்ணரைத் தடுத்தாள் அவள்.

ராமகிருஷ்ணர் சிரித்து ஒதுக்கினார் அவளது ஆட்சேபணையை.

அவர் சிரித்தாலும், அவளது உள்ளம் எரிந்தது. தன்னைத் தன் சிஷ்யன் புறக்கணிப்பதாகத் தவறாக எண்ணி நொந்தாள் அவள்.

அதிலிருந்து அவளது மனோபாவமே மாறத் தொடங்கியது.

சிஷ்யரிடம்தான் இழந்ததாக அவள் எண்ணிய மதிப்பை மற்றவர்களிடம் பெற வேண்டுமென விரும்பினாள். தான் அவதார புருஷர் ஒருவருக்கே உபதேசிக்க வந்த மகா குரு என்பதை நிலை நாட்டிக் கொள்ள முயன்றாள். சிறுமையும் பெருமையும், செருக்கும் இழிவு மனப் பான்மையும் மாறி மாறித் தோன்றி அவளை ஆட்டிப் படைத்தன. அவள்பாடுபட்டாள்; சுற்றியிருந்தவர்களையும் பாடுபடுத்தினாள்.

நல்லியல்புகளே உருவாக, பக்தியே உருவாக, வித்தையே உருவாக தக்ஷிணேசுவரத்துக்கு வந்த பைரவி பிராம்மணி எப்படியெல்லாம் மாறிவருகிறாள் என்பதையும் ராமகிருஷ்ணர் கவனித்துத்தான் வந்தார். பாபிகளும் வந்திருந்த வேண்டிய இடத்தில் உத்தம ஜீவன் ஒன்று தாழ்ந்து செல்வதை நினைந்து வருந்தத்தான் செய்தார். இதன் காரணத்தையும் அவர் நன்கு அறிந்திருந்தார். பைரவி பிராம்மணி தம்மிடம் கொண்டிருந்த அன்பு பாசமாகிவிட்டதுதான் காரணம் என்பதை அவர் தெற்றென அறிந்தார். தோதாபுரியோ, வேறு யாரோ தம்மிடம் பழகும் போது பைரவி பிராம்மணி தனது சொத்தைப் பிறர் அபகரிப்பதுபோலஉணரு



இருள் என்பதை ராமகிருஷ்ணர் புரிந்து கொண்டார்.

என்றாலும் புரிந்து கொள்ளாதவர் போலவே இருந்து வந்தார்.

தக்ஷிணேசுவரத்தில் நவச் செல்வரின் பக்கலிலேயே யிருந்தும் உள்ளச் செம்மை பெறாத இன்னொருவரும் உண்டு. ஆலய அர்ச்சகர்களில் ஒருவரான ஹலதாரியை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள். அவர்தான் அப்படிப் பக்குவம் பெறாமல் இருந்து வந்தவர். பைரவி பிராம்மணியைப் போல் ராமகிருஷ்ணரிடம் பாசம் படைத்தவரு மல்ல அவர். அசூயையே உருக்கொண்டவர் அவர். ராமகிருஷ்ணரிடம் மதுரா நாதரின் அன்பு வளருவதைக் காணக் காணத் தகித்து வந்தார் அவர். தோதா

அருட் புனலே!



புரி தக்ஷிணேசுவரம் வந்தபோதுகூட ஹலதாரி தக்ஷிணேசுவரத்திலேயே தான் இருந்தார். அவருடன் 'அத்யாத்ம ராமாயணம்' பற்றிச் சண்டப் பிரசண்டமாக விவாதிப்பார். சிறிது காலத்துக்குப் பின் மதுராநாதர் அவரை வேலை நீக்கம் செய்தார்.

ஹலதாரி வெளியேறிய பின் ஒரு நாள் ஏதோ பேச்சு வாக்கில் ராமகிருஷ்ணர் தம்மையு மறியாமல் மதுரா நாதரிடம் ஒரு சம்பவத்தைத் தெரிவித்தார். அதைக் கேட்ட மதுராநாதர் மனசு பதறி உள்ளம் செதறித் தவித்தார். ''ஆகா, அந்த மூர்க்கன் அப்படியா செய்தான்? அவனை....அவனை'' என்று என்றோ வெளியேறிவிட்ட ஹலதாரியைத் தண்டிக்கத் துடித்தார்.

ராமகிருஷ்ணர் சொன்ன விஷயம் இதுதான்: —

ஒரு நாள் அவர் நிஷ்டையில் இருந்தார். சுற்றுப்புறத்தில் யாருமே இருக்கவில்லை. இப்படியொரு சமயத்துக்காகக் காத்திருந்த ஹலதாரி ராமகிருஷ்ணரை அணுகினார்.

''பட்டாசாரியரே! மதுராநாத பாபுவை வசியப்படுத்த என்ன மந்திரம் போட்டீர்?'' என்று கேட்டார்.

ராமகிருஷ்ணர் வாய் திறக்கவில்லை.

அதே கேள்வியை மீண்டும் கேட்டார் ஹலதாரி.

அப்போதும் மறுமொழி இல்லை.

ஆத்திரமடைந்தார் ஹலதாரி.

''ஹூம். வாயால் கேட்டால் பதில் சொல்ல மாட்டீர். இப்போது சொல்லும்'' என்றபடியே ராமகிருஷ்ணரைச் சுழற்றிச் சுழற்றி உதைத்தார் அந்தப் படுபாதக மனிதர்.

அப்போதும் ராமகிருஷ்ணர் விடை ஏதும் கூறத்தான் இல்லை.

ராமகிருஷ்ணர் இச் சம்பவத்தைப் பற்றி மதுராநாதரிடம் தெரிவிக்கக்கூட இல்லை. வெகு நாட்களுக்குப் பின் அகஸ்

ரா. கணபதி



மாத்தாக இதைப் பற்றி அவர் பிரஸ்தாபித்தார்.

எங்கிருந்தோ எங்கோ வந்துவிட்டோமே! தக்ஷிணேசுவரத்திலிருந்து ராமகிருஷ்ணருடனும், ஹிருதயருடனும், பைரவியுடனும் கமார்புகூருக்குச் செல்வோம்.

கமார்புகூர் வாசிகள் ராமகிருஷ்ணரை அவரது கலியாணத்தையொட்டிப் பார்த்ததுதான். இப்போது ஒன்பது ஆண்டுகளாகி விட்டன. பார்க்காவிட்டாலும், அவரைப் பற்றி என்னென்னவோ கேட்டபடிதான் இருந்தார்கள். 'ஹரி ஹரி' என்று அவர் சேலை உடுத்திக் கொண்டு அலறுவதாகவும், 'அல்லா அல்லா' என்று லுங்கி அணிந்து கொண்டு அழுவதாகவும் கேட்டிருந்தனர். தங்கள் கதாயி எப்படி யெல்லாம் மாறிவிட்டாரோ என்ற வியப்புடன் தனியும், பிரஸன்னுவும், சுயாவிஷ்ணுவும், பைன் வீட்டுப் பெண்களும், இன்னும் குழந்தைப் பருவத்தில் அவருடன் கொஞ்சி விளையாடிய அந்த ஊரார் எல்லோரும் அவரை ஆவலாகச் சூழ்ந்து கொண்டனர். அப்போதிருந்த அதே குழந்தையாக அவர் சிரிக்கச் சிரிக்கப் பேசுவதைக் கேட்டு உள்ளம் நிம்மதி பெற்றனர். சாரதாமணியையும் கமார்புகூருக்கு வரவழைத்து மகிழ்வை நிறைவாக்கிக் கொள்ள அவர்கள் நினைந்தனர்.

ஜயராமவடியில் சாரதாமணி இப்போது பதினாலரை வயசுப் பெண்ணாக வளர்ந்திருந்தாள். அகத்துக்காரரை அவள் கடைசியாகப் பார்த்துச் சுமார் எட்டாண்டுகளாகியிருந்தன. அப்போது 'அகத்துக்காரர்' என்றால் என்ன என்றே தெரியாத நாள். இப்போது வெட்கமும் நாணமுமாகக் கணவரை அடைந்தாள் அவள். ஆனால் அவர் அவளைப் பார்த்த முதல் பார்வையிலேயே, குழந்தைப் பார்வையிலேயே மீண்டும் கணவன் - மனைவி நினைவை இழந்தாள்.

ராமகிருஷ்ணர் சந்நியாசம் பூண்ட போதிலும் வெளி உலகுக்கு நீண்ட காலம் வரை தம்மைச் சந்நியாசியாக அறிவித்துக் கொள்ளவில்லை என்றும், புறச் சின்னங்களில் சந்நியாச கோலத்தை ஏற்கவில்லை என்றுமே தெரிகிறது. தமது தாயாரின் மனம் நோகக் கூடாது என்பதற்காகவே அவர் இவ்வாறு இருந்திருக்கக் கூடும். இதனால் மற்றவர்களும் அவரைச் சந்நியாசியாக நினைக்கவில்லை. எனவேதான் கமார்புகூருக்குச் சாரதாமணி வரவழைக்கப்பட்டாள்.

சாரதாமணியைக் கண்டவுடன் அத்தத் தூய துறவிக்கு என்னென்ன எண்ணங்கள் தோன்றினவோ; அவ்வளவும் நமக்குத் தெரியாது. என்றாலும் 'இந்தக் குழந்தை நம்மை நம்பி வந்து சேர்ந்து விட்டது. இதன் மனசை முறித்து இப்போது திருப்பி அனுப்பக் கூடாது! என்னைவிடப் பதினெட்டாண்டு சிறிய இந்தப் பெண்ணுக்கு நான் தந்தையுமாயிருந்து வீட்டுக் கடமைகளைக் கற்பிக்க வேண்டும்' என்று அவர் எண்ணியது மட்டும் செயலுருவில் வெளியாயிற்று. உலக விவகாரமும் வீட்டு விவகாரமும் ராமகிருஷ்ணருக்கே சரியாகத் தெரியாது. அவரிடமிருந்தும் லௌகிக ஞானம் பெறும் அளவுக்குக் கபடற்று இருந்தாள் சாரதை.

ஆம், இப்போது அவள் பயிலிடம் கற்றது லௌகிக ஞானம்தான். பிறகுதான் ஆத்மிக ஞானத்தைக் கற்றாள்!

வீட்டுப் பொறுப்புக்களைச் சாரதை நல்ல முறையில் நிர்வகிக்க வேண்டும் என்பதில் ராமகிருஷ்ணர் காட்டிய ஈடுபாடு அதிசயமானது. உலகுக்கெல்லாம் ஒரு படிப்பினை அது.

சாரதையை ராமகிருஷ்ணர் தம்மிடம் சேர்த்துக் கொண்டிருப்பதைக் காண பிராம்மணியின் அன்புப் பொறுமை மீண்டும் மூண்டெரிந்தது. சாரதை அவளைக் கண்டாலே நடுங்கினாள். ஆனால் ராமகிருஷ்ணரின் உத்தரவுப்படி அவளைத் தனது மாமியாராகக் கருதிப் பணிவிடை செய்து வந்தாள்.

பைரவி பிராம்மணி தாறுமாறாக நடந்து கொள்ளத் தொடங்கினாள்.

கட்டி நன்றாக முற்றினால்தானே அறுத்துச் சிகிச்சை செய்யலாம்? அதேபோல் சிலர் விஷயத்தில் துர்க்குணங்களும் முற்றினால்தான் அவை நீங்க வழி பிறக்கும் போலும்!

''ராமகிருஷ்ணரிடம் என்ன பெரிய உபதேசம் பெற வந்துவிட்டீர்கள்?'' என்று ஊராரை யெல்லாம் ஏசினாள் பைரவி.

''உங்கள் ஊர்ப் பையன் கதாயியாக ஒன்றும் தெரியாமலிருந்தவனுக்கு நான்தான் கண்ணைத் திறந்து விட்டுப் பெரியவனாக்கினேன்'' என்று கூறாமல் கூறினாள்.

அதற்குக் காரணம் அகம்பாவம் மட்டுமல்ல; ராமகிருஷ்ணரிடம் அவளுக்கு இருந்த ஆசையும்தான். யாருமே அவரிடம் வரக் கூடாது; தான் மட்டுமே அவரிடம் அன்பு செலுத்தவேண்டும் என்று அவள் விரும்பினாள். உண்மையான அன்பு சுயநலமற்றது என்பதை அறவே மறந்துவிட்டிருந்தாள்!

சிறு வயதிலேயே புகட்டுங்கள்...
சிறந்த முறையில் புகட்டுங்கள்...
காலையில் முதல் வேலையாக ஒரு முறை
இறுதியாக இரவில் ஒரு முறை
வாய்கொப்பளிக்க

லிஸ்டரின்!

—வாழ்நாள் முழுதும்
அவர்களுக்குப் பாதுகாப்பு!



பழக்கம் படிவதற்கு வாகானது இளமைப் பருவம்! லிஸ்டரின் உபயோகிக்கும் ஆரோக்கிய நற் பழக்கத்தைப் புகட்டுவதற்கு இதைவிட வாய்ப்பான சமயமும் உண்டோ! அன்றாடம் அதிகாலை ஒரு தடவை, இரவு ஒரு தடவை லிஸ்டரின் கொண்டு வாய் கொப்பளித்தால் கிருமிகளினின்று நாள் முழுதும் காத்துக்கொள்ளலாம். பட்ட மாத்திரத்திலே கிருமிகளைக் கொன்று மூச்சிலே இனிமை தவழச் செய்வது லிஸ்டரின் ஆன்டிஸெப்டிக் (நச்சுமுறி மருந்து).

திடமுடன் முன்யோசனையைக் கைக்கொள்ளுங்கள்! தினம் இருமுறை லிஸ்டரின் உபயோகிக்கும் ஆரோக்கிய நற் பழக்கத்தை இப்போதே துவக்குங்கள்!

வாய் நிறைந்த சுகாதாரத் தூய்மைக்கு வழி: லிஸ்டரின்; இன்றும் என்றும் உங்கள் துணை!



வார்னர்-லாம்பர்ட் பார்மஸூட்டிகல் கம்பெனி
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யூ.எஸ்.ஏ.வில் இணைக்கப்பெற்றது).

WL.17029 TN

பைரவி பிராம்மணிக்கும் மற்றவர்களுக்கும் அடிக்கடி சண்டை மூண்டது. ஒரு நாள் ஊராரெல்லாம் ஏதோ ஓர் ஆசார விதியைக் கூற, பைரவி மட்டும் அதற்கு மாருக ஒன்றை அடித்துக் கூற ஏக ரகளையாயிற்று.

''நாங்கள் சொல்வதை நீங்கள் கேட்காவிட்டால், இந்த ஊரில், இந்த வீட்டில் நீங்கள் இருக்க வேண்டியதில்லை'' என்று மிகக் கடுமையாகக் கூறிவிட்டார் ஹிருதயர்.

''நீ சொல்லி நான் கேட்கவா? அதோ சீதளா தேவி இருக்கிற அந்தப் பூஜை அறையிலேயே நானும் நாக தேவதை மானஸாவாகச் சீறிக் கொண்டு வாழ்வேன்'' என்று கூப்பாடு போட்டாள் பைரவி.

விவகாரம் முற்றுவதைக் கண்ட ஊரார் விருந்தாளிப் பெண்மணியை அவமதிப்பது முறையல்ல என்பதனால் குறுக்கிட்டுச் சமாதானம் செய்தார்கள்.

ராமகிருஷ்ணர் அவ்வளவுக்கும் வாயையே திறக்கவில்லை.

அப்போதைக்குச் சமாதானமானாலும், சிறிது போதுக்குப் பின் பைரவி பிராம்மணிக்குத் துக்கம் துக்கமாக வந்தது. குமுறிக் குமுறி அழுதாள். இந்த அழுகைக்கு ஒரு முடிவே கிடையாதோ என்பது போல் நீண்ட நேரம் விம்மி விம்மி அழுதாள்.

அழுகைக்கு ஒரு முடிவு பிறந்தது.

அவள் உள்ளத்தில் நடுவே வந்து படிந்த அழுக்குக்கும் ஒரு முடிவு பிறந்தது.

'தன்னையும் ஒருவர் எதிர்ப்பதா என்பதால்தானே இப்படி ஆத்திரப்பட்டு அழுதோம்? அந்தத் 'தான்' யார்? பரம புருஷன் எதிரில் பரமாணுவுக்குச் சமமாக நின்ற அல்ப ஜீவனல்லவா தான்? அப்படிப்பட்ட தான் அந்தப் பரமபுருஷனே மானுடனாக வந்த போது அவனிடம் முழு பாத்தியதையும் கோரியது, கோருவது எதனால்? இவ்வளவு அகம்பாவம் தனக்கு எப்படி வந்தது?'

சிந்தித்தபின் தானே பைரவியின் சித்தம் தெளிவு பெற்றது. அகம்பாவம் பரிபூரணமாக அற்றுப் போகிற நிலை அத்வைதம்தான்; தான் மிகவும் நீசன் என்று எண்ணப் பயிலும் ஸ்ரீ வைஷ்ணவர்களின் நைச்சிய பாவத்தின் போது ஒட்டிக் கொண்டுள்ள இம்மி 'நான்' கூட அத்வைதத்தில்தான் அடியோடு இல்லாமல் போகும் என்பதை உணர்ந்தாள் அவள். இருமைகளற்ற அந்த நிலையில்தான் சிறிதும் சுயநலமில்லாமல் அன்பு செய்ய முடியும் என்பதையும் பைரவி உணர்ந்தாள்.

ராமகிருஷ்ணரின் பரிசயத்தால் அத்வைத சந்நியாசி தோதாபுரி பக்தியை உணர்ந்தார். அதே பரிசயத்தால் பக்திமதி பைரவி அத்வைதத்தின் பெருமையைப் புரிந்து கொண்டாள்.

பைரவி பிராம்மணி சாமானியமான பெண்மணி அல்லவே! சாதனைகள் பல புரிந்தவள் அல்லவா? எனவே தன் உள்ளத்தைச் சோதனை செய்தவுடன் தானாகவே போதனை பெற்றாள்; வேதனை தீர்ந்தாள்.

கமார்புகூருக்கு வண்ணமும் மணமும் ஊட்டிய நானாவித புது மலர்களைக் கொய்து மாலை தொடுத்தாள் பைரவி பிராம்மணி. அந்த சுகந்தமும் போதாமல் அதற்குச் சந்தனக் குழம்பைப் பூசினாள்.

ஹாரத்தை எடுத்துக் கொண்டு ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வந்தாள்.

கலங்கிய கண்களை, கலங்கிய உள்ளத்தைச் சமனப்படுத்திக் கொண்டாள்.

ஆண்டவனுக்கு அணிவிப்பதுபோல அந்த மலர் மாலையை ராமகிருஷ்ணருக்குச் சூட்டினாள்.

மீண்டும் தனது கலங்கிய கண்களையும் கலங்கிய உள்ளத்தையும் சமனப்படுத்திக்கொண்டாள்.

அவரை வணங்கினாள். தென்னிய குரலில் ''அப்பனே! என்னை மன்னித்து விடு'' என்றாள்.

ராமகிருஷ்ணர் அவளைப் பார்த்த பார்வை அவளை மன்னிக்கவில்லை. ஏனெனில் அன்பின் சாரமான அந்தப் பார்வையில் மன்னிக்கவேண்டிய வஸ்து எதுவுமே இருக்கவில்லை.

அமைதியாகச் சென்று தனது பொருட்களைச் சேகரித்துக் கொண்டாள் பைரவி பிராம்மணி. இதயத்தை இறைவனிடமே வைத்து விராக்கினியாக, விராகிணியாக வெளியேறினாள்.

கமார்புகூரில் சுமார் ஏழு மாத காலம் தங்கியிருந்த ராமகிருஷ்ணர் 1868ம் ஆண்டுத் தொடக்கத்தில் மீண்டும் தக்ஷிணேசுவரத்துக்கு வந்து சேர்ந்தார்.

அந்த ஆண்டுத் தொடக்கத்திலேயே மதுராநாதரும், ஜகதாம்பா தாஸியும் ஸ்ரீ ராமகிருஷ்ணரை அழைத்துக் கொண்டு சுற்றத்தினரும் பணியாட்களும் புடைசூழ க்ஷேத்திராடனம் புறப்பட்டனர்.

''பூமி அடியில் எங்கும் நீர் ஓடுகிறது; எனினும் ஆங்காங்கு கிணறுகள் வெட்டிச் சௌகரியமாக நீர் எடுத்துக்கொள்ள நாம் வசதி செய்து கொள்கிறோம். இதே போல் தெய்வ சாந்நித்தியம் எங்கும் இருப்பினும் நாம் சுலபமாக அதனைக் கிரகிக்கும் முறையில் பெரியவர்கள் க்ஷேத்திரங்களை அமைத்துத் தந்திருக்கிறார்கள்'' என்று பிற்காலத்தில் தலங்கள் பற்றிப் பரமஹம்ஸர் கூறியதுண்டு. எனவே அவர் மிகுந்த ஆவலுடன் க்ஷேத்திராடனம் புறப்பட்டதில் விந்தையில்லை அல்லவா? நானாவிதமான மக்களைக் காண அது ஒரு நல் வாய்ப்பாகும் என்பதாலும் பிரயாணத்தை விரும்பினார் ராமகிருஷ்ணர். மக்களைப் புரிந்துகொண்டால்தானே அவர்களுக்குக் குருவாக முடியும்?

ராமகிருஷ்ணரின் தாய் சந்திரமணியும் யாத்திரையில் கலந்து கொண்டதாகச் சொல்லப் படுகிறது. இதற்கு முந்தைய ஆண்டு தன் பிள்ளையுடன் கமார்புகூர் செல்வதில்கூட ஆர்வம் இன்றிக் கங்கைக் கரையிலேயே வாழ்ந்த அவள் புனிதப் பதிகளைக் காண்பதில் மட்டும் நாட்டம் கொண்டிருந்தாள். எனினும் யாத்திரை நடுவிலேயே அவள் தக்ஷிணேசுவரத்துக்குத் திரும்பியிருக்க வேண்டும் என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது.

யாத்திரை சென்ற இடங்களில் வெள்ளிக் குடைகளும், விருதுச் சின்னங்களுமாக மன்னர் போலவே பயணம் செய்தார் மதுராநாதர். மன்னர் போலவே தான தருமமும் செய்தார்.

வைத்யநாத தேவகிருஹம் என்ற புண்ணியப் பதியில் ஏராளமான ஏழைகளைக் கண்டு கண் கலங்கிய ராமகிருஷ்ணர் மதுராநாதரைத் தாராளமாகத் தான தர்மம் செய்யுமாறு பணித்தார். ''அம்பாளின் சொத்துக்கு நீர் தர்மகர்த்தா. அவ்வளவுதான்! இவர்களெல்லாம் அந்தச் சொத்துக்குப் பங்குதாரர்கள். இவர்களுக்குத் தலா ஓர் ஆடையும், ஒரு விருந்தும், ஓர் எண்ணெய்க் குளிக்கான திரவியங்களும் அளியுங்கள்'' என்றார்.

''அவ்வளவுக்கு இங்கேயே செலவழித்தால் நாம் காசிக்கு எப்படிப் போவது?'' என்று கேட்டார் மதுராநாதர்.

''மூளை கெட்டவரே! உம்முடைய காசிக்கு நீரே போய்க்கொள்ளும். எனக்கு இதுதான் காசி'' என்று கூறிவிட்டு அந்த ஏதலரோடு ஏதலராக நடுத் தெருவில் அமர்ந்து விட்டார் தயாநிதியான தபோநிதி.

மதுராநாதரின் உள்ளம் கரைந்தது. 'பிதா' விரும்பியபடியே எல்லோருக்கும் உடையும், உணவும், எண்ணெயும் வழங்கப்பட்டன.

காசிக்குப் பயணம் தொடங்கிற்று.

புனித காசியில் கண்டறியாத காட்சியெல்லாம் கண்டார் ஸ்ரீ ராமகிருஷ்ணர். பொன்னாக ஒளிரும் ஞானப் பிரகாச பூமியாக அதைக் கண்டார் அவர். விசுவநாதனையும், விசாலாக்ஷியையும் அன்னபூரணியையும் தொழுது அழுது திவ்விய போதை பெற்றார்.

அந்த விசுவநாதனைப் பிரத்யட்சமாக மணிகர்ணிகை கட்டத்தில் கண்டார். வெள்ளிய நீண்டுயர்ந்த திருமேனியுடன் மயானத்தில் உலவும் நீலகண்டன் காசியில் உயிரை விடும் உத்தம ஜீவன்களின் வலது காதுகளில் தனது மணி வாக்கால் தாரக நாமம் ஓதும் தெய்வமாகக் காட்சியைக் கண்ணாரக் கண்டார்.

காசியில் திரைலிங்க ஸ்வாமி என்ற மகானையும் தரிசனம் செய்தார் ராமகிருஷ்ணர். தாமே சமைத்த பாயசத்தைத் தமது கரத்தாலேயே அவருக்கு ஊட்டினார். உடல் உணர்வைப் பூரணமாக இழந்திருந்த மகான் அவர் எனக் கண்டார். தெய்வம் ஒன்றா, பலவா என்று ராமகிருஷ்ணர் வினவிய போது திரைலிங்க ஸ்வாமி சைகை மூலமாக ''சமாதி நிலையில் இருக்கும் போது தெய்வம் ஒன்றே; ஜீவனாக இருக்கும்போது அதுவே பலவாகின்றது'' என்று தெரிவித்தார்.

''ஹிருது! இதோ ஒரு பரமஹம்ஸர்!'' என்று ஹிருதயரிடம் மெல்லக் கூறினார் பிற்காலத்தில் பரமஹம்ஸர் என்றே பெயர் பெறப் போகிற ராமகிருஷ்ணர்.

காசியில் பைரவி பிராம்மணியை மீண்டும் கண்டார் ராமகிருஷ்ணர். சக்தி மயமாக இருந்த பிராம்மணி இப்போது பக்தி மயமாகி யாத்திரைக் கோஷ்டியுடன் சேர்ந்து கொண்டாள்.

பிரயாகை மார்க்கமாக யாவரும் பிருந்தாவனம் சென்று சேர்ந்தனர். கண்ணனின் பட்டுப் பாதம் பட்ட அந்த மண்ணை மிதித்ததுமே ராமகிருஷ்ணர் சமாதி அடைந்துவிட்டார். அங்குள்ள மான்களையும், மயில்களையும், மரம் செடிகளையும், துளசி வனத்தையும் காணக் காண பாகவத நாட்களுக்கே சென்றுவிட்டார் அவர். கன்றையும், ஆயரையும் மழையிலிருந்து காப்பதற்காகக் கண்ணன் குடையாகத் தூக்கிய கோவர்த்தனக் குன்றத்தைக்

கண்டு மெய் மறந்தார். யமுனை வழியே மாடுகளைக் கடத்திச் செல்லும் ஆயர்களைக் காணுந்தோறும் மாயனை எண்ணி மயங்கினர். அனவரதமும் அங்கு ராதிகாவின் பாதச் சிலம்புடன் கலந்து ஒலிக்கும் கண்ணனின் தண்டை ஒலியைக் கேட்டுக் காதும், கருத்தும் களித்தார். ஜீவாத்ம பரமாத்ம ஐக்கியத்தை வாழ்ந்து காட்டிய ராதா—கிருஷ்ணர்களுடனேயே ராமகிருஷ்ணர் வாழ்ந்த நாட்கள் அவை. பிருந்தாவனத்தில் அவரைக் கண்ட வைஷ்ணவ யோகினி கங்காமாதா என்பவளோ ராமகிருஷ்ணரையே ராதையாகக் கண்டு ''என் பிராண சகி, வா வா'' என்று வரவேற்றாள்.

ராதாகிருஷ்ணனை நினைந்து அந்தச் சூழலில் எத்தனை காலம் வேண்டுமானாலும் தங்கலாம். ஆனாலும் இப்போது தெய்விகத்தின் அழகிலிருந்து மானுடப் பண்பின் அழகில் தோய்ந்து விட்டார் ராமகிருஷ்ணர்.

தக்ஷிணேசுவரம் திரும்பிவிட்ட தன் அன்னை என்ன செய்கிறாளோ, மதுராநாதரின் பரிவாரமெல்லாம் இங்கு வந்து விட்டதால் அவளை அங்கு யார் கவனித்துக் கொள்கிறார்களோ என்ற விசாரம் அவருக்கு ஏற்பட்டுவிட்டது.

''என் அம்மாவைப் பார்க்க வேண்டும்'' என்று குழந்தை போல் நச்சரிக்கத் தொடங்கினர் அந்தத் துறவி.

''கயைக்குப் போக வேண்டாமா?'' என்றார் மதுராநாதர்.

''நான் கயைக்கு வந்தால் அங்கிருந்து உயிரோடு மீள முடியாது'' என்றார் ராமகிருஷ்ணர்.

ஒரு கிரகத்திலிருந்து பிரிந்து, உருவான உப கிரகம் மூல கிரகத்தை நெருங்கினால் அதனுடனேயே ஒன்றுபட வேண்டியதுதானே! ராமகிருஷ்ணர் கயாநாதரான கதாதரனிலிருந்து தோன்றியவர் அல்லவா? க்ஷுதிராமுக்குக் கனவில் கனிவுடன் தோன்றி, 'பிள்ளைக் கனியமுதாகப் பிறப்பேன்' என்று கனிவாயால் கூறியவன் கயா நாதனே அல்லவா?

யாத்திரைக் கோஷ்டி மீண்டும் காசியை அடைந்தது. தீபாவளி காலமானதால் ஸ்வர்ண அன்னபூரணேசுவரியின் தரிசனம் கிடைத்தது.

இவ்விய தரிசனத்துடன் தக்ஷிணேசுவரம் திரும்பினர் — பைரவி பிராம்மணியை மட்டும் அவனுடைய இருக்கையிலேயே விட்டுவிட்டு.

சிறிது காலத்தில் பைரவி பிராம்மணி துன்பங்களின் உறைவிடமாகிய மண்ணுலகிலிருந்து பிரிந்து அன்புகளின் நிலைக்களனாகிய ஆண்டவனைச் சென்றடைந்தாள்.

சுடர் தீபத்தோடு சேர்ந்தது.

(தொடரும்)

வானளாவும் பாங்கிக் கட்டடம்

விண்ணை முட்டும் மாடங்கள், வானளாவும் கட்டடங்கள் என்பது கதைகளில் வரும் வர்ணனையல்ல; உண்மையிலே சென்னை மவுண்ட்ரோடில் வானளாவும் கட்டடங்கள் உருவாகி வருகின்றன. சமீபத்தில் இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கின் எட்டுத் தட்டுக் கட்டடம் 8994 சதுர அடி பரப்பளவில் பிரும்மாண்டமாகக் குறுகிய காலத்தில் உருவாகி யிருக்கிறது. இந்தக் கட்டடத்துக்குத் தேவையான உபகரணங்களெல்லாம் தரையிலேயே கைதேர்ந்த நிபுணர்களின் மேற்பார்வையில் இணைக்கப்பட்டு, பிறகு பிரும்மாண்ட கிரேன்களால் பொருத்தி வைக்கப்படுகின்றன என்பதைக் கேட்டால் ஆச்சரியமாயில்லையா? இனி அங்கங்கே தொழிற்சாலைகளில் கட்டடங்களுக்குத் தேவையான உபகரணங்களைத் தயாரித்துக் கொண்டு, அவற்றைக் குறுகிய காலத்தில் பொருத்தி மாபெரும் கட்டடங்களை உருவாக்கி விடலாம் என்பதற்கு லார்ஸன் டூப்ரோ ஸ்தாபனத்தின் துணை ஸ்தாபனமான இன்ஜினியரிங் கன்ஸ்டிரக்ஷன் கார்ப்பொரேஷன் நிர்மாணித்



துள்ள இந்த எட்டுமாடிக் கட்டடமே சான்றாகும். இம்மாதிரி இந்தியாவில் பல கட்டடங்களை இந்த ஸ்தாபனம் கட்டிக் கொடுத்திருக்கிறது. குறுகிய காலத்தில், சிக்கனமாக, தரையிலேயே கட்டட உபகரணங்கள் இணைக்கப்படுவதால் உறுதியும், பளபளப் பேற்ற வாய்ப்பும் இந்தக் கட்டடக் கலையில் கிடைக்குமாம்.

கல்கி

பேனாவுக்குள்ள வலு கத்திக்கும் கிடையாது என்னும் பொன்மொழியை உலக இலக்கிய வரலாறு நிரூபித்து வந்திருக்கிறது. எழுத்தாளன் எந்தக் காரியத்தையும் தன் எழுத்து வன்மையால் சாதித்துவிடலாம். உலகிலே பெரும் புரட்சியை ஏற்படுத்த வேண்டுமா? சமூகத்தை நல்லபடியாகச் சீர்திருத்த வேண்டுமா? எந்த நல்ல காரியத்தையும் பேனா மன்னர்கள் தங்கள் எழுத்துச் சக்தியினால் சாதிக்கும் திறமை பெற்றிருக்கிறார்கள். கதையாகச் சொல்லி மனிதன் மனத்தில் படிய வைக்கும் ஆற்றல் அவர்களுக்கு உள்ளது.

எழுத்தாளர்களது இப் பணிக்கு ஆக்கம் தந்து 'கல்கி' பத்திரிகை கடந்த இருபத்து மூன்று ஆண்டுகளாக ஊக்குவித்து வந்துள்ளது எழுத்தாளர் உலகத்துக்குத் தெரியாததல்ல. எழுத்தாளர்களின் உரிமையைப் பாதுகாத்து அவர்களது உரிமையில் சிறிதும் தலையிடாமல் கல்கி பணியாற்றி வருகிறது என்பதையும் அவர்கள் அறிவார்கள். அத்தகைய 'கல்கி'க்கு இன்னும் இரண்டே ஆண்டுகளில் இருபத்தைந்தாவது வயது பிறக்கப் போகிறது.

எத்தனையோ சிறந்த சிறுகதைகளையும் நவீனங்களையும் வெளியிட்டு இலக்கிய உலகில் நிலையான இடம் பெற்றுள்ள 'கல்கி'யின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தைச் சீரிய முறையிலே கொண்டாட உத்தேசித்துள்ளோம். அந்தக் கொண்டாட்டத்தின் ஓர் அங்கமாக இருபத்தையாயிரம் ரூபாய் பரிசு அளித்து எழுத்தாளர்களோடும் வாசகர்களோடும் மகிழ்வுடன் பங்கு கொள்ள வகுத்திருக்கும் ஒரு திட்டம்தான் இந்த வெள்ளி விழாப் பரிசுத் திட்டம்.

இலங்கை அன்பர் ஒருவர், 'இலங்கை எழுத்தாளர்கள் இப்பரிசுத் திட்டத்தில் பங்கு பெறலாமா?' என்று கேட்டிருக்கிறார். இலங்கை என்ன, தமிழ்கூறும் நல்லுலகமனைத்திலும் இருப்பவர்கள் தாராளமாகப் பங்கு பெறலாம். ஆம்! எழுத்தார்வமுள்ள எல்லோரும் பங்கு பெறலாம்; சிறந்த படைப்புகளைக் 'கல்கி'க்குத் தந்து மகிழலாம். 1964ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ந் தேதி வரை இந்தப் பரிசுத் திட்டத்துக்கான கதைகளையும் நாவல்களையும் அனுப்பி வைக்கலாம். ஓராண்டுக்கு மேல் அவகாசம் இருக்கிறது. சிந்தனைக் குதிரையைத் தட்டி விட்டுச் சிறந்த கற்பனையைத் தரப் போதுமான நாட்கள் இருக்கின்றன.

பஞ்சாயத்தார்களாகப் பொறுப்பு ஏற்பவர்கள் இலக்கிய உலகிலே சிறந்ததொரு இடம் பெற்றவர்களாக இருப்பார்கள் என்பதைச் சொல்லத் தேவையில்லை. இந்தப் போட்டி சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாயிருக்கும். சமூகமோ, சரித்திரமோ எது வேண்டுமானாலும் எழுதுங்கள். உங்கள் மதிப்பும் 'கல்கி'யின் மதிப்பும் ஒருங்கே உயரும் வகையில் எழுதுங்கள்.

நாவல்களுக்கு மூன்று பரிசுகள்

முதற் பரிசு ...	... ரூ.	10,000
இரண்டாவது பரிசு	... ரூ.	7,500
மூன்றாவது பரிசு ...	... ரூ.	5,000

சிறுகதைகளுக்கும் மூன்று பரிசுகளே

முதற் பரிசு ...	... ரூ.	1,000
இரண்டாவது பரிசு ...	... ரூ.	500
(மூன்றாவது பரிசு கதை ஒன்றுக்கு ரூ. 100 வீதம் 10 கதைகளுக்கு)	... ரூ.	1,000

வெள்ளி விழா

பரிசுத் திட்டம்

உங்கள் கேசத்தை அழகுபடுத்த நிரூபணமான பாமாலிவ் வழி





பாமாலீவ் பெர்ஃப்யூம்டு கோகோனட் ஹேர் ஆயில்...

[illegible]




பாமாலீவ் கோகோனட் ஆயில் ஷாம்பு...

[illegible]

நவநாகரீக இந்தியப் பெண்டிர் கூந்தல் அழகிற்கு விரும்பியேற்பது பாமாலீவ்

[illegible]



முதல் மூவர்

ராஜாஜி-சோமு

19

திருவடிகளைத் தொழுவோம் வா என்று நெஞ்சை அழைத்துப் பிறகு தொழுதேத்துகிற முறையைச் சொல்லுகிறார்:

நாமம் பலசொல்லி
  நாரா யணாஎன்று
நாம்அங்கை யால்தொழுதும்
  நல்நெஞ்சே—

[நாமம் பல சொல்லி - அவனுடைய திரு நாமங்களைச் சொல்லி. நாராயணா என்று - நாராயணா என்று சொல்லி. நாம் அங்கையால் தொழுதும் - இரு உள்ளங் கைகளையும் ஒன்றாகச் சேர்த்து அஞ்சலி செய்வோம். நல் நெஞ்சே - கட்டுப்படாமல் திரிகிற நெஞ்சைச் சமாதானப்படுத்துகிற முறையில் நல் நெஞ்சே என்கிறார். இது பக்தர்கள் மரபு.]

வா மருவி

மண்ணுலகம் உண்டுஉமிழ்ந்து
  வண்டுஅறையும் தண்துழாய்க்
கண்ணனையே காண்கநம்
  கண்

[வாமருவி - மருவிவா, விருப்பத்தோடு வருவாயாக நெஞ்சமே! மண்ணுலகம் உண்டு - இந்தப் பூமியை அமுது செய்து, பிறகு, உமிழ்ந்து - அதை வெளிப்படுத்தி. வண்டு அறையும் தண்துழாய் - வண்டுகள் ரீங்காரம் செய்கிற திருத்துழாய் மாலையை அணிந்த: கண்ணனையே-கண்ணபெருமானையே. காண்க நம் கண் - நம் கண்கள் காண்பவாக!]

உலகை உண்பதும், உமிழ்வதும், கல்பத்தின்போது அழிப்பதும் மறுபடி சிருஷ்டிப்பதும் அவன் செயலே என்பதை உணர்த்தும். நாராயணனே சர்வேசுவரன் என்கிறார்.

நாமம் பலசொல்லி
  நாரா யணாஎன்று
நாமங்கை யால்தொழுதும்
  நன்னெஞ்சே—வாமருவி
மண்ணுலகம் உண்டுமிழ்ந்து
  வண்டறையும் தண்துழாய்க்
கண்ணனையே காண்கநம்
  கண்!

'கண்ணனையே காண்க' என்று கண்களுக்குச் சொல்லுகிறார். அதாவது வேறு பொருள்களிடம் கண்களைச் செலுத்தாமல், ஏகாக்கிரமாக இறைவனுக்குப் பக்தி செலுத்த வேண்டும் என்கிறார்.



வெள்ளித் திரையின்

பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடக்கும் 'கும்பமேளா திருவிழா' 1962ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஹரித்வார் நகரில் நடந்தது. கங்கையில் தங்கள் கறைகளைப் போக்கிக் கொள்ளப் பல்லாயிரக் கணக்கில் மக்கள் அங்கு கூடினர். ஹிமாசலத்திலிருந்து சாதுக்கள் கூட்டம் இறைவன் நாமாவளிகளைச் சொல்லிக் கொண்டு ஹரித்வாரை அடைந்தது. ஸ்நான கட்டத்துக்குச் செல்லும் வழியில் இந்தச் சாதுக்கள் ஊர்வலத்தின் முன், ஒரு பாண்டு வாத்தியக் குழு ''மேரா நாம் ராஜு'' என்ற ஒரு சினிமாப் பாட்டை வாசித்துக் கொண்டு சென்றது.

பழமையும், புதுமையும் சேர்ந்து வாழும் நமது நாட்டில் சினிமா ஒரு வலிமையான சாதனமாய் விளங்குகிறது. வாரம் ஒரு முறையாவது ஒரு திரைப் படம் பார்த்தே ஆக வேண்டும் என்று பழக்கப்படுத்திக் கொண்டவர்கள் பலர். ''இந்த இழவெடுத்த சினிமா வந்தாலும் வந்தது.... ஊரே குட்டிச் சுவராப் போச்சு....'' என்று ஆத்திரத்தோடு சபிப்பவர்கள் சிலர் ஆகிய பலரும் சினிமாவைப் பற்றியும், சினிமாத் தொழிலைப் பற்றியும் விவாதிக்கின்றனர். ''நான் டிவியைப் பற்றி நாம் அதிகமாக வாதாடுகிறோம்; குறைவாகச் சிந்திக்கிறோம்'' என்றார் ஓர் அமெரிக்கப் பேராசிரியர். சினிமாவைப் பொறுத்த வரையும் அப்படித்தான்.

1895ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28ந் தேதி பாரீஸ் நகரத்து கிராண்டு கபே என்னும் ஹோட்டலில் 'லூமியர் சகோதரர்கள்' கண்டுபிடித்த 'சினிமாட்டோகிராப்'' முதன் முறையாகக் காட்டப்பட்டது. நகரும் ரயில், . தெருவில் ஜனக் கூட்டம், ஓட்டப் பந்தயம், நீராடுதல் ஆகிய காட்சிகள் அங்கு நிழல் படங்களாகக் காட்டப்பட்டன. இந்த அதிசயத்தைக் காணப் பெருவாரியாக மக்கள் கூடினர். சில காட்சிகளுக்குப் பிறகு இந்த ''சினிமாட்டோகிராப்'' பழைமையாகிவிடும், இதற்கு மதிப்பு இருக்காது என்று எண்ணிய 'லூமியர் சகோதரர்கள்' சில மாதங்களுக்குள் தங்கள் ஏஜண்டுகளை உலகின் பல பாகங்களுக்கும் அனுப்பி வைத்தனர். 'லண்டன் ரீஜண்ட் பாலி டெக்னிக்'கிலும் நியூயார்க்கிலும், மற்ற நகரங்களிலும் இந்தக் காட்சிகள் திரையிடப்பட்டன. 1896ம் ஆண்டு ஜூலை மாதம் 7ந் தேதி மாஸ்கோவில், ஜார் மன்னன் முன்னிலையில் ஒரு காட்சி ஏற்பாடாயிற்று. அதே தினம் பம்பாய் வாட்ஸன்ஸ் ஹோட்டலிலும் 'சினிமாட்டோகிராப்' காட்சிகள் ஆரம்பமாயின. அவ்வருடத்திய பத்திரிகைகள் மூலம் இந்தக் காட்சிகள் மிக

எஸ். கிருஷ்ணஸ்வாமி

வெற்றிகரமாகப் பல வாரங்கள் நடந்தன என்று தெரிகிறது.

சில வருடங்களுக்குள் உலகின் பல பாகங்களிலும் பல நிகழ்ச்சிகளைத் திரைப்படமாக்கினர். ராணி விக்டோரியாவின் சடல அடக்கம், ஐந்தாம் ஜார்ஜ் அரசரின் பட்டம் சூட்டு விழா முதலியவை திரைப்படமாக்கப்பட்டன. இந்தியாவிலும் ஹரிச்சந்திரா பட்வடேகர் என்பவரும், வேறு சிலரும் இவ்வித நிகழ்ச்சிப் படங்கள் எடுக்கத் தொடங்கினர்.

மேல் நாடுகளில் நாடகங்களைப் படமாக்க ஆரம்பித்தனர். காமிராவை மேடைக்கு எதிரே வைத்து விட்டு, நாடகம் அனைத்தையும் படமாக்கி விடுவார்கள். அமெரிக்காவில் எட்வின் போர்ட்டர் முதலியவர்கள் காமிராவை ஓர் இடத்திலிருந்து வேறிடத்துக்கு ஒரே காட்சியில் 'மாற்றலாம்' என்று நிரூபித்தனர். பிரான்ஸில் 'ஜார்ஜ்மிலி' அருமையான தந்திரக் காட்சிகளை உருவாக்கத் தொடங்கினார். உலகின் பல்வேறு பாகங்களிலும் சினிமாக் கொட்டகைகள் அதிகரித்தன. இந்தியாவில் பல டெண்ட் சினிமாக்களும், ஒரு சில நிரந்தர சினிமாக்களும் உருவாயின. கல்கத்தாவில் ஜே. எப். மதன், பம்பாயில் அப்துலலி ஈஸுபாலி, சென்னையில் ஆர். வெங்கய்யா ஆகியோர் பல சினிமாக்களை ஆரம்பித்தனர்.

திரைப் படத்தின் இந்தக் குழந்தைப் பருவத்தில் ''கிறிஸ்துவின் வாழ்க்கை'' என்ற தலைப்பில் பல ஐரோப்பிய கம்பெனிகள் பைபிள் கதைகளைப் படமாக்கின. இவ்வித ஒரு ''கிறிஸ்துவின் வாழ்க்கை'' பம்பாயில் 1911ம் ஆண்டு திரையிடப்பட்டது. இந்தப் படத்தைப் பார்த்தவர்களில் கோவிந்தராஜ் துந்திர ராஜ் பால்கேயும் ஒருவர்.

நாஸிக் நகரத்து வடமொழிப் பண்டிதர் ஒருவரின் குமாரரான பால்கே சிறு வயது முதல் ஞான வித்தைகளிலும், சித்திரம் வரைவதிலும் ஆர்வம் காட்டினார். ஜே. ஜே. கலைக் கல்லூரியில் முறையாகச் சித்திரம் பயின்றவர், பின்னர் ஜெர்மனிக்குச் சென்று அச்சடிக்கும் தொழிலைப் பயின்று வந்தார். ''கிறிஸ்துவின் வாழ்க்கை'' பால்கே மனத்தில் நன்றாகப் பதிந்தது. அதைப் பார்க்கும் போதே அவர் மனக் கண்முன் ''கிருஷ்ணனின் வாழ்க்கை'' திரைப்படமாகிக் கொண்டிருந்தது. தந்தையின் மூலம் புராணங்களில் ஏற்பட்ட பற்றுதல், ஓவியத் திறன், ஞான வித்தையில் வன்மை, ஜெர்மனியில் பயின்ற தொழில் நுட்பங்களெல்லாம் சேர்ந்து பால்கேயை ஒரு திரைப்படத் தயாரிப்பாளர், கதாசிரியர், டைரக்டர், ஒளிப்பதிவாளர் எடிட்டர் மற்றும் லேபரட்டரி மேற்பார்வையாளராகவும் உருவாக்க உதவின.

எடுத்ததும் ''கிருஷ்ண லீலா''வைப் படமாக்குவது

வளர்ச்சி



மேலே: நியூ தியேட்டர்ஸ் ''வித்யாபதி''யில் கண்ணன் தேவியும், பஹாரி சன்யாலும். டைரக்ஷன்: தேபகி போஸ்.

கீழே: பாம்பே டாக்கீஸ் ''இஸ்ஸத்'' படத்தில் தேவிகா ராணியும், அசோக்குமாரும்.





கடினம் என்று உணர்ந்த பால்கே முதலில் "ஹரிச்சந்திரா"வைப் படமாக்கினார்.

1913-ம் வருடம் வெளியிடப்பட்ட 'ராஜா அரிச்சந்திரா' இந்தியாவில் தயாரான முதல் முழு நீளப் படம். நடிப்பு, நாட்டியம் இவை வெறுக்கத் தக்க கலைகளாக இருந்த அந்த நாட்களில் நல்ல குடும்பத்தைச் சார்ந்த யாரும் சினிமாவில் நடிக்கலாம் என்று கூடச் சிந்திக்க வில்லை. 'தாராமதி' வேடம் தரிக்க ஒரு பெண் வேண்டுமென்று பால்கே சில தேவதாசிகளைக் கேட்டுப் பார்த்தார். சினிமாவில் நடிப்பது தங்கள் குலத் தொழிலை விளம்பரப்படுத்துவது என்று கருதிய பல தேவதாசிகள் சினிமாவில் நடிக்க மறுத்து விட்டனர். பால்கே 'சாலுங்கே' என்ற நடிகனுக்குப் பெண் வேடம் போட்டுத் தாராமதியாக நடிக்க வைத்தார்.

இதன்பின் சுமார் பத்து வருடங்களில் பால்கே "கிருஷ்ண ஜன்மா" உள்பட நூற்றுக்கு மேலான படங்களைத் தயாரித்து வெளியிட்டார்.

இந்த வருடங்களில் அமெரிக்காவில் கிரிப்பித், ருஷ்யாவில் ஐஸன்ஸ்டைன் ஆகிய அறிஞர்கள் திரைப்பட டைரக்ஷனை ஒரு சிறந்த கலையாக உருவாக்கினர்.

பால்கேயின் வெற்றியைக் கண்டு இந்திய திரைப்படத் தொழிலில் நூற்றுக்கணக்கானவர்கள் ஈடுபடலாயினர்.

இவர்களில் மற்றவர்களுக்கு வழிகோலிகளாகக் கதையம்சத்திலும் தயாரிப்பு டைரக்ஷனிலும் புதுமை செய்த சிலரில் கல்கத்தாவைச் சேர்ந்த திரேன் கங்குலியும்



மேலே: ராஜ் கமல் கலாமந்திர் "டாக்டர் கோட்னிஸ் கி அமர் கஹானி" படத்தில் சாந்தாராம், ஜயஸ்ரீ. டைரக்ஷன்: வி. சாந்தாராம்.

கீழே: மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பொரேஷன் "தியாக பூமி"யில் பாபநாசம் சிவன், எஸ். டி. சுப்புலக்ஷ்மி முதலியோர். டைரக்ஷன்: கே. சுப்பிரமணியம்.

வனப்பின் மலர்ச்சி!



மபத்லால் க்ரூப்

வாயில்ஸ், லேநோஸ்

MAFATLAL GROUP

நியு ஷொராக் (ஷொராக்), அஹமதாபாத் • நியு ஷொராக், நடியாத் ஸ்டேண்டர்ட், பம்பாய் • ஸ்டேண்டர்ட் (நியு சைனு) பம்பாய் ஸ்டேண்டர்ட், தேவாஸ் • ஸாஸூன், பம்பாய் • ஸாஸூன் (நியு யூனியன்) பம்பாய் • ஸூரத் காட்டன், ஸூரத் • மபத்லால் பைன், நவ்ஸாரி.

Alyars MGV. 347-TM-B

ஒருவர். கங்குலி, ரவீந்திரநாத தாகூரின் புகழ்பெற்ற சாந்திநிகேதனில் குருதேவரிடம் பயின்றவர்.

ஹைதராபாத் நிஜாம் கலைக் கல்லூரியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய கங்குலி ஒரு சிறந்த நடிகர், ஓவியர். 1917ம் ஆண்டு கல்கத்தா மதன் கம்பெனியை அணுகி ஒரு படமெடுக்கத் திட்டமிட்டார். சில வருடங்களுக்குப் பின் தம் சொந்த முயற்சியில் சில நண்பர்களுடன் கூட்டாகச் சேர்ந்து, England Returned என்ற சமூக நகைச்சுவைப் படத்தைத் தயாரித்து 1921ம் ஆண்டு வெளியிட்டார்.

பம்பாய்த் தயாரிப்பாளர்கள் அனைவரும் திரும்பத் திரும்பப் புராணக் கதைகளைப் படமாக்கிக் கொண்டிருந்த போது அங்கு புதுப் பாதை வகுத்தவர் சந்துலால் ஷா. ஒரு பெண் தன் கணவனுக்குக் கடமையைச் செய்யும் மனைவியாக மட்டும் இருந்தால் போதாது. அவன் வாழ்க்கையில் நாட்டம் கொண்ட அன்பு மனைவியாகவும் இருக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்ட ''குணசுந்தரி'' என்ற படம் சந்துலாலுக்கு மிகச் சிறந்த வெற்றியை அளித்தது. பிற்காலத்தில், ஷாவின் ரஞ்சித் கம்பெனி நூற்றுக்கு மேற்பட்ட படங்களைத் தயாரித்தது. அவற்றில் பெரும்பான்மையானவை சமூகப் படங்கள்.

1920க்குப் பிறகு வந்த படங்களில் பெண் பாகம் ஏற்று நடிக்க ஆங்கிலோ இந்தியப் பெண்மணிகள் பலர் சம்மதித்து நாட்டம் கொண்டனர். ஐரிஸ் காஸ்பர், சீனிஸ்மித், ரூபிமேயர்ஸ், போனிபார்ட் முதலிய நடிகைகள் தோன்றினர். இவர்களில் பலர் வேறு திரைப் பெயர்கள் சூட்டிக் கொண்டனர்.

திரைப் படங்களிலும்—முக்கியமாக அமெரிக்கத் திரைப் படங்களிலும் இந்திய வாசிகளின் பண்பு குலைகிறது என்று பலர் கருதியதின் பேரிலும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் தயாரான படங்களை இந்தியாவில் வெளியிடச் சலுகைகள் அளிக்க முடியுமா என்பது குறித்து ஆராய்வதற்காகவும் 1927ம் ஆண்டு இந்திய அரசாங்கம் ஒரு சினிமா கமிட்டியை நியமித்தது. திவான்பகதூர் ரங்காச்சாரி அவர்கள் தலைமையில் மூன்று இந்தியர்களையும், மூன்று ஆங்கிலேயர்களையும் அங்கத்தினர்களாகக் கொண்ட இந்தக் கமிட்டி இந்தியாவின் பல திரைப்பட ஸ்தாபனங்களைப் பார்வையிட்டுப் பல மக்களை விசாரித்து ஓர் அறிக்கை வெளியிட்டது. இந்தக் கமிட்டி இந்தியாவுக்குத் தணிக்கை தேவைதான் என்று கூறிற்று. இதற்குப் பல வருடங்களுக்கு முன்னாலிருந்தே சினிமாத் தணிக்கை அந்த அந்த ராஜ்யங்களில் இருந்து வந்தது.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் தயாரிக்கும் படங்களுக்குத் தனிச் சலுகை அளிக்க இயலாது என்று கூறியதோடு இந்தக் கமிட்டி, இந்தியத் திரைப்படத் தொழில் அபிவிருத்திக்காக, 1. தணிக்கையை மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும். 2. தொழில் அபிவிருத்திக்காக அரசாங்கம் தயாரிப்பாளர்களுக்குக் கடனுதவி அளிக்க வேண்டும். 3. திரைப்பட நுட்பக் கலைகளைப் பயில ஒரு கல்லூரி நிறுவ வேண்டும் என்று பல யோசனைகளைக் கூறி

ஜெமினியின் ஔவையார்



யது. ஆனால் அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை.

1927ம் வருடம் அக்டோபர் மாதம் 6-ந் தேதி இந்தக் கமிட்டி நியமிக்கப்பட்டது. எந்தத் தொழில் பற்றி அவர்கள் ஆராயத் தொடங்கினார்களோ அதை முற்றும் மாற்றும்படியான ஒரு புரட்சிகரமான சம்பவம் அதே நாளில் நடந்தது. ''ஜாஸ் ஸிங்கர்'' என்ற திரைப்படம்தான் உலகின் முதல் பேசும் படம் – அன்று நியூயார்க்கில் வெளியிடப்பட்டது. இரண்டு வருடங்களுக்குள் பேசாத படங்களுக்கு மதிப்புக் குறைந்து விட்டது. தயாரிப்பாளர்கள் எதிர்பார்த்ததை விடப் பன்மடங்கு அதிகமாகப் பேசும் படம் மக்களைக் கவர்ந்தது.

இந்தியாவில் அச்சமயத்தில் மிகப் பெரிய திரைப்பட ஸ்தாபனம் என்று சொல்லக் கூடியது கல்கத்தா மதன் தியேட்டர்ஸ். அவர்களுக்குச் சொந்தமான ஸ்டுடியோ தயாரிப்பு தவிர, இந்தியா, பர்மா, இலங்கை ஆகிய நாடுகளில் சுமார் நூறு சினிமாத் தியேட்டர்களும் (சில சொந்தமாகவும், சில குத்தகையிலும்) இருந்தன. ஜே. எப். மதன் அவர்களின் குமாரர் ஜே. ஜே. மதன் நியூயார்க் நகரில் ''ஜாஸ் ஸிங்கர்'' படத்தைப் பார்த்தார். உடனே இந்தியாவிலும் பேசும் படங்களைத் தயாரிக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. இதற்கான தயாரிப்புகளை மதன் தியேட்டர்ஸ் செய்துகொண்டிருந்த பொழுது பம்பாயில் 'அர்தேஷிர் இரானி' என்னும் தயாரிப்பாளர் இதே முயற்சியில் ஈடுபட்டார். 1931ம் ஆண்டு அர்தேஷிர் இரானி தயாரித்த முதல் இந்திய பேசும் படம் ''ஆலம் ஆரா'' திரையிடப்பட்டது.

திரைப்படம் பேச ஆரம்பித்ததும் உலகெங்கிலும் ஒரு குழப்பம் ஏற்பட்டது. ஐரோப்பிய, அமெரிக்கப் படங்களுக்கு அதுவரை அகில உலக வாய்ப்பிருந்தது. இப்படங்கள் பிரதேச மொழிகளைப் பேச ஆரம்பித்து விட்டால் இந்த உலக வாய்ப்பினை இழக்க நேரிடும் என்று கருதினர். இந்தியாவிலும் பல்வேறு ராஜ்யங்களில் தயாரான மௌனப் படங்கள் இந்தியா முழுதும் காட்டப்பட்டு வந்தன. பிரதேச மொழிகளைக் கொண்டு திரைப் படங்களைத் தயாரித்தால் அப் பிரதேசங்களில் மட்டுமே திரையிட்டு, அப் படம் லாபகரமாக இருக்குமா என்று ஆலோசித்தனர். ''ஆலம் ஆரா'' உருதுப் படம். இதையொட்டி அதே வருஷத்தில் அர்தேஷிர் இரானி மற்ற சில மொழிப் படங்களையும் தயாரித்தார். இவ் வருடத்தில் தயாரான படங்களில் ஒன்று தெலுங். எம். ரெட்டி டைரக்‌ஷனில் தயாரான ''காளிதாஸ்''. இந்தப் படத்தில் தமிழ் வசனமும் தெலுங்குப் பாடல்களும் இடம் பெற்றன. சினிமாவில் மொழிப் பிரச்னையைத் தீர்க்க இதுவும் ஒரு வழி என்று கருதினார்கள் போலும்!

சில வருடங்களுக்குள் இந்தியாவில் மௌனப் படங்கள் நிறுத்தப்பட்டுப் பல மொழிகளிலும் பேசும் படங்கள் தயாரிக்கப் பட்டன. சரிவர வசனம் பேச முடியாத நடிகர்களும் பிரதேச மொழி கற்காத பல ஆங்கிலோ இந்திய நடிகைகளும் திடீரென்று சினிமாவிலிருந்து விலக நேரிட்டது. இவர்களுக்குப் பதில் பிரதேச மொழி நாடக நடிக நடிகைகள் சினிமாவில் இடம் பெற்றனர்.

''ஆலம் ஆரா'' வில் சுமார் பதினெட்டு பாட்டுகள் இருந்தன. மேல் நாட்டுப் படங்களைப் போல் இன்றி இந்தியப் படங்கள் ஆரம்பமுதலே இசைக்கும் நாட்டியத்துக்கும் முக்கியத்துவம் அளித்தன. காரணம் காளிதாசனுக்கும் முந்திய காலம் முதலே வட மொழியில் நாடகம், நாட்டியம், பாடல்கள் யாவும் ஒன்றுடன் ஒன்று கலந்து வளர்ந்து வந்தன. மொகலாயர்கள் இந்தியாவுக்கு வந்த பிறகு தாஜ் மஹால் முதலிய அழகிய கட்டிடங்களை நமக்கு அளித்தாலும் மேடைக் கலைகளை அவர்கள் வெறுத்தனர். இதனால் இசை, நாட்டியம், நாடகக் கலைகளுக்கு மதிப்புக் குறைந்து, நாளடைவில் தேவதாஸிகள் மட்டுமே இந்தக் கலைகளில் ஈடுபடலாயினர். **(அடுத்த இதழில் முடியும்)**

இந்தியத் ''திரை உலகின் பொன் விழா'' கொண்டாடப் படவேண்டிய ஆண்டு இது. இந்த ஐம்பது ஆண்டுகளில் வெள்ளித் திரை அடைந்துள்ள வியக்கத்தக்க வளர்ச்சியை இக் கட்டுரையில் ஆராயும் ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி பிரபல டைரக்டர் ஸ்ரீ கே. சுப்பிரமணியம் அவர்களுடைய மகன். அமெரிக்காவில் கொலம்பியா சர்வகலாசாலையில் டெலிவிஷன் சினிமா போன்ற சாதனங்களின் உதவியுடன் மக்களுடன் தொடர்பு கொள்கின்ற கலையை (Mass communication) முறையாகப் பயின்று பட்டம் பெற்றனர்.



''அந்த நாள்'' படத்தில் சிவாஜி கணேசன்




புதிய ஜேய்

TJY-57-TAM

கலை வளர்க்கும் கோயில்கள்

பாரத நாட்டில் இருப்புப்பாதைகள் அமைத்துப் புதிதாக ரயில்கள் ஓட ஆரம்பித்த காலம். நிர்வாகமெல்லாம் நேரடியாக வெள்ளையர்களிடம் இருந்த காலமும்கூட. இருப்புப் பாதைகளைக் கவனித்துப் பராமரிக்க இங்கிலாந்திலிருந்தே இறக்குமதி செய்யப்பட்டார்கள், பட்டம் பெற்ற பல இஞ்சினீயர்கள்.

அவர்களில் ஒருவருக்கு ரயில்வே இலாகாவில் வெகு நல்ல பெயர். தமக்கென்று அளிக்கப்பட்டிருந்த 'சலூனி'லிருந்து இறங்காமலேயே, வண்டி ஓடிக் கொண்டிருக்கும்போதே எங்கே எங்கே பாதையில் கோளாறுகள் இருக்கின்றன, எங்கெல்லாம் திருகாணிகளை முடுக்கிவிட வேண்டும் என்று சொல்லி விடுவாராம். அவர் குறிப்பிட்ட கோளாறுகள் ஆங்காங்கு கவனிக்கப்படுவதற்காகக் காத்





திருந்து, அவருடைய வார்த்தைகளுக்கு அத்தாட்சியாக விளங்குமாம்.

அப்படிப்பட்ட திறமை வாய்ந்த இஞ்சினீயர், பின்னும் ஏதோ அவருடைய வேலைசம்பந்தப்படாத துறையில் ஒரு சிறு தவறு செய்து, மேலதிகாரிகள் அவருடைய சொந்த 'பைலை'ப் பரிசோதனை செய்தபோது திடுக்கிட்டுப் போனார்களாம். ஏனென்றால், அந்தத் திறமை வாய்ந்த இஞ்சினீயர், 'பொறியியல்' படிப்பில் எந்த விதமான பட்டமும் வாங்கியிருக்க வில்லை. அவர் வாங்கியிருந்த பட்டம் சங்கீதப் படிப்பில்தான். தம் சங்கீத ஞானத்தை அடிப்படையாகக் கொண்டு, வண்டி தண்டவாளங்கள் மீது ஓடும்போது தோற்றுவிக்கும் மாறுபட்ட சப்தங்களைக் கவனித்துக் குறைகளைக் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறார்!

இப்போதெல்லாம் வேலை தேடி வரும் பொறியியல் பட்டதாரிகளை, ரொமாந்திரச் சந்தைகளில், சட்டிப் பானைகளைக் கண்டிப் பார்த்து வாங்குவது போல், பட்டங்களையெல்லாம் நன்கு பரிசீலித்துத்தான் சேர்த்துக் கொள்கிறார்கள். அவர்கள், தங்கள் சங்கீத ஞானத்தை மாத்திரம் அஸ்திவாரமாகக் கொள்ள முடியாது! பொறி இயல் கல்லூரிகளில் சங்கீதம் சொல்லிக் கொடுப்பதுமில்லை!

ஆனால் உயர்ந்த தரமான சங்கீதத்துக்கும், மன அமைதிக்கும் நிறையத் தொடர்பு இருக்கிறது என்று அறிஞர்கள் சொல்கிறார்கள். இதனால்தானோ என்னவோ, இயற்கையே தென்றலாக இசைக்கும் அமைதி நிரம்பிய, அடையாறு — கிண்டி இணைப்புப் பகுதியில், கிண்டி பொறி இயல் கல்லூரி கம்பீரமாக எழுந்து நிற்கிறது. அந்தக் கம்பீரக் கலைக்கு எவ்வகையிலும் பொருத்தமாக, அமைதியும், அன்பும் சேர்ந்து உருவாக்கும் கல்லூரி முதல்வர் திரு ஏ. சீனிவாசன் உள்ளே அமர்ந்திருக்கிறார்.

இதே கல்லூரி மாணவராகப் பொறி இயல் பாடம் படித்து இதே கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி, அமெரிக்க நாட்டுக்குச் சென்று ஆராய்ச்சித் துறையில் பட்டம் பெற்றுத் திரும்பி இன்று இதே கல்லூரிக்கு முதல்வராகத் திகழும் திரு சீனிவாசனுக்குக் கல்வி அனுபவம் கைகொடுத்து உதவி செய்வதோடுகூட, மாணவர்களின் அறிவு வளர்ச்சியை ஒவ்வொரு கட்டத்திலிருந்தும், ஒவ்வொரு கோணத்திலிருந்தும் கவனித்து ஆவன செய்யக்கூடிய வாய்ப்பும் நிறைய இருக்கிறது.

இளைஞராக இருக்கும்போதே இந்தக்கல்லூரியுடன் தொடர்பு கொண்டதால், முதல்வர் இன்னும் இளைஞரின் உற்சாகமும் உணர்ச்சியும் கொண்டவராகக் காணப்படுகிறார். தம்முடைய கல்லூரியின் வளர்ச்சியைப் பற்றிப் பேசும்போது பெருமிதம் அடைகிறார்.


பாரதத்திலேயே பழமையானது கிண்டி பொறியியல் கல்லூரி. இன்று பாரதத்திலேயே அத்தனை நவீன சாதனங்களையும் கருவிகளையும் கொண்டதும் இந்தக் கல்லூரிதான்.

சுமார் நூற்றி எழுபது வருடங்களுக்கு முன்னால் அதாவது, 1794ம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனியாரால், எட்டு மாண

பொறி இயல் கல்லூரி

வர்களுக்கு. செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் 'சர்வே' பயிற்சி அளிப்பதற்காகத் தொடங்கப்பட்ட சர்வே பள்ளிதான் இன்றைய நிறைவுபெற்ற பொறி இயல் கல்லூரிக்கு இட்ட வித்தாகும். இன்று இந்தக் கல்லூரியில் கிட்டத்தட்ட ஆயிரத்து ஐந்நூறு மாணவர்கள் படிக்கிறார்கள்.

ஆரம்பிக்கப்பட்டு ஏறத்தாழ அறுபத்தி ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகுதான் இந்தக் கல்லூரி சர்வகலாசாலையின் இணைப்பைப் பெற்றது. 1920ல்தான் இடையே கிடைத்த தன் சேப்பாக்க வாசத்தை முடித்துக்





கொண்டு கிண்டிக்கு வந்து சேர்ந்தது. 1925ம் ஆண்டில்தான் முதல் தடவையாக ஓர் இந்தியர் முதல்வர் ஸ்தானத்தில் அமர்ந்தார். அந்த அதிருஷ்டம் ராவ்பகதூர் ஜி. நாகரத்தினம் ஐயர் என்பவருக்குக் கிட்டியது. ஓய்வு பெற்ற வாழ்க்கையை நடத்தும் அவர் கல்லூரியின் வளர்ச்சியைக் கண்டு களிப்படைந்து கொண்டிருக்கிறார்.

எந்தத் தந்தையுமே தன் மகன் ஓர் இஞ்சினியராகப் பிரகாசிக்க வேண்டும் என்று கனவு காணும் காலம் இது. ஆகவே ஜூன் மாதம் முழுதுமே சென்னை நகரில் இந்த வருங்கால இஞ்சினியர்களின் தந்தை, உறவினர், கூட்டம் அதிகமாகி நகருக்கு ஒரு கலகலப்பைத் தோற்றுவிக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. சிபாரிசு செய்யும் சக்தியுள்ள பெரிய மனிதர்களுக்கு அதே மாதிரி இந்த மாதம் முழுதும் நிரந்தரத் தலைவலி இருக்கும் என்பதும் என்னவோ உண்மைதான்.


இத்தனைக்கும் இந்தக் கல்லூரியில் முதல் ஆண்டு படிப்புக்கு 280 மாணவர்களைத் தான் தேர்ந்தெடுக்கிறார்கள்.

இந்த ஆண்டிலிருந்து பி. எஸ்ஸி. படித்துப் பட்டம் பெற்றுவரும் மாணவர்களின் மூன்று வருட கால இஞ்சினியரிங் படிப்புக்காக மேலும் என்பது மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள வசதி செய்திருக்கிறார்கள்.

சிவில், மெக்கானிக்கல், எலக்டிரிக்கல், எலக்டிரானிக்ஸூம் — டெலி கம்யூனிகேஷனும், சுரங்கக் கலை ஆகிய ஐந்து வெவ்வேறு விஷயங்கள் இங்கு போதிக்கப்படுகின்றன. முதல் இரண்டு வருடப் படிப்பு எல்லாருக்கும் பொதுவான அஸ்திவாரம் கொடுக்கும் படிப்பாம். கடைசி மூன்று ஆண்டுகளில், அவர்கள் ஒன்பது விதமான துறைகளில் ஆராய்ச்சி செய்து எம். எஸ்ஸி. பட்டம் பெற இங்கு வாய்ப்பு உண்டு.

''பரந்து கிடக்கும் பாரதத்தில், எங்கு ஒரு சிறந்த கட்டடமோ, நீர்த்தேக்கமோ பாலமோ எழுப்பப் பட்டாலும் அங்கே கிண்டி பொறியியல் கல்லூரி மாஜி மாணவரின் கைவண்ணம் காணலாம்' என்று கல்லூரி முதல்வர் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் கோவிந்தராஜ அய்யங்கார், திருமலை ஐயங்கார், கணபதி ஆகி



யோர்களின் பெயர்களை மக்கள் சுலபமாக மறக்க முடியாதபடி, ஒரு நாகார்ஜுன சாகர், ஒரு துங்கபத்திரை அணை, ஒரு சர்ச்கேட் (பம்பாய்) ரயில் நிலையம் என்றென்றும் விளங்குமே! அநேகமாக இந்திய ரயில்வேயின் பல பகுதிகளிலும் உள்ள பிராந்தியங்களிலும் இந்தக் கல்லூரி மாஜி மாணவர்களே பிரதான இஞ்ஜினியர்களாகப் பணியாற்றுகிறார்களாம்.

நூற்றி இருபது ஏக்கரா நிலப்பரப்பில் எழுந்து நிற்கும் இக்கல்லூரிக் கட்டடங்கள், ஒரு தனி ஊராகவே விளங்குகின்றன.

பல பாடங்களுக்கான விதம் விதமான பரிசோதனைச்சாலைகள், ஹாஸ்டல் கட்டடங்கள் நீச்சல் குளம் எல்லாம் சூழ்நிலைக்கு அழகும் மெருகும் ஏற்றுகின்றன. எல்லாரு மாணவர்களுக்கான ஹாஸ்டல் வசதி இங்கு இருக்கிறது. கல்லூரி வகுப்புகள் காலை சுமார் ஏழு அல்லது ஏழரை மணிக்கே ஆரம்பித்து விடுகிறபடியால், நகரத்தில் பெற்றோர்களுடன் இருக்கும் மாணவர்களே ஹாஸ்டலில் தங்கிப் படிப்பதில் ஆர்வம் காட்டுகிறார்கள். மற்றக் கலைக் கல்லூரிகளில், முற்பகல், பிற்பகல் என்று இரண்டு நேரப் பாடங்கள் என்றால் இங்கு காலை, முற்பகல், பிற்பகல் என்று மூன்று நேரப் பாடங்கள்.

'ராகிங்' (Ragging) என்ற ஆங்கிலப் பதத்துக்கு நேரான பொருள் எதுவாக இருந்தாலும் அதற்கு 'இம்சித்தல்' என்ற பொருளையே பொதுவாகக் கொள்ளலாம். கல்லூரியில் வந்து சேரும் முதல் வருட மாணவர்களை ஏற்கனவே அங்கு இருந்து அநுபவம் பெற்ற 'சீனியர்' மாணவர்கள் சித்திரவதை செய்வதைத்தான் இந்தப் பதம் குறிக்கிறது. இந்தச் சித்திரவதைக்கு ஒரு நாகரிகப் பூச்சும் கொடுக்கப்படுகிறது.

ஒரு சமயம் இந்தக் கல்லூரி ஆசிரியர்கள் பட்டியலிலுள்ள ஒரு நபரே இந்தச் சுழலில் சிக்கிக் கொண்ட கதை வேடிக்கையாக இருந்தது. அவர் பி. எஸ்ஸி. படித்து விட்டு இந்தக் கல்லூரி பரிசோதனைச்சாலையில் 'டெமான்ஸ்டிரேட்டரா'க வந்து சேர்ந்திருந்தார். உருவத்தில் சிறியவர். முகமும் கல்லூரி வட்டத்துக்குப் புதிது. சீனியர் மாணவர்கள், அவர் தனியாக வரும்போது சூழ்ந்து கொண்டார்கள். மரியாதையைக் கேட்டு வாங்க ஆரம்பித்தார்கள்.

டெமான்ஸ்டிரேட்டருக்குச் சமயோசித புத்தி கைகொடுத்து உதவியது.

''ஆசிரியர்களே ஆசிரியர்களை 'ராக்' பண்ணும் வழக்கம் இங்கிருப்பதாக நான் கேள்விப்படவில்லையே!'' என்றார் போலி வியப்புடன். அந்த சீனியர் 'ராக்' அன்பர்கள் விஷயமறிந்து திகைத்துப் பின்வாங்கினார்கள். தங்களையும் ஆசிரியர்கள் கோஷ்டியில் சேர்த்ததற்குப் புளகாங்கிதமடைந்து போனார்கள். டெமான்ஸ்டிரேட்டர் தப்பினார்!

இந்தக் கல்லூரியில் மாணவர் தலைவர், காரியதரிசித் தேர்தல் ஒரே அமர்க்களம் தானாம்!

வருடாந்திர டின்னரும் அப்போது சீனியர் மாணவர்கள் பேசும் பேச்சும் சரித்திரப் பிரசித்தி பெறும் நிகழ்ச்சியாகக் கருதுகிறார்கள் இந்தக் கல்லூரி மாணவர்கள். தங்கள் ஆசிரியர்களைக் கிண்டல் செய்யவும் அவர்களுடைய குறைபாடுகளைப் பெரிதாக்கிக் காட்டவும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். பேசவிருக்கும் வாசகத்தை முன்கூட்டியே கல்லூரி முதல்வர் ஓரளவு 'சென்ஸார்' செய்து கொடுப்பாராம். அதையும் பயனற்றதாக ஒரு வருடம், ஒரு மாணவ மணி, செய்து விட்டானாம்.

''இதோ! இதுதான் கல்லூரி முதல்வர் பார்த்து அநுமதித்த பேச்சு! இப்போது இந்த இரண்டாவது பேப்பரிலுள்ளதைத்தான் படிக்கப் போகிறேன்'' என்று 'சென்ஸார்' செய்யப்பட்ட தாளை அங்கேயே கிழித்தெறிந்து விட்டுப் பேசத் தொடங்கினானாம்.

அந்த மாணவன் துணிந்த பையன். முழுக்க முழுக்க அந்தக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற வேண்டும் என்ற அதிக ஆசை இல்லாதவன். இந்த நிகழ்ச்சி நடந்த சில நாட்களுக்குள்ளாகவே, வேறு எந்த கலைக் கல்லூரியிலாவது போய், விஞ்ஞானமோ, பொருளாதாரமோ எடுத்துப் படிக்கலாம் என்ற நோக்கத்துடன், கல்லூரி முதல்வரிடம் போய் நற்சாட்சிப் பத்திரம் கேட்டானாம். முதல்வர் அதற்குள்ளாகவா அவனுடைய வருடாந்திரப் பேச்சை மறந்திருப்பார்? ''பையன் கல்வித் துறையில் முயற்சி செலுத்துவதைவிட அரசியல் துறையில் நன்கு சோபிப்பான்'' என்று எழுதிக் கொடுத்தாராம். அதையும் கிழித்துப் போட்டு விட்டுத்தான் அந்த மாணவன் கல்லூரியை விட்டு வெளியேறினானாம்!

விரைவிலேயே இந்தக் கல்லூரிக்கு விலையுயர்ந்த 'எலக்ட்ரானிக் காம்ப்யூட்டர்' என்ற இயந்திரம் வரவிருக்கிறதாம். பொறி இயல் சம்பந்தமான எல்லாக் கணக்குகளையும் அந்த இயந்திரமே சில வினாடி நேரத்துக்குள் போட்டு விடுமாம்.

தொழிற் கல்வி டைரக்டர் திரு முத்தையவைப் பற்றிப் பெருமையுடன் தெரிவித்தார் கல்லூரி முதல்வர். அவருடைய ஊக்கத்தினால்தான் கல்லூரியின் புதுக் கட்டடங்கள் குறுகிய காலத்தில் எழுந்தனவாம்.

திரு முத்தையன் எத்தகைய பரந்த குணமுடையவர் என்பதை விளக்க வேறு ஒரு நிகழ்ச்சியும் தெரிய வந்தது.

ஓர் ஆசிரியர், சாதாரணமாகவே பரீட்சையில் பாஸ் செய்தவர், இங்கு பணியாற்றி வந்தார். அவருக்கு ஆராய்ச்சித் துறையில் உயர்ந்த விதத்தில் வெற்றி பெற்றுப் பட்டம் வாங்க ஆசை. இது சம்பந்தமாகத் திரு முத்தையனைப் பல தடவைகள் பார்த்துக் கேட்டாராம். ஆனால் தொழிற் கல்வி டைரக்டர் சரியானபடி பதில் சொல்லவில்லை. அதன் காரணமாக ஆசிரியர் மனம் நொந்திருந்த போது அந்த ஆசிரியரே திகைக்கும்படியான உத்தரவு வந்ததாம். அந்த ஆசிரியரை அமெரிக்காவுக்கு அனுப்பி ஆராய்ச்சிப் பட்டம் பெறத் திரு முத்தையன் சிபாரிசு செய்து அனுமதி பெற்ற உத்தரவு அது.

அந்த ஆசிரியர் இப்போது ஒரு முதல் வகுப்பு அமெரிக்க சர்வகலாசாலை ஆராய்ச்சிப் பட்டதாரி. 'சொல்லாமற் செய்வோர் பெரியோர்' என்ற பொன் மொழியை அவர் ஒரு நாளும் மறக்க மாட்டார் அல்லவா?

உங்கள் விலையுயர்ந்த செல்வங்களின் பாதுகாப்பு இப்போது மிகச் சுலபம்




விலையுயர்ந்த அணிகலன்களையும் நகைகளையும் முக்கியமான தஸ்தாவேஜுகளையும் உங்கள் வீட்டிலே வைத்துக்கொள்வதென்றும் அவை இடையூறுகளுக்கு உள்ளாகலாம். களவு, தீ போன்ற பல்வேறு விபத்துக்களுக்கு உள்ளாகி உங்கள் செல்வங்களை வீணே இழந்துவிடும் ஆபத்துக்கு இடங்கொடுப்பானேன்? ஸ்டேட் பாங்கின் உள்ளூர்த் தலைமை அலுவலகங்களும், கிளை அலுவலகங்களும் உங்கள் சொத்துக்களுக்குப் பத்திரமான பாதுகாப்புக்கான வசதிகளை மிதமான செலவில் செய்து கொடுக்கின்றன.

உள்ளூர்த் தலைமை அலுவலகங்களிலும் மற்றும் பற்பல முக்கிய கிளைகளிலும், பல்வேறு அளவுகளில், பந்தோபஸ்தான பீரோக்களை வாடகைக்குப் பெறும் வசதிகளும் உள்ளன.

ஸ்டேட் பாங்கில் உங்கள் மதிப்புமிக்க செல்வங்களை ஒப்படைப்பதன் மூலம், நீங்கள் அவற்றின் பாதுகாப்புப் பற்றிய கவலையே இல்லாமலிருக்கலாம்.

மேற்கொண்டு தேவைப்படும் விவரங்களுக்கு அண்மையிலுள்ள கிளை அலுவலக ஏஜெண்டை அணுகுங்கள்.



ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா

பாரதத்தின் தலைசிறந்த பாங்க்

SISTA'S-SB-65

குங்குமம்

அமெரிக்காவுக்கு மேல் படிப்புக்காகப் போய்த் திரும்பிய சுந்தர் உத்தியோக நிமித்தம் பம்பாய்க்குப் போய் வலியக் கொலைக் குற்றத்தைச் சுமந்துகொண்டு வளர் திரும்பினதும் போலீசுக்கு 'டிமிக்கி' கொடுத்துக் கொண்டு கிழவனாகவும், ஸ்திரீயாகவும், தமிழ் ஆசிரியராகவும், பிச்சைக்காரனாகவும் மாறு வேஷம் பூண்டு திரிந்து இறுதியில் நீதிமன்றத்தில் எல்லா உண்மைகளும் வெளியானதும் தப்புகிறான்.

சிவாஜி கணேசனுக்குப் பல வேடங்கள் புனைந்து பலவிதமாக நடிக்க நல்ல வாய்ப்பு கிட்டியிருக்கிறது. எதிர்பாராத விதமாகப் போலீஸ் குண்டுக்கு இரையாகிவிட்ட கோமதியின் சடலத்தைக் கண்டு விம்மியழும் போது அவர் நடிப்பு உருக்கமாயிருக்கிறது.

விஜயகுமாரியின் நடிப்பு ''குங்கும''த்தின் திலகமாகப் பிரகாசிக்கிறது. அப்பாவிப் பெண்ணாக வந்து காதலனுக்காக உயிர்த் தியாகமே புரிந்து விடுகிறாரே!

கனிவாக வரும் சாரதாவுக்கு எடுத்த எடுப்பிலேயே நல்ல 'சான்ஸ்'. சிவாஜியுடன் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்த மகிழ்ச்சியில் ஆடிப்பாடிக் கும்மாளம் போடுகிறார்.

பெற்ற மகன் ஒரு குற்றவாளியெனத் தெரிந்ததும் அவனைப் போலீசில் ஒப்படைக்கத் துடிக்கும் வீரத் தாய் ராஜம்மா. நடிப்புக்குக் கேட்பானேன்!

''சின்னஞ்சிறிய வண்ணப் பறவை என்னத்தைச் சொல்லுதம்மா'' என்ற ஒரு பாட்டு நன்றாயிருக்கிறது.

இன்ஸ்பெக்டராக வரும் எஸ். எஸ். ராஜேந்திரனின் நடிப்பு பிச்சைக்காரனாக வரும்



நெஞ்சம் மறப்பதில்லை

பூர்வ ஜன்மத்தில் பூர்த்தி பெறாத காதல் இந்த ஜன்மத்தில் பூர்த்தியாகிறது. பூர்வ ஜன்மத்தில் நிகழ்ந்தவைகளையெல்லாம் அப்படியே ஒருவனும் மனக் கண்ணால் பார்க்க முடிகிறது. இதே மாதிரி கற்பனைக்கு எட்டாத அபூர்வ நிகழ்ச்சி ஒரு பெண்ணின் நினைவிலும் ஏற்பட்டு அவளைப் பைத்தியமாக்குகிறது. அவனும் அவளும் பூர்வ ஜன்மத்து நிகழ்ச்சிகள் நடந்த பாழடைந்த பங்களாவுக்குப் போனதும் அவனுக்கு நினைவு திரும்புகிறது.

திரைக் கதையை நன்றாய்ப் புனைந்த ஸ்ரீதர் வசனத்தையும் அழகாக வரைந்து டைரக்ஷனிலும் தம் பெயரை நிலைநாட்டி விட்டார்.

கல்யாண் குமாருக்கு இந்த ஜன்மத்தில் மயங்கி நிற்கவும், பயந்து நடுநடுங்கவும்தான் சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன; ஆனால் பூர்வ ஜன்மத்தில் வீரத்தைக் காட்டவும், காதலிக்கவும், காதலிக்காக உயிர் துறக்கவும் அரிய சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றனவே! எல்லா இடங்களிலும் நன்றாய் நடித்திருக்கிறார், கல்யாண்குமார். இந்த ஜன்மத்தில் பாழடைந்த பங்களாவைக் கண்டு பயந்து

ஏக் தில் ஸௌ அஃப்ஸானே

நகைச்சுவையை மையமாகக் கொண்டு 'ஒரு மனம், நூறு கதைகள்' என்னும் பொருள் தரும் இந்திப் படத்தைத் தல்வார் பிலிம்சார் தயாரித்துள்ளதில் ஒரு நகைச்சுவை என்னவென்றால், படத்துக்கு மையமான இடைவேளைக்குப் பின்னரே கதை சூடு பிடிக்கிறது; நகைச்சுவையும் மெருகிடுகிறது.

சுந்தா என்னும் ஏழைப் பெண்ணைச் சேகர் என்னும் இளைஞன் காதலிக்கிறான். இருவருடைய முதல் சந்திப்பு, நெருங்கிப் பழகக் கிடைக்கும் வாய்ப்புக்கள் எல்லாம் மிக மிகப் பழமையானவை; பல படங்களில் கையாளப்பட்டவை.

சேகரின் பணக்காரப் பாட்டியின் சோதிடப் பைத்தியம் அவளை அவன் மணந்து கொள்ளக் குறுக்கே நிற்கிறது. சோதிடர்கள் அவன் ஜாதகத்தில் குழந்தைகள் இல்லையென்று கூறி விடுகிறார்கள். ஆனால் அவனோ பாட்டியின் ஆணையை மீறி வீட்டை விட்டு வெளியேறி அவளையே மணந்துகொள்கிறான். ஆத்திரம் கொண்ட பாட்டி தன் சொத்தைத் தானதர்மத்துக்கு எழுதி வைக்க முற்படும் வேளையிலே, தன் பேரனுக்குக் குழந்தை இருக்கிறது என்னும் செய்தி கிடைத்து அவனை பார்க்க வருகிறாள்.

பக்கத்துப் போர்ஷனில் இருப்பவர்களது குழந்தையைத் தன் குழந்தையாகப் பாட்டியிடம் கொண்டு வந்து விடுகிறான். இப்படியாக நம் தமிழ் நாட்டுப் படவுலகத்துக்குப் புதிதில்லாத கதை வளருகிறது. 'லோ இன்னிடென்'ஸும் கைகொடுத்து உதவுகிறது. சேர்க்கவேண்டிய இடத்தில் சேர்த்தால் எந்த நிகழ்ச்சியும் நன்றாகத்தானே இருக்கும்?

போது நன்றாயிருக்கிறது. நிரபராதி கோமதியைச் கட்டு விட்டு உள்ளம் உடைந்து வரும்போது நெகிழச் செய்கிறது அவரது நடிப்பு.

மர்மங்களை மறைத்து, 'சஸ்பென்ஸை' களைப் படம் முடிகிற வரையில் மூடி வைப்பது தான் மர்மக் கதையின் மரபு என்றாலும், கதையைக் குழப்பலாமா? வெறும் போலீஸ் ஊதலையும், மாறு வேடங்களையும் வைத்துக் கொண்டே ஒரு மர்மக் கதையைச் சமாளித்து விட முடியுமா?

பெற்ற தாயின் முகத்தில் 'குங்குமம்' அழிந்ததைப் பொறுக்காத மகன் துடிக்கிறான்! கதை அழிந்து போனதைப் பொறுக்க முடியாமல் நாம் துடிக்கிறோம்!

குங்குமத்தைப் பொட்டிட்டுக் கொண்டால் அழகு; வாரி முகத்தில் அப்பிக்கொண்டால்..?



நடுங்கி ஓரே ஓட்டமாக ஓடும் காட்சியை நெஞ்சம் மறக்கவில்லை.

பூர்வ ஜன்மத்துத் திமிர் பிடித்த ஜமீன்தார் நம்பியார். மகனுக்கு எதிராக அவர் காட்டும் வீரமும், தீரமும் அபாரம்!

தேவிகாவுக்கும் பூர்வ ஜன்மத்தில்தான் அதிக வாய்ப்பு. இந்த ஜன்மத்தில் பாழடைந்த பங்களாவில், கையில் ஏற்றிய மெழுகு வர்த்தியுடன் மெழுகுப் பொம்மையாக நகர்ந்து செல்வதையும், அறையில் அடைபட்டுக் கிடப்பதையும் தவிர வேறு சந்தர்ப்பம் எதுவும் சரியாயில்லை. பூர்வ ஜன்ம நிகழ்ச்சியில், பெற்ற தகப்பன் கையாலேயே சவுக்கடி பட நேர்ந்தபோதும், ஜமீன்தாரின் துப்பாக்கிக் குண்டை ஏற்றுக் கீழே விழுந்த போதும் உணர்ந்து நடித்திருக்கிறார் தேவிகா.

ஜமீன்தாரின் கட்டளைகளைச் சிரமேற்கொண்டு செய்து முடிக்கும் பக்தனாக வரும் சஹஸ்ரநாமத்தின் நடிப்பு நன்றாயிருக்கிறது.

பூர்வ ஜன்மத்துக் கதையில் வரும் நாகேஷ் ஜன்ம ஜன்மாந்தரங்களுக்கும் நினைத்து நினைத்துச் சிரிக்கும்படியான ஹாஸ்யங்களை அநாயாசமாக உதிர்க்கிறார்! சின்ன ஜமீன்தார் சிந்தனை வேகத்தில் இங்கும் அங்கும் உலாவுகிற சமயத்தில் ஓடி ஓடி அவர் கால்களைப் பிடித்துக் கொண்டு கதற முயன்ற ஒரு காட்சி போதும் — ரசித்துச் சிரிக்க! மனோரமாவும் அவருடன் சேர்ந்து கொண்டு ஹாஸ்யத்தைப் பரிமளிக்கச் செய்கிறார்.

''நெஞ்சம் மறப்பதில்லை'' என்ற பாட்டை எத்தனை தடவை கேட்டாலும் அலுக்கவில்லை.

பாழடைந்த பங்களா தத்ரூபமாயிருக்கிறது. ரொம்ப நன்றாய் அமைத்திருக்கிறார்கள். அநாவசியமான 'ஸெட்டு'களைப் போட்டு வீண் செலவு செய்யாமல் இயற்கைக் காட்சிகளைக் கொண்டே சமாளித்திருப்பது பாராட்டுக்குரியது.

நம்பியாரின் முரட்டு வேஷம், மேக்கப் எல்லாமே நன்றாயிருக்கின்றன. பூர்வ ஜன்மத்தில் மகனது காதலுக்குக் குறுக்கே நின்றவன் இந்த ஜன்மத்திலும் குறுக்கே நிற்பது கதையின் முடிவுக்குச் சுவையூட்டுகிறது. நம்பியார் அந்தப் பாகத்தையும் மிகவும் இயல்பாகச் செய்திருக்கிறார்.

சின்ன சம்பவத்தை வைத்துக் கொண்டு புது மாதிரியான கதையைப் புனைந்திருப்பதை வரவேற்க வேண்டியதுதான். —காந்தன்

சுந்தா கர்ப்பமுற்று இரட்டைக் குழந்தைக்குத் தாயாகும் வரை கதையைக் கொண்டு போய்ச் சுபமாக முடிக்கிறார்கள்.

நகைச்சுவைக்கு மெருகூட்ட நிகழ்ச்சிக் கலவையும் மிகைபட்ட நடிப்பும் இன்றியமையாதவை போலும்! கொனஷ்டை மிகுந்த ராஜ்கபூரின் அத்துமீறிய நடிப்பு ஒரு சில இடங்களைத் தவிர மற்ற இடங்களில் சோபிக்கிறது. கதாநாயகியாக நடிக்கும் வஹீதா ரஹ்மான் தமது அடக்கமான நடிப்பினாலேயே நல்ல பெயர் தட்டிக் கொண்டு போகிறார். லலிதாபவாரின் நடிப்பும் நல்ல 'பவர்' உள்ளதாக அமைந்துள்ளது. டுன் டுனின் நடிப்பும் இந்தப் படத்தில் நல்ல நகைச்சுவையோடு மிளிருகிறது. நேரமிருப்பவர்கள் பொறுமையைச் சோதிக்கும் முற்பகுதியையும் சேர்த்துப் பார்க்கலாம். நேரம் இல்லாதவர்கள் பிற்பகுதியை மட்டும் கண்டு மகிழலாம்.





ஆகஸ்டு
15உ
முதல்
தென்னாடெங்கும்
சென்னையில்
18உ
முதல்
தேவர் பிலிம்ஸ்
நீதிக்குப்பின்
பாசம்
டைரக்ஷன்-M.A.திருமுகம்
தயாரிப்பு
சாண்டோ M.M.A.சின்னப்பாதேவர்
ELEGANT
சென்னை: சித்ரா, கிரௌன், மேகலா

சமீபத்தில் காலஞ்சென்ற பாலபாரதி ச. து. சுப்பிரமணிய யோகியார் அவர்களைத் தமிழர்கள் நன்கு அறிவார்கள். அவருடைய சிறந்த இலக்கியப் படைப்புகளில் "அகல்யா", "மேரி மகதலேன்", "உமர்கய்யாம்" முதலியவை தனிப் புகழ் பெற்று விளங்குகின்றன. ஆவேசக் கனல் ததும்பும் அவரது தேச பக்திப் பாடல்கள் நாட்டின் அடிமைத் தளையை அகற்ற அருமருந்தாக உதவின. தமிழகம் இவரது அறுபதாண்டு நிறைவு விழாவைக் குதூகலமாகக் கொண்டாடவிருந்த தருணத்தில் யோகியார் எல்லோரையும் துயரத்தில் ஆழ்த்தி விட்டுத் தமிழன்னையின் திருவடி நீழலை அடைந்து விட்டார். அவரை நன்கு அறிந்த ஸ்ரீ பி. எஸ். ராமையா அவரைப் பற்றிய தம் அனுபவத்தை எழுதியிருக்கிறார். – ஆசிரியர்

பாலபாரதி யோகியார்

பி.எஸ்.ராமையா

ஹரிஜன நிதி திரட்டுவதற்காக, காந்திஜி 1934ல் தமிழ்நாட்டுக்கு வந்தபோது சென்னையில் நான் கண்ட தரிசனம் என் மனத்தில் அதிசயக் காட்சியாகப் பதிந்திருக்கிறது.

தெய்வம் சக்கரவர்த்தித் திருமகனுகவும் கண்ணபெருமானுகவும் வடிவெடுத்து இந்தப் புண்ணிய நாட்டு மண்ணின் மேல் நடந்து சென்றதை விவரிக்கும் கவிதைகளைப் படிக்கும்போதெல்லாம் என் கற்பனையில் அந்த அழகுக் காட்சியைக் காண முயன்று உணர்ச்சி வசப்பட்டுவிடுவது எனக்கு வழக்கமாகிவிட்டது. அன்று காந்திஜி சென்னைக்கு வந்த பொழுது அத்தகைய ஒரு காட்சியை நேருக்கு நேர் காணுவது போன்ற ஓர் உணர்ச்சி அனுபவம் எனக்குக் கிட்டியது.

காந்திஜி ஏறியிருந்த கார் சென்ட்ரல் ஸ்டேஷன் வளைவிலிருந்து வெளியேற முயன்று திணறியது. வெளியில் மக்கள் கடல். கூட்டம் நெரித்துக் கொண்டிருந்தது. கார் ஓர் அங்குலம் அளவுகூட நகர இயலவில்லை. காதை அடைக்கும் கோஷம். காந்திஜி உதட்டின் மேல் ஒரு விரலை வைத்துக் காட்டிக் கையை அப்படி வீசினர். கோஷம் கப்பென்று அடங்கியது. கார் செல்லும் அளவுக்கு வழி விட்டு ஒதுங்கிப் பத்தி கட்டி நின்றூர்கள் மக்கள். கார் வசதியாக முன்னேறியது.

அந்த அதிசயத்தைக் கண்ட உள்ள எழுச்சியுடன் நாங்கள் முன்னும் விரைந்து காந்திஜி வந்து சேர இருந்த ராயப்பேட்டை காங்கிரஸ் மாளிகை வாசலை அடைந்து காத்திருந்தோம். நாதகரக்காரர் "ராரா மஇண்டிதாக" என்ற கீர்த்தனத்தை முழக்கினர். அந்த இசையும், அந்தக் கிருதியின் கருத்தும் சேர்ந்து உள்ளத்திலே பெரும் கிளர்ச்சி செய்ய, காந்திஜி காரிலிருந்து இறங்கி நடந்து வந்த காட்சி எனக்கு ஒரு திவ்விய தரிசனமாகவே பட்டது.



இன்னொரு முறை அதே போன்ற ஒரு காட்சியைச் சொல்லோவியமாகக் கேட்டு உடல் சிலிர்த்து உள்ளம் பொங்கிப் பெருக வாய்த்தது எனக்கு.

"மணிக்கொடி" அலுவலகத்தின் மூன்றுவது மாடியில் நிறைந்த நிலவொளியில் புதுமைப் பித்தன், கு. ரா., சிட்டி முதலியவர்களுடன் அமர்ந்திருந்தேன். பால பாரதி ச. து. சு. யோகியார் தாம் படைத்த "மேரி மகதலேன்" என்ற சிறந்து பகுதியைப் பற்றிய கவிதையைச் சிருஷ்டி கர்வத்துடன் பாடிக் காட்டிக் கொண்டிருந்தார். அந்தக் கவிதையில் அவர் ஏசு பெருமான் நடந்து வரும் காட்சியை வர்ணிக்கும் இடத்தைக் கேட்கக் கேட்க என் மனக் கண் முன் அன்று காந்திஜி நடந்து வந்த காட்சி ஒளி வீசிக் கொண்டு எழுந்தது. அந்தத் தரிசன அனுபவம் மறுபடி கிட்டியது போலிருந்தது. அவ்வளவு சிறப்பாக, அழகாக, ஒளி ஓவியமாக அந்தக் காட்சியைத் தமிழ்ச் சொற்களால் தீட்டியிருக்கிறார் யோகியார்.

1931ல் கராச்சியில் நடக்கவிருந்த நவஜவான் பாரத சபையினரின் மகாநாட்டில் தொண்டர் படை அமைத்துப் பயிற்சி அளித்துச் சேவை செய்யப் புறப்படும்படி எனக்குக் கட்டளை பிறந்தது. அந்த ஊருக்குப் போய் மகாநாட்டு அலுவல்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது 'செக்கச் செவேலென்று' ஆஜானுபாகுவான ஒருவர் "வெல்க காளி" என்று ஒலிக்கொண்டு உள்ளே வந்தார். அவர்தான் பால பாரதி ச.து.சு. யோகியார் என்று எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். சரியாக ஒரு மணி நேரத்துக்குள் யோகியார் என்னைத் தம் வசப் படுத்திக் கொண்டு விட்டார்.

பின்னும் அவர் காஞ்சிபுரம் "குமார விகடன்" பத்திரிகையின் ஆசிரியப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதிலிருந்து அவருடைய எழுத்துக்களை நிறையப்படிக்கவாய்ப்புக் கிடைத்தது.

'மணிக்கொடி' காலத்தில் நாங்கள் அடிக்கடி கூடிப் பழகி அளவளாவவும் வாய்த்தது. அப்போது அவர் வாயாலேயே அவருடைய "கன்னலி" கவிதையைக் கேட்டுப் பரவசமடைந்தேன். நம் நாட்டில் கிருகலட்சுமி, மனை விளக்கு, இல்லின் திரு என்று பெண்ணை உயர்த்தி ஏற்றுக் கொண்டிருக்கிறோம். யோகியார் "கன்னலி"யை 'இல்லின் தெய்வம்' என்று பாடியதைக் கேட்டு என் மெய் சிலிர்த்தது.

முதிய பாரதியின் கவிதைகளில் அடிமோதும் அழகுகளையே எடுத்துக் காட்டும் நூல்கள் இன்னும் தோன்றுத நிலையில் பால பாரதியின் கவிதைகளை விளக்கிக் காட்டும் நூல்கள் தோன்ற வேண்டும் என்று நான் சொல்லுவதால் எவ்வளவு பயன் கிட்டிவிடும்!

குண்டு மல்லிகை

அரு. ராமநாதன்

உமா எஸ். எஸ். எல். ஸி. வரை தான் படித்தவள் என்றாலும், இடைக் காலத்தில் அவள் எத்தனையோ விதமான ஆங்கிலப் புத்தகங்களையும் தமிழ்ப் புத்தகங்களையும் படித்து, தன் அறிவை விருத்தி செய்து கொண்டு, 'பி. ஏ. எம்.ஏ.' படித்த பெண்களைவிடச் சிறந்த மேதையாக விளங்கினாள். அந்த அறிவின் பண்பாடும், அமைதியான சுபாவமும் அன்புள்ளமும் உமாவின் மாநிறமான முகத்துக்கு ஒரு தனி அழகையும் கவர்ச்சியையும் ஊட்டியிருந்தன.

பிச்சுமணி தன் தலையைத் துண்டினால் துவட்டிக் கொண்டிருந்ததால் அவனுடைய அழகான கிராப்புக் கலைந்து போயிருந்தது.

அதை அவன் சுட்டிக் காண்பித்து, "இந்தக் கோலத்தோடு நான் வீட்டுக்குப் போனால் நான் யாரோடாவது சண்டை போட்டு விட்டு வந்திருக்கிறேனென்று தாத்தா 'கிராஸ்' கேள்விகளையெல்லாம் போடுவார்!" என்று சொன்னவன் சங்கோசப்பட்டுக் கொண்டு, "உங்களிடம் தலை வாரும் சீப்பு இருக்குமே?" என்று மெல்லக் கேட்டான்.

உமா புன்முறுவலுடன் உள்ளே சென்று தன் சீப்புக் கண்ணாடி அடங்கிய பெட்டியை எடுத்து வந்து கொடுத்தாள். அதில் உள்ள பொருள்களில் எல்லாம் ஒருவித நறுமணம் கமழ்ந்து கொண்டிருந்தது. அந்தச் சீப்பினால் பிச்சுமணி தலைவாரிக் கொள்ளும் பொழுது அவனது உடலிலெல்லாம் ஒரு புளகாங்கிதம் உண்டாயிற்று.

பிறகு உமா பார்க்காத சமயமாகப் பார்த்துப் பிச்சுமணி பவுடர் டப்பியை மெல்லத் திறந்து கொஞ்சம் பவுடரை எடுத்துச் சட்டென்று தன் முகத்தில் பூசிக்கொண்டு உடனே கைக்குட்டையால் அதைத் துடைத்தும் விட்டான்.

அதை உமா பார்க்காதவள் போலப் பார்த்துத் தன் மனத்துக்குள் சிரித்துக்கொண்டாள்.

ஆனால் இவ்வளவு நல்லவன் வாயில்லா ஜீவனான ஒரு நாயை அப்படிக் கொடூரமாக பெல்டினால் ஏன் அடித்தான்...?

உமா யோசித்தபடி, "பிச்சுமணி! நீ காருக்கு வந்ததுமே அந்த நாயின் காதைப் பிடித்துப் பரபரவென்று இழுத்துத் தள்ளப் பார்த்தாயே? உனக்கு அவ்வளவு ஆத்திரம் எதனால் ஏற்பட்டது?" என்று கேட்டாள்.

வளையல் கடையில் வசந்தி தன்னை அசட்டுப் பிச்சு என்றும், பெண்களின் பின்னலைப் பிடித்து இழுக்கக் கூடத் தைரியமில்லாத கோழை என்றும் கூறித் தன்னை அவமானப் படுத்திய சம்பவத்தை வெளியே சொல்லவே அவனுக்குச் சங்கடமாக இருந்தது. ஆனாலும் தன் மனத்துக்கு இதமான ஓர் அன்புள்ளத்திடம் அதைச் சொல்வதால் வெட்கம் ஒன்றும் இல்லை என்று நினைத்து அப்படியே நடந்த விஷயங்களைத் தத்ரூபமாக எடுத்துச் சொன்னான்.

அவற்றையெல்லாம் கேட்ட உமாவின் நெஞ்சு ஒரு கணம் திக்கென்று அடித்துக் கொண்டது. தன் தங்கை வசந்தி குழந்தைத்தனமாகவும் குறும்புத்தனமாகவும் சொன்ன ஒரு வார்த்தை என்னென்ன வடிவமெடுத்து எவ்வளவு பெரிய ரகளையை உண்டாக்கியிருக்கிறது என்று சிந்தித்தாள்.

பிறகு அவள் பிச்சுமணியை நோக்கி, "அந்தப் பெண் விளையாட்டாகச் சொன்னதை நீ மனத்தில் வைத்துக் கொள்ளாதே!... நீ அசடல்ல, அவள்தான் அசடு!" என்றாள்.

பிச்சுமணிக்குத் தன் மனத்திலிருந்து பெரிய பாரம் நீங்கிவிட்டதைப் போல் இருந்தது.

"சரி, உனக்கு வீட்டுக்குப் போக நேரமாகவில்லையா? உன் தாத்தா கோபித்துக் கொள்ள மாட்டாரா?" என்று உமா கேட்டாள்.

"ஆமாம், ஆமாம்! குறித்த நாழிகைக்குள் நான் வீட்டுக்கு ஆஜராகா விட்டால் தாத்தா உண்ணாவிரதத்தை ஆரம்பித்து விடுவார்!" என்று கூறிப் பிச்சுமணி சிரித்தான்.

"சரி, நீ நேரே வீட்டுக்குப் போய் ஈரச் சட்டையை மாற்றிக் கொள்!" என்றாள் உமா.


பிச்சுமணி கிளம்பினான். ஆனால், இரண்டடி நடந்ததும் மறுபடியும் திரும்பி வந்து உமாவின் அருகிலேயே நின்றான்.

"என்ன?" என்றாள் உமா.

பிச்சுமணி தயங்கினான்.

"என்ன? சும்மா சொல்லு...!"

"வந்து... வந்து...." என்று பிச்சுமணி சங்கோசத்துடன் நெளிந்தான்.



"என்ன; வந்து வந்து....?"

"ஒன்றுமில்லே. ஒரு புதுப் பூவின் வாசனை கமகமவென்று வீசுகிறது. அது எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு!"

"புதுப் பூவா?"

"ஆமாம், அது வந்து...."

"அதுவந்து ... குண்டு மல்லிகை! அதன் வாசனையைத்தானே சொல்கிறாய்?" என்றாள்உமாபுன்முறுவலுடன்.

"ஆமாம். எனக்கு ஒரு பூ..." என்று பிச்சுமணி கேட்டான். உமா தன் தலை நிறையச் சூடியிருக்கும் குண்டு மல்லிகைச் சரத்திலிருந்து ஒரு பூவை எடுத்துத் தன்னிடம் கொடுப்பாள் என்று அவன் எதிர்பார்த்தான்.

"கொஞ்சம் இரு!...." என்று திரும்பிய உமா நேரே பூஜை அறைக்குள் சென்று அவளுடைய சின்னப் பிள்ளையாருக்குச் சூட்டியிருந்த குண்டு மல்லிகைச் சரத்திலிருந்து ஒரே ஒரு பூவை எடுத்து வந்து பிச்சுமணியிடம் கொடுத்து, "இதை உன் காதில் பய பக்தியுடன் வைத்துக் கொள்!" என்று அதே புன்முறுவலோடு சொன்னாள்.

பிச்சுமணி அவளுடைய பிள்ளையாரை நினைத்துத் தன் தலையில் இரண்டு குட்டுக் குட்டிக் கொண்டு, காதில் மல்லிகைப் பூவைச் செருகிக் கொண்டு ஒரு புதுச் சிரிப்புடன் . உமாவின் வீட்டிலிருந்து கிளம்பிச் சென்றான்.

அத்தியாயம் ஐந்து

கடிகார வாழ்க்கை

ஸாந்தோம் டேவிட்சன் தெருவில் உள்ள தேவாரம் சிவஷண்முகத்தின் வீட்டில் அபூர்வமான அமைதி குடிகொண்டிருந்தது. வீட்டில் வசந்தி இல்லாவிட்டால் அப்படிப்பட்ட அமைதிதான் குடிகொண்டிருக்கும்!

அது ஒற்றை மாடி வீடு! பங்களாவின் தோரணையில் கட்டப்பட்டது. அதன் சுவர்களுக்கு அமெரிக்க பாஷனை ஒட்டிப் புது வர்ணங்கள் பூசப்பட்டுக் கண்களுக்கு அழகாக விளங்கியது.

அதன் முன்புறம் ஒரு சிறு தோட்டம்! அதில் தேவாரத்தாரின் இனிய சம்சாரம் ராஜம்மா 'தோட்டக் கலை' புத்தகம் ஒன்றைப் படித்ததின் விளையாகப் பல விதமான குரோட்டன்ஸ்களையும் பூஞ்செடிகொடிகளையும் அருமையாக வளர்த்து 'வன மகோற்சவம்' கொண்டாடி யிருந்தாள். ஆனால் அந்தத் தோட்டத்தில் பூக்கும் ஒரு பூவை யாவது வசந்தி தன் தலையில் சூடிக் கொண்டு கல்லூரிக்குப் போக முடியாது! அங்கு காய்க்கும் ஒரு காயை யாவது சமையற்காரன் கோவிந்தன் சமைக்க முடியாது!

அங்கு தோட்டக் கலையை ராஜம்மா ஆரம்பிப்பதற்கு முன்னால் அவளுக்கும் தேவாரத்தாருக்குமிடையே ஒரு சிறு வாக்குவாதம் மூண்டது. தேவாரத்தார் தமது வியாபார மனப்பான்மையை ஒட்டி அங்கு ஒரு காய்கறித் தோட்டம் போடலாம் என்று வாதாடினார். ஆனால் அது அநாகரிகமென்று ராஜம்மா அடித்துப் பேசி, "நல்லாயிருக்கு. வீட்டுக்கு முன்னால் ஒரு சிறு வயல் போட்டு விவசாயம் செய்யலாம் என்று சொல்லாமல் போனீர்களே" என்று ஓர் எதிர்க் கேள்வியும் போட்டு அவரை மடக்கி, 'முகத்துக்கு அழகு மூக்குக் கண்ணாடி; வீட்டின் முகப்புக்கு அழகு குரோட்டன்ஸ்' என்கிற ரீதியில் தீர்ப்பும் வழங்கி விட்டாள். அதற்குமேல் அப்பீல் ஏது....?

அந்த வீட்டில் தேவாரம் சிவஷண்முகத்தைத் தவிர மற்றப் பொருள்களெல்லாம், சமையல் பாத்திரங்கள் உட்பட, நவீன நாகரிகத்தையே பறைசாற்றிக் கொண்டிருக்கும். அவற்றின் மத்தியில் தேவாரத்தாரும் அவருடைய சாய்மானக் குறிச்சியும் தான் பழைமையின் 'விடாப்பிடியான' சின்னங்கள்!

ஐம்பது வயதைக் கடந்து விட்ட பிறகு தேவாரம் சிவஷண்முகம் 'அப்பாடா' என்று ஓய்ந்து வீட்டில் பெரும்பாலும் அந்தச் சாய்மானக் குறிச்சியிலேயே சாய்ந்து கொண்டு யோக நித்திரை புரிவார்.

சோம்பேறிகளில் மூன்று ரகம் உண்டு: பிறவி மேதைகளைப் போல் சிலர் பிறக்கும் போதே பிறவிச் சோம்பேறிகளாய்ப் பிறக்கிறார்கள். சிலர் வாழ்க்கையின் ஓட்டத்தில் சோம்பேறித்தனத்தைச் சுயமாகச் சம்பாதித்துக் கொள்கிறார்கள். சிலர் மீது சோம்பேறித்தனம் பலவந்தமாகத் திணிக்கப்படுகிறது.

இவற்றில் தேவாரம் சிவஷண்முகம் மூன்றாவது ரகத்தைச் சேர்ந்தவர்! அவருடைய இனிய சம்சாரம், "நீங்க பேசாம இருங்க! எல்லாம் நான் பார்த்துக்கறேன்!" என்று சொல்லிச் சொல்லியே அவர் மீது பலவந்தமாகச் சோம்பேறித்தனத்தைத் திணித்து விட்டாள்.

தேவாரம் சிவஷண்முகத்துக்கு வயதாகித் தொழில் துறைகளிலிருந்து 'ரிடையராகி' வீட்டுக்குள்ளேயே ஒடுங்கி விட்

டாலும் அவருடைய உடம்பு இன்னும் ரிப்பேர் ஆகிவிடவில்லை! சோம்பேறித் தனத்தாலும், சுகமான சாப்பாட்டிஞ லும், பழம்பெருமைகளைப் பற்றிய நினை வின் பூரிப்பினுலும் அவர் ஒரு பெருந் தொந்தியுடன் பூசணிப் பழம் போல் விளங்கினர். ஆனால் அவருடைய உடம் பில் குறிப்பிடத் தக்க வியாதிகள் எது வும் குடியேறிவிடவில்லை என்றாலும்,- கொஞ்சம் 'பிளட் பிரஷர்' (இரத்த அழுக்கம்) மட்டும் ஏறி இறங்குவதுண்டு! அதன் காரணமாக அவர் அடிக்கடி முன்கோபம் கொண்டு எரிந்து விழு வதும் அதை ராஜம்மா தன் வசனங் களால் அணைப்பதும் வழக்கம்.

சிவஷண்முகம் தம் வீட்டிலேயே அடைந்திருந்தாலும் கூட, தினசரி மழுமழுவென்று முக க்ஷவரம் செய்து கொள்ளத் தவற மாட்டார். அந்தப் பரந்த முகம், சுத்தமாகவும், தட்டை யாகவும் 'டின்னர்' பிளேட்டைப்போல் மினுமினுக்கும். சலவை வேஷ்டி, ஜரிகை அங்கவஸ்திரம், வெள்ளிப் பூண் பிடித்த கைத்தடி, தலையின் முன்புறம் விழுந்தி ருக்கும் வழுக்கை, அதிகாரத்தை நிலை நாட்ட முயலும் முகபாவனைகள், அதை யொட்டிச் சதா நெரித்த புருவங்கள், கூர்மையான விழிகள், கம்பீரமான தோற்றம், இவையெல்லாம் சேர்ந்து அவருடைய கடந்த கால ஆதிக்கத்தை, நிகழ்காலத்துக்கு இழுத்து வர அரும் பாடு பட்டுக் கொண்டிருக்கும்.

ஆனால் அவர் மூத்த சம்சாரம் பார் வதி இறந்து போய், அந்த ஸ்தானத்தில் இளையவளாக ராஜம்மா வந்து குடி யேறியதுமே அவருடைய ஆதிக்க மெல்லாம் போய் விட்டது.

அவருக்கு மூத்த சம்சாரம் பார்வதி என்றால் கொள்ளைப் பிரியம்! அவர் தேவாரம் கிராமத்திலிருந்து ஒரு முழுத் துண்டோடு வெளியேறி, சென்னைக்கு வந்து பார்வதியைக் கல்யாணம் செய்துகொண்டு தொழில் துறையில் ஈடுபட்ட பிறகுதான் அவருக்கு வாழ்க் கையின் சகல சம்பத்துக்களும் கிடைத் தன. அவருடைய இளமைப் பருவத் தின் இன்ப துன்பங்கள், தொழில் துறை களின் ஆரம்ப கால கஷ்ட நஷ்டங்கள் அனைத்திலும் பார்வதி சரி சமமான பங்கு கொண்டு அவருக்கு அளவில்லாத உற்சாகத்தையும், வாழ்க்கையில் ஒரு பிடிப்பையும், முன்னேற்றத்தில் ஒரு சுவாரசியத்தையும் உண்டுபண்ணினுள். அவள் தமக்கு அபூர்வமாகக் கிடைத்த மகாலட்சுமி என்று சிவஷண் முகம் சதா போற்றி மகிழ்வார். அவ ளுடன் வாழ்ந்த நாட்களை நினைத்துக் கொண்டால் இப்போதும் கூட அவர் உடம்பெங்கும் பரவசம் பொங்கும். அவள் இப்போது இல்லையே என நினைக்கும்போது நெஞ்செல்லாம் விம் மும். முதற் காதலுக்குத்தான் ஆழ்ந்த சக்தியும் அர்த்த புஷ்டியும் உண்டு என்ற தத்துவம் உண்மை யென்றால் அதற்கு அவர் பார்வதிமீது கொண்ட காதல்தான் உதாரணமாக விளங்க முடியும். ஆனால் துரதிர்ஷ்டவசமாகப் பார்வதிக்குக் குழந்தை உமா பிறந்த வுடன் பிரசவ ஜன்னியில் அவள் இறந்து போய்விட்டாள். ஒன்றின்மீது அபரிமிதமான ஆசை வைக்கக்கூடாது என்பதற்காகத்தான் தன்னிடமிருந்து பார்வதியை ஆண்டவன் எடுத்துக் கொண்டு விட்டாரென்று சிவஷண்முகம் தம்மை எவ்வளவோ சமாதானப் படுத்திக் கொள்ள முயன்றார். ஆனால் குழந்தை உமா தன் தாயின் அழகை யும், சாயலையும் அப்படியே உரித்துக் கொண்டு பிறந்திருந்ததால் உமாவைப் பார்க்கும்போதெல்லாம் சிவஷண்முகத் துக்குச் சம்சாரத்தை இழந்துவிட்ட துக் கம்தான் நினைவில் வந்து உறுத்தும். அதனால் குழந்தை உமாவின் முகத் தைப் பார்க்கவே அவர் சங்கடப்படு வார். தாய்க்கு எமனாக முளைத்த பெண் என்று ஆத்திரமும் படுவார்.

அந்தக் குழந்தை உமாவைக் கவ னித்து வளர்ப்பதற்கு ஒரு மறு தாய் தேவை யென்றும், சிவஷண்முகத்துக் கும் மறு வாழ்க்கைக்கு ஒரு வாழ்க்கைத் துணைவி அவசியம் என்றும், உற்றார் உறவினர்கள் வற்புறுத்தி, ராஜம்மாவை அவருக்கு இரண்டாந் தாரமாகக் கல் யாணம் செய்து வைத்தார்கள்.

"அடடா! மழை பெய்கிறதே!"
"பெய்தால் என்னவாம்? நீங்கள் வீட்டுக்குள்ளேதானே சுகமாய் இருக் கிறீர்கள்? நனையப் போவதில்லையே?"
"என் மனைவி வெளியே கிளம்பிப் போயிருக்காளே!"



"எத்தனை கரிச னம் ஐயா! மழை பிடித்துக் கொண் டதும் ஏதாவது கடை கண்ணியில் ஒதுங்கிக் கொண்டு இருள்...!"
"ஐய்யய்யோ! அப்படி ஏதாவது கடைக்குள் நுழைந்து விடப்போகி ளோ என்றுதானே நான் பயப்படு கிறேன், ஐயா!"

ராஜம்மா சுபாவத்தில் நல்லவள்தான்! ஆனால் அவளுடைய கணவர் மூத்த சம்சாரத்தைப் பற்றிய நினைவுகளிலேயே சதா மூழ்கி, அவளுடன் வாழ்ந்த நாட்களைப் பற்றியே ஓயாமல் ஆசையாகவும், பெருமையாகவும் தொணதொணத்துக் கொண்டிருந்தால் ராஜம்மா எப்படிப் பொறுப்பாள்? அவளும் பெண்தானே? அவளும் அவருடைய உள்ளத்துக்குப் பாத்தியதையாகி அந்த வீட்டில் குடும்பம் நடத்தி அதன் இன்பங்களை யெல்லாம் அனுபவிக்க வந்த வாழ்க்கைத் துணைவிதானே? அதனால் தன் கணவரை இறந்த காலத்திலிருந்து தட்டி எழுப்பி, நிகழ் காலத்தில் நடமாட விட்டு, வருங்காலத்தை வளப்படுத்தத் திட்டமிட்டாள். அதற்கு முதற் படியாக அந்த வீட்டில் மூத்தாளின் ஆதிக்கத்தை நினைவுபடுத்தக் கூடிய விஷயங்களை யெல்லாம் அப்புறப்படுத்தினள். வீட்டுத் தோட்டத்தில் மூத்தாள் நட்டு வளர்த்திருந்த குண்டு மல்லிகைக் கொடியைக் கூடப் பிடுங்கி யெறிந்து விட்டாள்!

இதெல்லாம் பழைய கதை. இப்போது தேவாரம் சிவஷண்முகத்துக்கு இளைய சம்சாரம்தான் உலகம்! இளைய சம்சாரத்தின் பெண் வசந்திதான் இப்போது அவருக்கு உள்ள ஒரே பிரச்னை!

அவர் வழக்கம் போல் அன்றைய இரவும் கொலுக் கூடத்தில் உள்ள சாய்மான நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்.

கூடத்தில் மின்சார மெர்க்குரி விளக்கு பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது.

சிவஷண்முகத்தின் பெரிய விழிகள் அடிக்கொரு தரம் சுவர்க் கடிகாரத்தை ஏறிட்டு நோக்கின. இரவு மணி எட்டே காலை நெருங்கிக் கொண்டிருந்தது.

ராஜம்மா ஒரு புறம் குஷன் சோபா மீது அமைதியாக உட்கார்ந்து ஆங்கில நாவல் ஒன்றை வெகு சுவாரசியமாகப் படித்துக் கொண்டிருந்தாள். ஆனாலும் இடையிடையே அவள் தன் மூக்குக் கண்ணாடியை எடுத்து எடுத்துத் துடைத்து மூக்கில் மாட்டிக் கொண்டு அந்தக் கண்ணாடியின் வழியாகத் தன் கணவரை ஜாடையாகக் கவனிக்கத் தவறவில்லை.

ராஜம்மாவுக்கு நாற்பது வயதுதான் ஆகியிருந்தது. பெங்களூர் தக்காளிப் பழம் போல் சிவப்பாகவும் தளதளவென அழகாகவும் இருந்தாள். சில பெண்களுக்கு வயது ஏற ஏறத்தான் வனப்பில் ஒரு தனி மெருகும் கவர்ச்சியும் ஏற்படுவதுண்டு. அந்த ரகத்தைச் சேர்ந்தவள்தான் ராஜம்மா.

மூக்குக் கண்ணாடி, அஜந்தாக் கொண்டை, அதைச் சுற்றிலும் மஞ்சள் கனகாம்பரம், ஒரே நிறத்தில் 'மாட்ச்' ஆகப் புடவை ரவிக்கை, ஒரு கையில் ரிஸ்ட் வாட்ச், மற்றொரு கையில் ஒரு ஜோடி தங்க வளையல் முதலானவற்றுடன் பல்வேறு செயற்கை அலங்காரங்களும் சேர்ந்து கொண்டு அவளை இன்னும் சின்னப் பெண்ணாகவே காட்ட முயன்று கொண்டிருந்தன. அவளை எதிரே உட்கார வைத்து எவ்வளவு நேரம் அழகு பார்த்துக் கொண்டிருந்தாலும் கணவரின் கண்களுக்குப் போதாது!

ஆனால் அன்றைய தினம் சிவஷண்முகம் ராஜம்மாவின் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை! சுவர்க் கடிகாரத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்.

நிமிஷம் ஆக ஆக ராஜம்மாவின் உள்ளத்தில் கலவரம் அதிகரித்துக் கொண்டிருந்தது. ஆனால் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நாவல் புத்தகத்தின் சுவாரசியத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள முயன்றாள்.

சிவஷண்முகம் கடைசி முறையாகச் சுவர்க் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, ''இன்னும் வீட்டுக்கு வசந்தி வரவில்லை! வழக்கம்போல் இன்னைக்கும் அவள் லேட்டாகத்தான் வரப் போகிறாள்!'' என்று கத்தினார். பிறகு தம் மடியில் கிடந்த தினசரிப் பத்திரிகையை எடுத்து விசிறி எறிந்தார்.

ராஜம்மா யுத்த காண்டத்தை ஆரம்பிக்க விரும்பாதவளாய் மெல்ல ஒரு பெருமூச்சு விட்டு விட்டுப் பேசாமல் இருந்தாள்.

''சைக்கிளிலே வசந்தி பட்டணப் பிரவேசம் போய் ஊரெல்லாம் சுற்றி விட்டுத்தான் வருவாள்! இல்லே, வழியிலே ஏதாவது தகராறு செய்து வீண் வம்பை வீடுவரை இழுத்துக் கொண்டு வருவாள்! இதுவே அவளுக்கு வழக்கமாயிடுச்சு!'' என்று சிவஷண்முகம் மறுபடியும் உரத்த குரலில் கத்தினார்.

அதற்கும் ராஜம்மா பதில் சொல்லவில்லை. அவள் தன் கணவரையும் அவருடைய கோபத்தையும் ஒரு சிறு புன்சிரிப்பினாலோ, அல்லது ஒரு முகச் சிணுங்கலினாலோ அடக்கியாளும் சாமர்த்தியம் படைத்தவள்தான் என்றாலும் தன் பெண் வசந்தி இரவு நேரத்தில் லேட்டாக வீட்டுக்கு வரும் விஷயத்தில் மட்டும் 'தந்தையின் கண்டிப்புக்கும்' கொஞ்சம் இடம் கொடுக்க விரும்பினாள்.

''நான் சொல்வது உன் காதில் விழுகிறதா, இல்லையா?'' என்று சிவஷண்முகம் விறிட்டு அலறினார்.



ரூ. 2,000
பரிசுகளாக!
புதிதாகப் பிறந்த
குழந்தைகளுக்கென
மானேர்ஸ்
அதிர்ஷ்டக் குழந்தை விழா
முதற் பரிசு: ரூ. 1,250
2-வது பரிசு: ரூ. 500
3-வது பரிசு: ரூ. 250
1963
ஜூலை, ஆகஸ்ட்
மாதங்களில்
பிறந்த குழந்தை
களுக்கென
உங்கள் குழந்தை விழாவில் சேரும் விதம்: உங்கள் குழந்தை பிறந்த நேரம், தேதி, பெயர், உங்கள் விலாசம் முதலியவற்றை எங்களுக்கு அனுப்புங்கள். அத்துடன் மானேர்ஸ் கிரைப் மிக்ஸ்சர் அட்டைப் பெட்டியின் மேற்புற மூடியொன்றையும் இணைத்து அனுப்புங்கள்.
லக்கி பேபி பெஸ்டிவல், தபால் பை எண். 10116, பம்பாய்—1.
முக்கியம்: 1963 ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் பிறந்த குழந்தைகள் மாத்திரம்தான் இந்த விழாவில் கலந்து கொள்ளலாம். சேரக் கடைசி தேதி: 15-9-1963
மானேர்ஸ் கிரைப் மிக்ஸ்சர் குழந்தைகளைச் சிரித்த முகத்துடன் வைத்திருக்கிறது.
GEOFFREY MANNERS & CO. LTD.

ராஜம்மா புத்தகத்திலிருந்து தன் முகத்தைத் தூக்காமலே, "என்ன சொன்னீங்க?" என்று மெல்லக் கேட்டாள்.

"மணி ஒன்பது அடிக்கப் போகிறது. இன்னும் உன் பெண் வீட்டுக்கு வந்து சேரவில்லை. இப்போதாவது காதில் விழுந்ததா? இல்லே, கண்ணுக்கு மூக்குக் கண்ணாடி மாதிரி காதுக்கும் ஏதாவது மிஷின் வேண்டுமா?"

'உன் பெண்' என்று தன் கணவர் சொன்னதும், ராஜம்மாவுக்குச் 'சுர்' ரென்று கோபம் வந்து விட்டது. இருந்தாலும் மனத்தை அடக்கிக் கொண்டு அவள் தன் முகத்தைப் புத்தகத்தில் மறைத்துக் கொண்டாள்.

"அப்படி என்ன சுவாரசியமான நாவல் படிக்கிறே?" என்று சிவஷண்முகம் பொறுமை இழந்து கத்தினார்.

ராஜம்மா விருட்டென்று சோபாவிலிருந்து எழுந்து புத்தகத்தைக் கையோடு தூக்கி வந்து, தன் கணவரின் முகத்துக்கு எதிரே அந்த நாவலின் மேல் அட்டையைக் காண்பித்து, "நீங்களே என்ன நாவல் என்று பாருங்கள்!" என்றாள்.

"காதலுக்குக் காலம் இல்லை!" என்று தலைப்பிடப்பட்டுள்ள அந்த ஆங்கில நாவலின் மேல் அட்டைமீது கவர்ச்சிகரமான 'போஸ்'ஸில் காதல் ஜோடி ஒன்றின் பல வர்ணப் படம் வார்னிஷின் பளபளப்போடு கண்ணையும் நெஞ்சையும் ஒருங்கே அள்ளியது.

சிவஷண்முகத்துக்கு அழுவதா, சிரிப்பதா என்று புரியவில்லை. வயது வந்த ஒரு பெண்ணுக்குத் தாயாராக இருந்தும் தம் சம்சாரம் இன்னும் சின்னப் பெண்ணைப் போல் காதல் நாவல்கள் படிக்கிறாளே என்று உள்ளூற நினைத்துக் கொண்டார்.

ராஜம்மா தன் கரு விழிகளை உயர்த்தி மூக்குக் கண்ணாடியின் வழியாகத் தன் கணவரை மிருதுவாகப் பார்த்து அழகாக ஒரு புன்முறுவலும் பூத்தாள்.

"உன் பெண் விஷயத்தை விட்டு விட்டு என்னிடம் தமாஷ் பண்ணுறியே, என்ன?"

"'உன் பெண், உன் பெண்' என்று பிரித்துப் பேசுகிறீர்களே, மூத்தாள் பெண் உமா மட்டும்தான் உங்கள் பெண்ணா? வசந்தி உங்கள் பெண் இல்லையா?" என்று ராஜம்மா வெடிப்பது போல் கேட்டாள்.

"உமாவைப் பற்றி இப்போது ஏன் அனாவசியமாய்ப் பேச்செடுக்கிறாய்?"

"பின்னே? 'உன் பெண், உன் பெண்' என்று குத்திக் காட்டினால்?"

"நீ வசந்திக்குச் செல்லம் கொடுத்து வளர்த்த முறையைத்தான் அப்படிக் குத்திக் காட்டினேன்!"

"நான் வளர்த்த முறையில் என்ன தப்பு வந்து விட்டது?"

"தினசரி இராத்திரி எட்டரை மணிக்கு மேல் வீட்டுக்கு வருகிறாள். அது சரியா? சைக்கிள் சாம்பியன்போல் ஊரெல்லாம் சுற்றுகிறாள். அது சரியா? ஆண், பெண் என்று வித்தியாசம் பாராமல், பெரியவர்கள், சின்னவர்கள் என்று கூட யோசிக்காமல், எல்லோருடனும் சரிக்குச் சமமாக வாதாடி, வீண் தகராறுகளை விலைக்கு வாங்கிக் கொண்டு வருகிறாள். அது சரியா?"

"ஏதோ கொஞ்சம் விளையாட்டுப் புத்தியாகத் திரிகிறாள்."

"அவளுக்கென்ன தெருவில் பாண்டி விளையாடுகிற வயசா? இதிலே வேறே காலேஜிலே பி. ஏ. படிக்கிறாள்."

"என்ன படித்தாலும் இன்னும் அவளுக்குக் குழந்தைத்தனம் போகலே!"

"அது குழந்தைத்தனமா? இல்லே, அது குறும்புத்தனம், விஷமத்தனம்! ரௌடித்தனம்!"

"இன்னும் அகராதியில் என்னென்ன வார்த்தை இருக்கிறதோ, அத்தனையும் சொல்லுங்கோ. ஆனால் உங்கள் பெண் உங்கள் சுபாவத்தைக் கொண்டு பிறந்திருக்கிறாள்."

"பையனாகப் பிறக்க வேண்டியவள் பெண்ணாகப் பிறந்திருக்கிறாள் என்கிறாயா? பையன் இல்லாத குறையைப் பையனாக வசந்தியை வளர்ப்பதில் தீர்த்துக் கொள்ளலாமென்று தீர்மானித்து விட்டாயா?" என்றார் சிவஷண்முகம்.

"என்னோடு ஏன் வம்புக்கு வருகிறீர்கள்? வசந்தி அப்படி நடந்தால் நான் என்ன பண்ணுகிறது?"

"என்ன பண்ணுகிறதா? பெண்ணை அடக்கி வளர்க்க வேண்டும். நீயோ வசந்தியிடம் பயப்படுகிறாய்! இரண்டு வார்த்தைகள் அவள் எதிர்த்துப் பேசி விட்டால் என்ன செய்வதென்று யோசிக்கிறாய். பெற்றோர்களைப் பார்த்துக் குழந்தைகள் பயப்படும்படியாக வளர்க்க வேண்டுமே தவிர, குழந்தைகளைப் பார்த்து நாம் பயப்படும்படியாக வளர்க்கக் கூடாது!"

"அதுக்காகப் பிரம்பை எடுத்தா அடிக்க முடியும்? இந்தக் காலத்துப் 'பசங்களின்' போக்கை நம்மால் புரிந்து கொள்ளவே முடிவதில்லை. காலத்தையொட்டித்தான் நாமும் போக வேண்டியிருக்கிறது!"

"நல்ல காலம்! உன்னுடைய நவீன நாகரிக சித்தாந்தத்தால்தான் வசந்தி அப்படி ஆகிவிட்டாள். குழந்தைகளுக்கு நாம்தான் ஒரு வழிகாட்டி. அதைப் பின்பற்றும்படி செய்ய வேண்டும்!"

"ஆனால், வசந்தி எதுக்கும் வீடராக இருப்பாளே தவிர, எதையும் பின்பற்றுபவளாகத் தோன்றவில்லை!"

"அவ்வளவு தூரத்துக்கு நீ அவளுக்குச் சுதந்திரம் கொடுத்து விட்டாய்!"

"ஆமாம். அது தப்புத்தான்! இனிமேல் நீங்களே அவளைக் கண்டித்து வளருங்கள். நான் அதில் தலையிடவில்லை."

"வெகு அழகாக இருக்கிறது. அவள் தலைக்கு மிஞ்சிப் போய்விட்டாள். ஏதாவது நான் மிரட்டலாம் என்று நினைத்தால் அவள் இரண்டு ஹாஸ்ய வெடிகளைப் போட்டுச் சிரிக்கிறாள். நான் அவளோடு சேர்ந்து சிரித்துத்தான் நம்முடைய கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது" என்று குமுறிய சிவஷண்முகம், "ஆனால் இனிமேல் அவளுடைய தந்திரமெல்லாம் பலிக்காது. இன்றைக்குப் பார்! முதல்லே அவளுடைய சைக்கிளை—" என்று அவர் சொல்லி முடிக்கவில்லை, அதற்குள் கொலுக் கூடத்தின் வாசற்புறம் இன்னொரு குரல் அந்த வாக்கியத்தை முடித்து விட்டது!

"சைக்கிளை நீங்கள் உடைக்க வேண்டாம், அப்பா! அது தானாகவே உடைந்து போச்சு!" என்று வசந்தி சைக்கிளைக் கையால் தள்ளிக்கொண்டு வந்து, கூடத்துக்கு முன்னால் உள்ள நடை பாதையில் சுவரோரமாகச் சாய்த்து வைத்தாள். அந்த சைக்கிள் ஏதோ லாரியின் மீது மோதியதற்கு அறிகுறியாக அதன் முன் சக்கரத்தின் 'ரிம்' வளைந்து நெளிந்து போயிருந்தது.

வசந்தி ரப்பர் பந்துபோல் துள்ளிக் குதித்துக் கொண்டு கொலுக் கூடத்தினுள் பாய்ந்து வந்தாள்.

சிவஷண்முகம் முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டாரே தவிர எதுவும் பேசவில்லை. ஆனால் ஏதாவது போலீஸ் கேஸ் வந்துவிடுமோ என்று உள்ளே தவித்துக் கொண்டிருந்தார்.

ராஜம்மா பரபரப்புடன் "ஏதாவது ஆக்ஸிடெண்டா, வசந்தி?" என்று கேட்டாள்.

"இல்லையம்மா, நம்ம காம்பவுண்டு கேட்டுக்குத்தான் சின்ன ஆக்ஸிடெண்டு! தெருச் சகதியில் வழுக்கி கேட் மீது சைக்கிள் மோதிடுச்சு!" என்றாள் வசந்தி.

"வாசல் 'கேட்'டையும் உடைத்து விட்டாயா?" என்று தேவாரம் சிவஷண்முகம் படாரெனக் கத்தினார்.

"இல்லையப்பா, அதிலே கொஞ்சம் பெயிண்டுதான் பிய்ந்து போயிருக்கு!" என்றாள் வசந்தி நளினமாக.

அவளை நோக்கி, ராஜம்மா "வசந்தி! மணி என்ன ஆகிறது, பார்!" என்றாள் சற்றுக் கண்டிப்பு நிறைந்த குரலில்.

"நம் சுவர்க் கடிகாரத்தில் எட்டரை மணி ஆகிறது அம்மா!"

"வசந்தி! இராத்திரி நேரத்தில் வீட்டுக்கு லேட்டாக வரக் கூடாதென்று நேற்றே சொன்னேன். ஞாபகமிருக்கா!"

"இருக்கம்மா!"

"இன்னிக்கும் நீ எதனாலே லேட்டாக வந்தாய்?"

"இல்லையம்மா! திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவில்லே திருவிழா நடக்கிறது, இல்லையா...?" என்று வசந்தி சமாதானப் படலத்தை ஆரம்பித்தாள்.

தேவாரம் சிவஷண்முகத்துக்கு மகா கோபம் வந்து விட்டது.

"நீ ரொம்பப் பக்தி சிரத்தையாகப் பெருமாள் தரிசனம் பார்க்கப் போயிருந்தாய் என்று எங்களை நம்பச் சொல்லுகிறாயா?" என்று அவர் கத்தினார்.

"இல்லையப்பா! திருவிழாக் கூட்டத்துக்காக அங்கே நிறைய வளையல் கடைகள் வந்திருக்கும்... புது டிசைன் வளையல்களாக அம்மா கை நிறையப் போட்டுப் பார்க்கணும் என்று எனக்கு ஆசையாய் இருந்தது...."

"உன் அம்மாவுக்கு எதுக்குக் கண்ணாடி வளையல்? அவள்தான் தங்க வளையல் போட்டிருக்கிறாளே?"

"இருந்தாலும் கண்ணாடி வளையல்கள்தானப்பா 'கிளிங், கிளிங்' என்று ஜோராகச் சத்தமுண்டாக்கும்!" என்றாள் வசந்தி.

அவள் உணர்த்திய கண்ணாடி வளையல்களின் ஒலித் தத்துவத்தைப் புரிந்து கொண்டு ராஜம்மா உள்ளூறச் சிரித்துக்கொண்டாள். தன் மகள் பெற்றோர்களின் கண்டிப்பை யெல்லாம் மீறிச் சுயேச்சையாக நடந்து கொள்கிறாளே என்று அவளுக்குச் சிறிது மனக் குறை இருந்தாலும் புத்திசாலிப் பெண்ணான வசந்தி எந்தத் தவறான வழிக்கும் போக மாட்டாள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையும் அவளுக்கு இருந்தது.

"சரி, வசந்தி! வா, சாப்பிடப் போகலாம்! உனக்காகச் சாப்பாட்டை எடுத்து வைத்துக் கொண்டு எவ்வளவு நாழி காத்திருக்கிறது?" என்று ராஜம்மா கருதி குறைந்த குரலில் கூறிக் கொண்டே சமையலறையை நோக்கி நடந்தாள்.

வசந்தி மெல்லத் தன் அம்மாவைப் பின்தொடர்ந்தாள்.

ஆனால் தகப்பனாருக்கு இன்னும் கோபம் அடங்கவில்லை.

"வசந்தி, நில்! இதை நீ வீடாக மதிக்கவில்லை. உன் இஷ்டப்படியெல்லாம் வந்து போவதற்கு இதை ஒரு ஹோட்டலாக நினைக்கிறாய்!" என்று சிவஷண்முகம் முழங்கினார்.

"அப்பா! இதுக்கு நான் பதில் சொன்னால் உங்களுக்குக் கோபம் வரும்" என்றாள் வசந்தி பரிவுடன்!

ஆனால் அவள் என்ன பதில் சொல்வாள் என்பது சிவஷண்முகத்துக்குத் தெரியும்! 'வீடு என்பதைக் குழந்தைகளின் ஜெயிலாக்கி, பெற்றோர்கள் சிறை வார்டன்களாக இருக்க விரும்புகிறார்கள். அது இந்தப் புரட்சிக் காலத்தில் நடக்காது!' என்ற பதிலைத்தான் வசந்தி சொல்வாள்!

அதனால் சிவஷண்முகம் அவளை முறைத்துப் பார்த்தார்.

வசந்தி தன் கருவிழிகளின் சுழற்சியில் ஒரு விதக் கனிவை வரவழைத்துக்கொண்டு தன் தகப்பனாரின் மீது அளவுகடந்த வாஞ்சையைப் பொழிவது போல் ஒரு பார்வை பார்த்துவிட்டு, "அப்பா! என் போக்கிலே

"அப்பா! சாயந்திரம் டிபனுக்கு நீ எத்தனை இட்டிலி சாப்பிடுவாய்?"

"நாலு!"

"ரொம்பப் பசியாயிருந்தால்?"



"ஆறு!"

"வயிறு காலியாகவே இருந்தால்?"

"எட்டு இட்லிகூட உள்ளே இறக்கலாம்!"

"நீ சொல்றது தப்பு! வயிறு காலியா இருக்கறச்சே ஒரு இட்லி தானே சாப்பிட முடியும்? அதுக்கப்புறம்தான் வயிறு கொஞ்சம் நிரம்பி விடுமே...?"

எந்த விதத் தப்பும் இல்லே. ஆனால் உங்களுக்காக இனிமேல் நான் ஒழுங்காக டயப்படி வீட்டுக்கு வந்து 'கடிகார வாழ்க்கை' நடத்த முயற்சி பண்ணுகிறேன்" என்று சொன்னாள். சிவஷண்முகம் மௌனமாகத் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டார். வசந்தி மெல்லத் தன் தகப்பனார் அருகில் வந்து அவருடைய காதை நோக்கிக் குனிந்து, "அப்பா! கோவில் பூக்கடையிலே அக்காவைப் பார்த்தேன். உங்களையும் அம்மாவையும் பார்க்கவேண்டுமென்று உமா அக்கா உள்ளூற ஆசைப்படுகிறாள். எனக்குக் கண்ணிலே தண்ணீர் வந்துடுச்சு, அப்பா!" என்றாள்.

அதைக் கேட்டதும் தகப்பனாரின் கோபமெல்லாம் இருந்த இடம் தெரியாமல் பஞ்சாகப் பறந்து போய் அவருக்குக் 'கோ'வென அழவேண்டும் போல் இருந்தது!

அதற்கு மேல் வசந்தி அங்கு நிற்கவில்லை. அவள் சமையலறைக்குள் சென்று சாப்பாட்டுக் கடையை முடித்துக் கொண்டு, தன் அம்மாவுக்கு இதமான கதைகள் எல்லாம் அளந்துவிட்டு மாடியிலுள்ள தன் தனி அறைக்குக் குதித்தோடி வந்து கட்டிலில் படுத்தாள்.

அவளுக்கு உடனே தூக்கம் வந்துவிடுவது வழக்கம் என்றாலும், அன்றைய இரவு உடனே தூக்கம் வந்துவிடவில்லை.

பேபி ஆஸ்டின் கார் ஓட்டும் மேஜர் வீட்டுப் பையன் பிச்சுமணிக்கு அவள் அசட்டுப் பட்டம் கட்டிய சம்பவத்தை மறுநாள் தன் கல்லூரித் தோழிகளிடம் எப்படியெல்லாம் ஜோடித்துச் சொல்லிச் சிரிக்கலாம் என்ற கற்பனையில் ஈடுபட்டாள்.

அதன் பிறகு தூக்கத்தில் கூட அவளுடைய மலர் முகத்தில் புன்சிரிப்பு விளையாடிக் கொண்டிருந்தது. (தொடரும்)



முப்பத்திரண்டாவது அத்தியாயம்

காலையில் சத்தியமூர்த்தி விழித்து எழுந்திருப்பதற்கு முன்
பாகவே குமரப்பன் எழுந்து நீராடி உடை மாற்றிக் கொண்டு
மாடி வராந்தாவில் குறுக்கும் நெடுக்குமாக உலாவிக் கொண்டே
எதிர்ப்புறம் மலைக் காட்சிகளையும், ஏரியையும் பார்த்து இரசித்துக்
கொண்டிருந்தான். ஆள் மிகவும் உற்சாகமாய் இருப்பதற்கு ஓர்
அடையாளம் போல் அவனுடைய வாயிதழ்கள் ஏதோ விருப்ப
மான பாடலைச் சீட்டியடித்துக் கொண்டிருந்தன.

''இதென்ன புது வழக்கமாக இருக்கிறதே, குமரப்பன்? நீ
எப்போதுமே நேரங் கழித்து விழித்துக் கொள்கிறவனாயிற்றே?''
என்று கேட்டுக்கொண்டே படுக்கையிலிருந்து எழுந்து வந்தான்
சத்தியமூர்த்தி. சுந்தரேசன் இன்னும் எழுந்திருக்கவில்லை. இழுத்
துப் போர்த்தி உறங்கிக் கொண்டிருந்தார்.


''ரொம்ப நாட்களாக ரொம்ப விஷயங்களில் நேரம் கழித்துத்
தான் விழித்துக் கொண்டிருந்தேனடா, சத்தியம்! ஆனால் இப்போ
தெல்லாம் சீக்கிரமாக விழித்துக் கொள்ள ஆரம்பித்துவிட்டேன்.
காலையில் மட்டுமில்லை. எல்லா நேரத்திலும் எல்லா விஷயங்
களிலும் சீக்கிரமாக விழித்துக் கொள்ள ஆரம்பித்துவிட்டேன்''
என்று குமரப்பன் கூறிய பதிலில் இரண்டு தொனி இருந்தது.
சத்தியமூர்த்தி அவ்வளவில் விட்டுவிடாமல் நண்பனை மேலும்
தூண்டிக் கேட்டான். ''என்னதான் சொல்கிறாய் நீ? உன்னுடைய
திடீர் வரவுதான் ஆச்சரியமாக இருக்கிறதென்றால் நீ பேசுகிற
பேச்சும் ஆச்சரியமாகவே இருக்கிறது குமரப்பன்! கொஞ்சம்
புரியும்படியாகத்தான் சொல்லேன்.''

''நீ என்னுடன் ஒரு மணி நேரம் தனியாக வெளியில் உலாவ
வருவதற்குத் தயாரா யிருந்தால் எல்லாவற்றையும் சொல்
கிறேன். சொல்வதற்கு ஒன்றும் பெரிய விஷயம் இல்லை. ஆனால்
உன்னைப் போல் ஓர் உண்மை நண்பனிடம் எல்லாவற்றையும்
மறைக்காமல்] சொல்லியும் ஆகவேண்டும். நான் எதைச் சொல்
லப் போகிறேனோ அதில் நீ கவலைப்படுவதற்கும் ஒன்றுமில்லை
நான் கவலைப்படுவதற்கும் ஒன்றுமில்லை! தனக்காகத் தான் கவ
லைப்படுவதே அவமானம் என்று எண்ணும் உண்மைத் தைரிய
சாலி ஒருவன் தனக்கு அநுதாபப்படுவதாகப் பிறர் கவலைப்படு
வதை எப்படிப் பொறுத்துக்கொள்ள முடியும்?'' என்று சொல்லி
விட்டுச் சிரித்தான் குமரப்பன். அவசரமாகப் பல் விளக்கி
நீராடி முடித்துக்கொண்டு நண்பனுடைய வேண்டுகோளை மறுக்
காமல் அவனோடு உலாவச் சென்றான் சத்தியமூர்த்தி. பக்கத்து
உணவு விடுதியில் காலைக் காப்பி சிற்றுண்டியை முடித்துக் கொண்டு
புறப்பட்டார்கள் நண்பர்கள். சிறிது தொலைவு வரை மௌனமாக
நடந்த பின்பு குமரப்பன் தானாகவே பேச்சை ஆரம்பித்தான்.

''குத்து விளக்கில் வருகிற வாரம் என்ன கார்ட்டூன் வரும்
என்று நேற்றிரவு நீ என்னைக் கேட்டாயல்லவா? கொந்தளிக்கும்
கடலில் ஒரு சிறு படகு தத்தளிப்பதாகவும் அந்தப் படகின் நடுவே
ஒரு குத்து விளக்கு காற்றில் ஆடி யசைந்து அவிவதாகவும்
வரைந்து, கொந்தளிப்பின் மேல் ஊழல் என்றும் படகின் மேல்
தரமின்மை என்றும் எழுதி நிர்வாகியின் மேஜை மேல் கொண்டு
போய் எறிந்தேன். திரும்பிப் பாராமல் வந்து விட்டேன். கடந்த
ஒரு வாரத்துக்குள் அந்தப் பத்திரிகையின் நிர்வாகம் உரிமை
எல்லாம் கைமாறி மஞ்சள்பட்டி ஜமீன்தாரிடம் போய்விட்டது
அவரும் கண்ணாயிரமும் அடிக்கடி காரியாலயத்துக்கு வந்து
எல்லாரையும் வாயில் வந்தபடி பேசி மிரட்டுகிறார்கள். கணக்கு
வழக்குகளைப் புரட்டிப் பார்த்தபோது, காரியாலயத்தில் யார்

பொன் விலங்கு

மணிவண்ணன்



யாருக்கு என்ன சம்பளம் என்று விசாரித்த ஜமீன்தார், என் சம்பளத்தைப் பற்றிக் கேட்டதும், 'என்ன அநியாயம்? அப்பிடியும் இப்பிடியுமா இரண்டு கோட்டை இழுத்துப் பொம்மை போடறவனுக்கு இவ்வளவு சம்பளமா?' ன்னு கேட்டாராம். அதுதான் சமயமென்று பக்கத்திலிருந்த கண்ணாயிரம், 'இத்தனை சம்பளம் போதாதுன்னு திமிர் பிடிச்ச ஆனாலும் வேறு வந்து சேர்ந்திருக்கான்' என்று என்னைப் பற்றிச் சொன்னானும். ஒரு தொழிலை நாம் செய்கிற போது அந்தத் தொழிலைப் பற்றி முதலில் நமக்கு ஒரு சுயமரியாதை வேணும். இல்லாவிட்டால் அதை நாம் நாணயத்தோடு செய்ய முடியாது. அந்தச் சுய கௌரவத்தைக் கூடப் புரிந்துகொள்ளாத இடத்திலிருந்து குப்பை கொட்டுவதைவிட நடந்து காட்டிவிடுவது மேல் என்று நடையைக் கட்டிவிட்டேன். கண்ணாயிரம் என்ற குரங்கு குத்து விளக்கு என்ற மலர் மாலையை எடுத்துக் குலைப்பதாக ஒரு படம் வரைந்து அந்தப் படத்தின் மேலே 'குரங்கு கையிலகப்பட்ட பூமாலை' என்றும் எழுதி என்னுடைய ராஜினாமாக் கடிதத்தோடு சேர்த்து அனுப்பி விட்டு மூட்டையைக் கட்டிக் கொண்டு மல்லிகைப் பந்தலுக்கு வந்து சேர்ந்திருக்கிறேன். 'ஏன் இங்கே வந்தாய்?' என்று நீ என்னைக் கேட்க மாட்டாய்! கேட்டால் அதற்கும் பதில் தயாராக வைத்திருக்கிறேன். வேலைக்குத் தலை முழுகிவிட்டு வந்த உற்சாகத்தை யாராவது ஓர் உண்மை நண்ப



டினோபால் பளபளப்பு

உங்கள் ஆடைகளுக்கு டினோபால் பளபளப்பை—ஒளிவீசும் அதிசயப்படியான வெண்மையின் பளபளப்பைக் கொடுங்கள். டினோபால் மட்டுமே உங்கள் வெள்ளை ஆடைகளை கண்கூசும் வெண்மையடையச் செய்யும்!

மேலும்,

டினோபால் மிகச் சிக்கனமானது!

டினோபால் பளபளப்பை அடைய நேரமோ பணமோ வீணாவதில்லை. ஒரு கால் தேக்கரண்டி டினோபால் ஒரு வாளி நிறைந்த ஆடைகளை வெண்மையாக்கப் போதுமானது!

ஞாபகமிருக்கட்டும்—

ஒரு சிறிதளவு

டினோபால்

வெள்ளைத் துணிகளை மிக
வெண்மையாக்கப் போதுமானது.

டினோபால் என்ற வார்த்தை ஜே. ஆர். கெய்கி, எஸ். ஏ. பாஸல், ஸ்விட்ஸர்லாந்து என்பவர்களுடைய ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்காகும்.

தயாரிப்பாளர்கள்:
சுஹ்ரித் கெய்கி லிமிடெட். வடோதா, பரோடா

ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்:
சுஹ்ரித் கெய்கி ட்ரேடிங் லிமிடெட். த. பெ. 965. பம்பாய்-1. பி. ஆர்.

TAM SISTA'S-SGJ-75A

ளோடு இருந்து கொண்டாட வேண்டும் என்று தோன்றியது. அதை உன்னோடு கொஞ்ச நாள் இருந்து கொண்டாடலாம் என்ற எண்ணத்தோடு வந்திருக்கிறேன்....''

குமரப்பனுடைய பேச்சில் வருத்தத்துக்குப் பதில் உற்சாகம்தான் அதிகமாக இருந்தது. எல்லாவற்றையும் கேட்டபின் சிறிது தொலைவு ஒன்றும் பதில் பேசாமல் சத்தியமூர்த்தி தயக்கத்தோடும் மௌனத்தோடும் நடந்து வந்ததைக்கூடக் குமரப்பனால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ''என்னடா சத்யம்! பதில் பேசாமல் வருகிறாயே? நான் செய்து விட்டு வந்தது ஏதோ பெரிய ஆகாத காரியம் என்று நினைத்து நீ அதற்காகத் துக்கம் கொண்டாடுவதாக இருந்தால் நாளைக்கே நான் இங்கிருந்து பஸ் ஏறிவிடுவேன். உன்னை நான் அப்படி எதிர்பார்க்கவில்லை. அதனால்தான் உன்னிடம் வந்திருக்கிறேன்.''

''நீ வந்ததைப் பற்றி நான் எவ்வளவு ஆச்சரியப்படுகிறேனோ அவ்வளவிற்கு மகிழ்ச்சியும் அடைகிறேன் குமரப்பன்! எனக்கு நன்றாக உன்னைத் தெரியும். அதனால் இதைப் பற்றி நான் தவறாக எண்ண மாட்டேன். ஆனால் உலகியல் வேறு. நியாயத்துக்காகவும் உரிமைக்காகவும் போராடி, அதனால் சொந்த வசதிகளை நிறைவு செய்கிற உத்தியோகத் தொழிலிருந்து விடுபட்டு ஓடி வருகிறவர்களைப் பலர் எதிர்கொள்ளத் தயங்குவதுதான் சமூக வழக்கம். நீயானால் ஏதோ பெரிய தளையிலிருந்து விடுபட்டு வந்து நிற்கிறவனைப் போல் சிரிக்கிறாய்... சந்தோஷப்படுகிறாய்....''

''ஆமாம்! இதற்காகச் சந்தோஷப்படுவதில் இதைவிடப் பரிபூரணமான எல்லை ஒன்று இருக்க முடியுமானால், அந்த எல்லை வரை துணிந்து சென்று சந்தோஷப்படுவதற்குக்கூட நான் இப்போது தயாராக இருக்கிறேன். நம்முடைய உணர்ச்சிகளின் நியாயத்தையும், மானத்தையும் புறக்கணித்துவிட்டு நம்மை அடக்கி ஒடுக்கி ஆள விரும்புகிறவர்களுடைய உணர்ச்சிகளின் அநியாயத்துக்கும் அவமானத்துக்கும் பணிய நேரிடுகிற போதெல்லாம் நாம் நிச்சயமாகத் தளைப்படுகிறோம் என்பதில் சந்தேகமே இல்லை. தளையிலிருந்து விடுபட்டு வந்தவனைப் போல் நான் சிரிப்பதாக நீ சொல்கிறாய். சத்தியம்! உண்மையில் நான் என்னளவில் மிகப் பெரிய தளையிலிருந்து விடுபட்டு வந்து விட்டதாகத்தான் உணர்கிறேன். 'குத்துவிளக்கில் இருந்து கொண்டே என்னுடைய நியாயங்களுக்காகவும், தன்மான உணர்வுகளுக்காகவும் நான் போராடினால் என்ன?' என்று நீ என்னிடம் கேட்க நினைக்கலாம். நான் என்னுடைய எதிரிகளாகக் கருதத் தகுந்தவர்களோடு மட்டும்தான் எதிர்த்துப் போராடலாம். என் எதிரிகளாகக் கருதவும் கூடத் தகுதி யில்லாதவர்களோடு நான் எப்படிப் போராட முடியும்? போராடுவதற்குக் கூட நம்முடைய எதிரிகள் நம்மளவுக்குப் பக்குவமானவர்களாக இருக்க வேண்டாமா? அங்கே அதுவும் இல்லை. கண்ணாயிரம் என்னிடம் நேரில் பேசுவதற்குப் பயப்படுகிறான். பின்புறமாக நான் இல்லாத போது ஜமீன்தாரிடம் சென்று முடிகிறான். ஜமீன்தாரோ 'பொம்மை போடுகிறவருக்கு இவ்வளவு சம்பளமா?' என்று கேட்கிற அளவு மூடனாயிருக்கிறான். இந்தச் சூழ்நிலையில் நான் செய்கிற தொழிலின் சுயமரியாதை இருக்கிறதே, அதைக் காத்துக் கொள்ளவாவது நான் அங்கிருந்து வெளியேறியாக வேண்டும்.''

பொன் விலங்கு

ஒரு தொழிலை நாம் செய்கிறபோது அந்தத் தொழிலைப் பற்றி முதலில் நமக்கு ஒரு சுயமரியாதை வேண்டும் இல்லாவிட்டால் அதை நாம் ஒருபோதும் ஈனயத்தோடு செய்வதற்கு முடியவே முடியாது.

''உண்மைதான்! சுயமரியாதையையும் பெருமையையும் காத்துக் கொள்வதுதான் ஆண் பிள்ளைகளுக்குக் கற்பு என்ற பொருளில் ஒரு திருக்குறள்கூட உண்டு. 'பெண்களுக்குக் கற்பைப்போல் ஆண்களுக்குக் கற்பு அவர்களுடைய பெருமைதான்' என்று அந்தக் குறளில் வள்ளுவர் கூறியிருக்கிறார். 'ஒருமை மகளிரே போலப் பெருமையும் தன்னைத்தான் கொண்(டு) ஒழுகின் உண்டு' என்று குறள் கேள்விப்பட்டிருக்கிறாயா குமரப்பன்?''

''எனக்குக் குறள் எல்லாம் தெரியாது அப்பனே! அதெல்லாம் சொல்வதற்குத்தான் நீ இருக்கிறாயே! குறள் படித்தால் மட்டும் போதுமா? உன் தகப்பனார்கூடக் குறள் படித்திருக்கிறார். எத்தனையோ ஆண்டுகள் ஆசிரியராக இருந்து குறளை மாணவர்களுக்குச் சொல்லியும் கொடுத்திருக்கிறார். ஆனாலும் அவ்வளவு பெரிய மதுரையில் மஞ்சள்பட்டியாரையும், கண்ணாயிரத்தையும்தான் — அவரால் பெரிய மனி

தர்களாக மதிக்க முடிகிறது. உன்னாலும் என்னாலும் அப்படி மதிக்க முடியவில்லையே. அது ஏன்?'' — என்று குமரப்பன் கேட்டபோது முதல் நாள் தந்தையின் கடிதத்தைப் படித்த சமயத்தில் இதே விஷயத்தைத் தானும் சிந்தித்ததைப் பற்றி நினைத்துக் கொண்டான் சத்தியமூர்த்தி. அவர்கள் இரண்டு பேருடைய சிந்தனையும் இந்த விஷயத்தில் ஒன்றாயிருந்தது.

''உங்கள் தெருப் பக்கமாக ஒரு நாள் போயிருந்தேனடா சத்தியம்! உங்கள் வீட்டு மாடியை இடித்துக் கட்டுகிறார்கள் போலிருக்கிறது. மராமத்து வேலைகள் நடந்து கொண்டிருப்பதைப் பார்த்தேன். கண்ணாயிரத்தோடு காரில் உன் தந்தையையும் இரண்டு மூன்று முறை வேறு வேறு இடங்களில் பார்த்தேன். மற்றொரு நாள் ஜமீன்தாரோடு கூடப் பார்த்தேன். பாவம் அலைகிறார்'' என்று குமரப்பன் மேலும் தந்தையைப் பற்றிக் கூறிய போது தன் தந்தை அந்தத் தீயவர்களை யெல்லாம் அண்டிக் கொண்டிருப்பதை நினைக்கவும் வெட்கமாக இருந்தது சத்திய மூர்த்திக்கு. சௌகரிய அசௌகரியங்கள் பெரியவைகளாக இருந்து வாழ்க்கையில் நல்லவர்கள் நல்லவர்களோடு இணைய முடியாமலும், கெட்டவர்களும் நல்லவர்களும் கலந்தோ சம்பந்தப்பட்டோ தவிக்க நேரிடுவதையும் அவன் அப்போது தன் சிந்தனையில் பொருத்துக் கொண்டே தீர்வதற்குப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டி யிருந்தது. நண்பர்கள் இருவரும் அறைக்குத் திரும்பும் போது சத்தியமூர்த்தி கல்லூரிக்குப்புறப்பட நேரமாகி யிருந்தது. குமரப்பன் திடீரென்று வந்ததினால் ஏற்பட்ட திகைப்போ, அல்லது அவன் குத்து விளக்கு வேலையை உதறி விட்டதனால் விளைந்த வருத்தமோ எதுவும் இல்லாமல் சிநேகத்துக்கு அந்தரங்கமான உண்மை நண்பன் வந்திருக்கிறான் என்ற மகிழ்ச்சி ஒன்று மட்டுமே நிலவும் மனத்தோடுதான் அறைச் சாவியை அவனிடம் கொடுத்து விட்டுக் கல்லூரிக்குப் புறப்பட்டான் சத்தியமூர்த்தி. சுந்தரேசன் அவர்கள் இருவரும் திரும்புவதற்குள் எழுந்து நீராடிக் கல்லூரிக்குப் புறப்பட்டுப் போயிருந்தார். இடைவேளையில் கல்லூரி விட்டதும் தான் வந்து விடுவதாகவும், அதன் பிறகு இருவரும் சேர்ந்து பகல் உணவுக்குப் போகலாம் என்றும் சத்தியமூர்த்தி நண்பனிடம் கூறியிருந்தான். நண்பன் குமரப்பனும் அதுவரையில் அறையில் தங்கி ஏதாவது புத்தகம் படித்துக் கொண்டிருப்பதாகச் சொல்லி அங்கே இருந்து கொண்டான்.

அன்று வகுப்பில் சத்தியமூர்த்திக்கு ஒரு புதுமையான அநுபவம் ஏற்பட்டது. பாடம் நடத்திக் கொண்டிருந்த போது ஏதோ மேற்கோளுக்காகப் புறநானூற்றுப் பாடல் வரிகள் சிலவற்றைச் சொல்லி விளக்க வேண்டியிருந்தது. '**தீதும் நன்றும் பிறர் தர வாரா — நோதலும் தணிதலும் அவற்றோரன்ன**' என்ற அந்தப் பாடலில் தான் சொல்ல வேண்டிய மேற்கோளுக்குப் பொருத்தமான அடிகளைக் கூறி விட்டுத் 'தீமையும் நன்மையும் பிறர் தருவதனால் வருவதாக நினைப்பது பேதைமை. அதைப் போலவே நாம் வருந்துவதற்கும், வருத்தம் தணிவதற்கும் பிறர் காரணமாக அமைவதில்லை....' எனப் பொருளை விளக்கிய போது ஒரு நாளும் இல்லாத வழக்கமாகப் பாரதி கேள்வி கேட்பதற்காக நடு வகுப்பில் எழுந்து நின்றாள். மாணவர்கள் சந்தேகப்பட்டுக் கேள்வி கேட்க எழுந்து நிற்கும்படி எதையும் அவன் மீதம் விடுவதில்லை. மாணவர்கள் மனத்தில் எந்த எந்த இடங்களில் இயற்கையாக என்னென்ன சந்தேகங்கள் எழ முடியும் என்ற தடைகளையும் தனக்குத்தானே எழுப்பிக் கொண்டு அவற்றுக்கும் சேர்த்து விடைகளைக் கூறி முடிப்பது சத்தியமூர்த்தியின் வழக்கம். அதனால் அவன் பாரதியை உட்காரச் சொல்லிக் கையமர்த்தினான். அவன் கையமர்த்தியதைக் கவனிக்காதது போல் முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு, ''எனக்கு ஒரு சந்தேகம் சார்! அதைக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்காக நான் இப்போது நிற்கிறேன்'' என்றாள் பாரதி. சத்தியமூர்த்திக்கு அவள் முரண்டு பிடிப்பதாகவோ, அடம் பண்ணுவதாகவோ தோன்றியது.

''எதைச் சொல்லி விளக்கிக் கொண்டிருக்கிறேனோ அதை நான் இன்னும் முடிக்கவில்லை, மிஸ் பாரதி! நான் முடித்த பிறகு ஒருவேளை உங்கள் சந்தேகம் தீர்ந்து போனாலும் போகலாம். தயவு செய்து நான் முடித்த பின்பு கேளுங்கள்....'' என்று சற்றே கடுமையான குரலில் சொல்லி அவளை உட்கார வைத்தான் சத்தியமூர்த்தி. தன்னுடைய சொற்பொழிவில் கட்டுண்டு கிடந்த பெரிய வகுப்பினிடையே அதன் அமைதியைக் கலைப்பது போல் முன் வரிசையில் ஒரு பெண் எழுந்து நின்று அடம் பிடித்ததை அவன் அவ்வளவாக விரும்ப வில்லை.

''தீமையும் நன்மையும் நம் கண் காணப் பிறர் செய்வதனாலேயே நமக்கு வருவதை உலகியலில் ஒவ்வொரு நாளும் காண்கிறோம். அதைப் போலவே நம்முடைய வருத்தத்துக்கும், மகிழ்ச்சிக்கும் காரணமான செய்கைகளையும் பிறர்



MONACO
GOLD STAR
MONACO
ஒரு கணத்திலேயே
உணவு
அதுதான் போஷாக்களித்து,
திருப்தியளிக்கும் ருசி மிகுந்த
பார்லேயின்
மொனகோ
உப்பு சுவையுள்ள பிஸ்கெட்டுகள்
ISI
எந்நேரமும் மொனகோ சாப்பிடும் நேரம்தான்
பார்லே ப்ராடக்ட்ஸ் மானு. கோ. பிரை லிட். பம்பாய்-57



ஏழு வைட்டமின்கள்
சேர்ந்தது, அமுல் பாலுணவு-
அவை செய்வது என்னென்ன?
வைட்டமின் ஏ
வைட்டமின் பி1
வைட்டமின் பி2
வைட்டமின் பி6
வைட்டமின் சி
வைட்டமின் டி
நியசினமைடு
அமுல் பாலுணவில் உங்கள் குழந்தைக்குத் தேவையான
7 வைட்டமின்கள் உள்ளன.

நமக்குச் செய்வதையும் காண்கிறோம். அப்படி இருக்கும்போது இந்தப் பழைய பாடலில் கூறப்பட்டிருக்கிற தத்துவம் எவ்வாறு பொருந்தும் என்று உங்களில் சிலருக்குச் சந்தேகம் உண்டாகலாம். 'மாடர்ன் சென்ஸிபிலிட்டி' என்று சொல்கிறார்களே; அந்தப் புதிய அறிவுணர்ச்சி — எவ்வளவுக்கு நவீனமானதோ அவ்வளவுக்குப் பலக் குறைவானதாகவும் சில இடங்களில் இருக்கும். உதாரணமாக இந்தப் பாடலில் நான் சொல்லிய விதமான சந்தேகம் உங்களுக்கு ஏற்பட்டு அந்தச் சந்தேகம் ஏற்படுவதற்குக் காரணமாக உங்களுடைய 'மாடர்ன் சென்ஸிபிலிட்டி' தான் தூண்டுதலாக இருக்கிறது என்று நீங்கள் எண்ணுவது பிழை. இந்தப் பாடல் எந்த நிலையில் எத்தகைய சான்றோரால் எதற்காகக் கூறப்பட்டதென்று சிந்தித்தால் இப்படி ஒரு சந்தேகமே உங்களுக்கு எழப் போவதில்லை. மனிதர்களுக்கு மனிதர்கள் பகையின்றி வாழவும், கருணையும் அன்பும் நிறைந்த உலகைக் காணவும், பொருள் மொழிக் காஞ்சியாக அறிவுரை கூறுகிற சான்றோர் ஒருவர் இதைப் பாடியிருக்கிறார். விருப்பு வெறுப்பில்லாமல் வாழப் பழகிக் கொண்ட பெருந்தன்மையாளர் ஒருவர் 'துன்பமும் இன்பமும் பிறர் தருவதனால் வருவதாக எண்ணித் துன்பம் செய்கிறவர்களை வெறுக்கவும் இன்பம் செய்கிறவர்களை விரும்பவும் பழகிக் கொள்ளலாகாது' என்று சம நிலையோடு அறிவுரை சொல்கிறாரென்றால் அந்த ஒற்றை மனத்தின் பண்பாட்டு உயர்வை மட்டுமாவது நாம் போற்ற வேண்டாமா? நீதி நூல் கருத்துக்களிலும், அற நூல் கருத்துக்களிலும் அதிகமாகச் சந்தேகம் கேட்கிறவர்கள் இந்த அடிப்படையை நினைவு வைத்துக் கொள்ள வேண்டும். 'அறம் செய்வது நல்லது' என்றால் ''இன்று நம் கண் காணப் பலர் அறம் செய்யாமலே நன்றாக இருக்கிறார்களே?'' என்று சந்தேகம் கேட்டு விடத்தான் உடனே தோன்றும். இவ்விதமாகத் தோன்றுவதுதான் 'மாடர்ன் சென்ஸிபிலிட்டி' என்று நினைப்பது தவறு. உணரும் முறை நவீனமாயிருக்கலாம். அதைத்தான் 'மாடர்ன் சென்ஸிபிலிட்டி' என்கிறோம். ஆனால் உணரும் முறை பிறழ்வதாயிருக்கக் கூடாது. பிறழ உணர்வதை மட்டுமே 'மாடர்ன் சென்ஸிபிலிட்டி' என்று கூறுவதாயிருந்தால் 'மாடர்ன் சென்ஸிபிலிட்டி' என்பதன் ஒரே நோக்கம் 'பிறழ உணர்தல்' என்று முடிவு செய்ய நேரிடும். 'மாடர்ன் சென்ஸிபிலிட்டி இன் பொயட்ரி' என்பதைப் பற்றி இன்னொரு நாள் நான் உங்களுக்கு விரிவாகச் சொல்கிறேன்'' என்று விளக்கி முடித்ததும் ஞாபகமாகப் பாரதியின் பக்கம் திரும்பி, 'இனி உங்கள் சந்தேகத்தைக் கேட்கலாம் மிஸ் பாரதி!' என்று சத்தியமூர்த்தி கூறிய போது அவள் எழுந்து நின்று ஒன்றும் கேட்கத் தோன்றாமல் விழித்தாள். அதைக் கண்டு மாணவர்கள் இரைந்து சிரித்து விட்டார்கள். அவளுக்கு அவமானம் பிடுங்கித் தின்றது. டெஸ்க்கிலிருந்து தன் புத்தகங்களை அவசரம் அவசரமாக அள்ளிக் கொண்டு முகம் சிவந்து போய் உதடுகள் துடி துடிக்க வகுப்பறையிலிருந்து வெளியேறி விட்டாள் அவள். வகுப்பறையிலிருந்து வெளியேறிச் செல்லும் போது அவள் தலை தாழ்ந்து போயிருந்தது. சத்திய

''ரொம்ப 'டாப் சீக்ரெட்' விஷயமா என்னை மேல்நாடு அனுப்பறீங்க! அதனாலே எனக்கே விஷயம்



என்னங்கிறதைச் சொல்லாமல் அனுப்பறீங்க. அப்படின்னு எப்படிப்பட்ட ரகசியம் என்பதை நீங்களே பார்த்துக்குங்களேன்.''

மூர்த்திக்கு இதைப் பார்க்க வேதனையாயிருந்தது. 'பெரிதாக என்ன நடந்து விட்டது? எதற்காக இந்தப் பெண் நடுவகுப்பில் பாட வேளை முடிவதற்குள் சொல்லாமல் கொள்ளாமல் இப்படி எழுந்து போகிறாள்?' என்றெண்ணி அவன் வருந்தினான். வகுப்பில் பாரதிக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த மாணவியைக் கூப்பிட்டு, ''போய் அழைத்து வாருங்கள். எழுந்து வெளியே போகும்படி இப்போது என்ன நடந்து விட்டது? மாணவர்களில் யாராவது வகையாக மாட்டிக் கொள்ளும் போது மாணவிகளாகிய நீங்களும்தான் சிரிக்கிறீர்கள்! அப்போது அதற்காக உங்களை என்ன செய்வது! குழந்தைப் புத்தியோடு இருந்தால் நன்றாயில்லை. உங்கள் சிநேகிதியை வகுப்பில் வந்து உட்காரச் சொல்லுங்கள்! கல்லூரி யூனியன் தலைவியாக வந்திருக்கிற மாணவியே இப்படி நடந்து கொள்வது சிறிதும் விரும்பத்தக்கதில்லை'' என்றான். அந்த மாணவி வெளியே போய்ப் பார்த்து விட்டு வந்து ''பாரதி காரில் போய் உட்கார்ந்து, விசும்பி விசும்பி அழுது கொண்டிருக்கிறாள் சார். தான் சொல்லியதை அவள் காதில் வாங்கிக் கொண்டதாகவே தெரியவில்லை....'' என்றாள். அதற்கு மேல் அந்த நிகழ்ச்சியைப் பெரிதுபடுத்த விரும்பாத சத்தியமூர்த்தி வகுப்பைத் தொடர்ந்தான். ஆனால் வகுப்பில் கசமுச வென்ற பேச்சுக் குரல்களும், இரகசிய முணுமுணுப்புக்களும் ஓய்வதற்குச் சிறிது நேரமாயிற்று. தன்னிடம் பிரியமுள்ள மாணவி என்று பகிரங்கமாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிற பாரதி தனக்கு முன்பே நடு வகுப்பில் சந்தேகம் கேட்கப் போவதாக எழுந்து நின்று அடம் பிடித்ததையும், தான் அவளுக்குச் சொல்லிய பதில் கடுமையாக இருந்ததையும் மற்ற மாணவர்கள் புதுமையாகவும் ஆச்சரியமாகவும் நினைத்து முணுமுணுக்க முடியும் என்பதை அவன் உடனே அநுமானிக்கத் தவறவில்லை. ஆனாலும் தன்னுடைய நயமான சொல்லாட்சித் திறனால், ஐந்தே நிமிடங்களில் வகுப்பில் பழைய அமைதி நிலவும்படி செய்தான் அவன். இந்த நிகழ்ச்சியை வகுப்பு முழுவதும் மறந்து விடும்படி செய்ய அவனுக்குச் சாமர்த்தியம் இருந்தது. ஆனால் தன் மனத்தளவில் அவனால் இதை மறக்கவே முடியவில்லை. அந்த வகுப்பு வேளை முடிந்த பின் அடுத்த வகுப்புக்குப்போய் அதற்கடுத்த வகுப்புக்குப் போன பின்னும்கூட அவனால் அன்று இதை மறக்க முடியவில்லை. இடைவேளையின் போது அறைக்குப் போய்க் குமரப்பனைச் சாப்பிட அழைத்துப் போகவும் இயலாமற் போய்விட்டது. கல்லூரித் துணை முதல்வர் ஹாஸ்டல் விஷயமாக ஏதோ பேச வேண்டுமென்று இடைவேளையில் கூப்பிட்டனுப்பவே அவரோடு போய் உட்கார வேண்டியதாயிற்று. தான் போக முடியா விட்டாலும் லேக் சர்க்கிள் பக்கமாகச் சென்று திரும்பும் மாணவன் ஒருவனிடம் குமரப்பனுக்குத் தகவல் சொல்லி அனுப்பி அவன் மட்டும் போய்ச் சாப்பிட்டு விட்டுத் திரும்பி வந்து அறையில் ஓய்வு கொள்ளுமாறு ஏற்பாடு செய்திருந்தான் சத்தியமூர்த்தி.

கல்லூரி முடிந்து அவன் மாலையில் அறைக்குத் திரும்பிச் சென்ற போது குமரப்பன் இருந்தாற் போலிருந்து அவனிடம் ஒரு கேள்வி கேட்டான்.

'' ஏண்டா, சத்தியம்! எந்தத் தவற்றைப் பிறருக்குத் தெரியாமல் சுலபமாக நம்மால் மறைக்க முடியும் என்று தோன்றுகிறதோ அதைக் கூடப் பிறரிடம் சொல்லி மன்னிப்புக் கேட்பது நியாயமென்பதை நீ ஒப்புக் கொள்வாயா...?''

''இதென்னது?.... இருந்தாற்போல் இருந்து மன்னிப்பைப் பற்றி........'' என்று சத்தியமூர்த்தி பேச்சை இழுத்து நிறுத்தித் தயங்கினான். அதற்குக் குமரப்பன் கூறிய பதில் அவனைச் சிறிது நேரம் அப்படியே திகைக்க வைப்பதாக இருந்தது. ஆனால் அந்தத் திகைப்புக்குப் பின்பும் உண்மை நட்புத்தான் சத்தியமூர்த்தியின் மனத்தில் நின்றதே ஒழிய நண்பனைப் பற்றிச் சிறிதளவு வெறுப்பும் நிற்கவில்லை. (தொடரும்)


நான் எப்பொழுதும் சிறந்ததையே
உபயோகிக்கிறேன்
நான் தேர்ந்தெடுப்பது எவரெஸ்ட்
• எளிதாக, நம்பகமாக உழைக்கிறது.
• நியாயமான விலை
• பூராவும் உத்திரவாதமுள்ளது
• எடுப்பான தோற்றமுள்ளது
• விற்பனைக்குப் பிறகு உடனுக்குடன் பராமரிப்பு கிடைக்கிறது.
EVEREST
EVEREST
EVEREST
எவரெஸ்ட் தையல் மெஷின்
தயாரிப்பாளர்கள்: சாரதா மெஷினரி கார்ப்பொரேஷன்
தலைமை ஆபீஸ்: 11, பூனா ரோடு, புதுடில்லி-5.

குடும்பத்தினர் அனைவரும் வசதியான,
தரமான, பார்வையான ஆடைகளையணிய . . .

கேட்டு வாங்குவது

ரோஹித்

ஷர்ட்டிங்குகள்*
கோடுகளுடனோ, இல்லாமலோ

ரோஹித்

புடவைகள்
...ஆடையணிப்
பொருள்கள்

உன்னத நேசவு
உயரிய அமைப்பு



ரோஹித்

மில்ஸ்
லிமிடெட்
கோக்ரா
மெஹ்மெதாபாத்
அகமதாபாத்-8

ரோஹித் க்ரூப் நிறுவனங்களில் ஒன்று

BPY-5 TAM.

துணிந்து செயல்பட வேண்டும்

எம். ஜி. ராமச்சந்திரன்



[தி. மு. கழகத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான திரு எம். ஜி. ராமச்சந்திரன் எம். எல். ஸி. வெள்ளித்திரை மூலம் லட்சக் கணக்கான தமிழ் மக்களின் உள்ளங்களைக் கவர்ந்தவர். தமிழ்ப் பற்று மிக்கவர். அதை வளர்க்கப் பாடுபடுபவர். ஆகவே தமிழுக்கும் தமிழனுக்கும் ஆபத்து விளைவிக்கக்கூடிய எந்த நடவடிக்கையையும் கடுமையாகக் கண்டிப்பவர். ஆட்சிமொழிப் பிரச்னையில் தமது கருத்தை மட்டுமின்றி, ஏராளமான தமிழ் மக்களின் ஏகோபித்த கருத்தைப் பிரதிபலிக்கிறார் என்பது திரு எம். ஜி. ஆர். அவர்களின் கட்டுரையை அமைதியுடன் படித்தால் விளங்கும்.]

ஆட்சிமொழி – இது ஒரு விசித்திரமான வார்த்தையாகி விட்டது: இன்று ஆட்சி செய்வதற்கு மொழியா, ஆட்சி செய்யும் மொழியா? இதற்கு விடை கண்டுபிடித்தால், தெளிவும் ஏற்படும், தேசிய நலனும் காப்பாற்றப்படும்.....

ஒரு நாட்டின் ஆட்சிப் பொறுப்பிலிருப்போர், அந்த நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தந்த மக்களின் பிரதிநிதிகளாக இயங்கும் பொழுது, அந்த மக்களின் தாய்மொழி அந்த நாட்டின் தேசிய மொழி என்ற முறையில் அதுவே அந்த நாட்டு மக்களின் ஆட்சிமொழியாக இடம் பெறுவது இயல்பு.

ஆனால், இந்தியத் துணைக் கண்டத்தில் பதினான்கு தேசிய மொழிகள் – அதைப் பேசுகிற தேசிய இனங்கள் – அந்த இன மக்கள் ஒன்றுபட்ட உணர்வுடன் இணைந்திருக்க வேண்டிய கூட்டாட்சி முறை – அந்தந்த இன மக்களுக்கு – அவர்களின் தேசிய மொழிகளுக்கு, கலாசாரங்களுக்கு, நாகரிகம், பண்பாட்டுணர்ச்சிகளுக்கு, சம உணர்வுடன் ஏற்றத் தாழ்வற்ற நிலையில், அடிப்படை உரிமைகளுக்குப் பாதுகாப்பளிப்பதற்கான உத்தரவாதமளிக்கும் அரசியல் சட்டம், அந்தச் சட்டத்தின்படி ஆட்சி செய்யும் மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய அரசாங்கம்.....இப்படிப்பட்ட சூழ்நிலையில் இயங்கும் ஒரு துணைக் கண்டத்தில் ஆட்சி செய்வதற்கு ஒரு மொழி தேவை என்ற நிலை ஏற்படும் போது, என்ன செய்ய வேண்டும்? என்ன செய்திருக்கிறார்கள் வேறு நாடுகளில் இது போன்ற நிலைமைகளில் என்பதை வெல்லாம் நியாய உணர்வுடன் சிந்தித்தால் யாராக இருந்தாலும், இன்று இந்திய மத்திய ஆட்சியாளர், ஆட்சி மொழி விஷயமாக மேற்கொண்டுள்ள முரட்டுத்தனமான செயல்களைக் கண்டிக்கவும், எந்த விலை கொடுத்தேனும் மாற்றித் தீர வேண்டும் என்ற முடிவுக்கு வரவும்தான் இயலும்.

எது நியாயம்?

ஒரு சுயேச்சையான ஆதிபத்திய உரிமை பெற்ற நாடு, தன்னுடைய நாட்டின் தேசிய மொழியை ஆட்சி மொழியாக வைத்துக் கொள்வதுதான், தேசிய கௌரவம் பாதுகாக்கப்படுவதற்கான செயலாகும் என்பதை ஒப்புக் கொண்டால், பதினான்கு தேசியமொழிகள் உள்ள நாட்டில், பதினான்கு மொழிகளும் ஆட்சி மொழியாவதுதானே நியாயம்? இல்லை, இல்லை – பதினான்கு மொழிகளையும் ஆட்சி மொழியாக்குவது இயலாது, கஷ்டம், சிக்கல்கள் வளரும் – அதனால் ஒரே மொழிதான் ஆட்சி மொழி, அதுவும் இந்தியத் துணைக் கண்டத்தின் வடக்குப் பகுதியில், குறிப்பிட்ட இடத்தில் வழங்கும் ஹிந்தி மொழியாகத்தான் இருக்க வேண்டும் என்று கூறுவது என்ன நியாயம்?

அவர்களே சொல்கிறார்கள்!

என்ன நியாயம் என்று என் போன்றோர் கேட்டால், மிகச் சாதாரண மானவர்கள் கவலைப்பட வேண்டியதில்லை. அறிஞர் அண்ணா கேட்டால், அவர் பிரிவினைவாதி, குழப்பம் உண்டாக்கவே கேட்கிறார், தேசிய ஒற்றுமைக்கு உலை வைக்கப் பார்க்கிறார் என்று கூறுகிறார்கள். ராஜாஜி அவர்கள் கேட்டால், நேருவை ஒழிக்க விரும்புகிறார் என்று கலபமான காரணம் கண்டு பிடிக்கிறார்கள். ஆனால் தேசிய ஒற்றுமையைப் பலப்படுத்த வழிவகைகள் கண்டுபிடிக்கக் கூடிய குழுவின் தலைவர் டாக்டர் ஸி. பி. இராமசாமி அய்யர் கேட்கிறாரே. இந்திய ஒற்றுமை காப்பாற்றப்பட வேண்டும் என்ற ஆர்வத்தைச் சிறிதளவுகூட மாற்றிக் கொள்ள விரும்பாத டாக்டர் ஏ. லட்சுமணசுவாமி முதலியார் கேட்கிறாரே. இன்னும் இந்தியா முழுவதிலும் உள்ள பேரறிஞர்கள், அரசியல் புயலில் சிக்காத பெரியார்கள், கல்வித் துறை நிபுணர்கள் – ஆட்சியில் நீண்ட கால அனுபவம் பெற்றவர்கள்

கேட்கிறார்களே. என்ன பதில் கூறுகிறார்கள் இந்தியை எப்பாடுபட்டாவது திணித்தே தீரவேண்டும் என்று கடுமையான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள மத்திய ஆட்சியாளர்?

இந்தி – இந்தியாவின் பதினான்கு தேசிய மொழிகளில் ஒன்று. அந்த ஒன்று மட்டும்தான் ஆட்சி மொழியாகும் – அதிகார மொழியாகும்–அதன் மூலம் இந்தி பேசாத மக்களை ஆட்டிப் படைக்கிற மொழியாகும் என்றால், அதுதான் தேசிய கௌரவம் காப்பாற்ற வழி என்றால், மற்றப் பதின்மூன்று தேசிய மொழிகளுக்குச் சொந்தக்காரர்களின் தேசிய கௌரவம் காப்பாற்றப்பட வேண்டாமா? இந்தி பேசுவோருக்கு மட்டும் தான் தேசிய கௌரவம் உண்டா? மற்ற, வங்காளிகளுக்கு, மராட்டியர் களுக்கு, பஞ்சாபிக்கு, தமிழர்களுக்கு, ஆந்திரர்களுக்கு, மலையாளிகளுக்கு, கன்னடக்காரர்களுக்கு மற்றும் பல தேசிய இனத்தவர்களுக்கு இல்லையா?

இதுவா தேசிய கௌரவம்?



இதனால்தான் திராவிட முன்னேற்றக் கழகம் தெளிவாகக் கூறுகிறது: பதினான்கு தேசிய மொழிகளையும் ஆட்சிமொழிகளாக ஆக்குங்கள் என்று. முடியாது, கஷ்டம் என்றால், கஷ்டமான காரியம் என்பதற்காக, சமா தானக் கொள்கைக்கு முரண் என்றாலும், படையெடுத்து வரும் பாதகச் சீனரை விரட்டியடிக்கப் படை நடத்திச் செல்வதைக் கைவிட முடியுமா?

நியாயம் என்றால், பலரின் நன்மையைக் கருதி ஒன்று செய்துதான் தீர வேண்டும் என்றால், கஷ்டம் என்றோ செலவாகும் என்றோ சொல்வது, ஒரு தனி மனிதன் – அதுவும் கோழை உள்ளம் கொண்டவனாக இருந்தால் சொல்லலாமே தவிர, ஒரு ஆட்சியை நடத்துவோர் சொல்லலாமா?



இன்று இந்தியைப் பரப்புவதற்காக, அதிகாரத்தைக் கொண்டும், பெரும் பொருட் செலவு செய்தும், மத்திய ஆட்சியினர் எவ்வளவு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்? நாட்டின் பாதுகாப்புக்குப் பல வழிகளில் பணம் திரட்டும் சர்க்கார், இப்போது அவசியம் இல்லாத, இந்தி மொழி வளர்ச்சிக்குப் பொருட்செலவு செய்யத் திட்டமிடுவது எவ்வளவு அநீதி?

இந்தியாவின் தேசிய கௌரவம் என்ற பெயரில், இந்திக்காரர்களின் தேசிய கௌரவம் காப்பாற்றப்படும் போது, மற்ற மொழி பேசுவோரின் தேசிய கௌரவம் காப்பாற்றப்பட, அரசியல் சட்டத்தில் உறுதி செய்யப் பட்டுள்ள பேதமற்ற சமநிலை ஏற்பட, ஆட்சியிலிருப்போர் செயல்படுவது தானே முறை?



பதினான்கு மொழிகளையும் ஆட்சி மொழியாக்க நாளாகும் – நீண்ட காலம் பிடிக்கும் – என்று காரணம் கூறுவார்களேயானால், அது வரை எல்லாருக்கும் பொதுவான இன்றுள்ள நிலையே நீடிக்கலாமே – அதுதானே நியாயம்?

ஆங்கிலத்தை அகற்றி, இந்தியை அரியணை ஏற்றுவதில் இவ்வளவு அவசரமும் ஆத்திரமும் எதற்கு? ஆங்கிலம் அன்னிய மொழிதான்–சந்தேக மில்லை...ஆனால், கடந்த இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக, அன்னியர் ஆட்சி யிலும், பதினேழு ஆண்டுகளாகச் சுதந்திர ஆட்சியிலும் உபயோகத்தில் இருந்து வரும் ஒரு மொழியை, அவசரம் அவசரமாக அப்புறப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு, நாட்டின் எல்லையில் ஆக்கிரமிப்பாளன் கால் வைக்கத் துணியும் இந்த நேரத்தில், நாட்டின் ஒற்றுமை உணர்ச்சியை ஒருமுகப் படுத்த வேண்டிய மிக அவசியமான காரியத்தில் ஈடுபட வேண்டிய ஓர் ஆட்சி, அமைதியாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆட்சி மொழி விஷயத்தில் ஏன் இவ்வளவு பிடிவாதமும், பரபரப்பும் காட்ட வேண்டும்?



பதினேழு ஆண்டுகளாக, சுதந்திர ஆட்சியில் ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருந்து வருவதால் நாட்டின் கௌரவம், எப்போது, எங்கே, யாரால் பறிக்கப்பட்டது, அல்லது களங்கப்படுத்தப்பட்டது? ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருப்பதால்தான் சீன ஏகாதிபத்தியம் இந்தியாவின்மீது படை எடுத்ததா?

அரியணை ஏற்றலாமா?




1965க்குப் பிறகு இந்திதான் ஆட்சி மொழி என்று சட்டம் செய்து விட்டோம் என்றால், செய்து விட்ட சட்டம் திருத்தப்பட முடியாததா? ஜீவாதார உரிமைகளைக் குறைக்கப் பதின்மூன்று ஆண்டுகளில் பதினாறு திருத் தங்கள் கொண்டு வந்து நிறைவேற்ற வில்லையா? ஒரு நாட்டின் கோடிக் கணக்கான மக்களின் தேசியப் பிரச்னையான மொழிப் பிரச்னையில், செய்த சட்டத்துக்குத் திருத்தம் கொண்டு வர மறுப்பவர்களின் எண்ணத்தை அதனால் பாதிக்கப்படும் கோடிக்கணக்கானோர் சந்தேகப்படாமல் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது எவ்வகையில் நியாயமானது?

மொழிப் பிரச்னை என்பது சாதாரணப் பிரச்னை அல்லவே! அரசியல்–பொருளாதாரம் – சமூகம் – கல்வி – கௌரவம் – பண்பாடு – என்று அத்தனையிலும் இழையோடுகிற உயிர்ப் பிரச்னையல்லவா? இதற்காகச் சட்டத்தைத் திருத்துவது என்பது ஒன்றும் பாதகமான காரியம் அல்லவே!

உயிர்ப் பிரச்னை

அன்னிய மொழி என்பதற்கு இலக்கணம் என்ன? தனது தாய்மொழி அல்லாத வேற்று மொழி அன்னிய மொழி என்றால், இந்தி தாய்மொழி அல்லாத இந்தி பேசாத மக்களுக்கு ஆங்கிலத்தைப் போல் இந்தியும்

அன்னிய மொழிதானே என்று பேராசிரியர்களும் பேரறிஞர்களும் கேட்பதில் தவறென்ன? ஆங்கிலம் அன்னிய மொழி என்ற காரணத்தைக் காட்டி, பதினைந்து தேசிய மொழிகளையும் ஆட்சி மொழிகள் ஆக்காமல், ஆக்க முயற்சி செய்வோம் என்றுகூடக் கூறாமல், ஹிந்திதான் ஆட்சி மொழி என்று கூறினால், ஹிந்திக்காரர்களுக்கு மட்டும் தேசிய கௌரவம் காப்பாற்றப்பட்டு, அவர்கள் இந்தியாவின் முதல்தரப் பிரஜைகளாக ஆக மாட்டார்களா?



ஆங்கிலம் ஆட்சி மொழியாக, ஆதிக்க மொழியாக இருந்த சமயத்தில் ஆங்கிலேயர் நிலை என்ன? இந்நாட்டை அடிமைப்படுத்துவதற்காக ஆங்கில மொழியை ஆதிக்க மொழியாக்கினான் ஆங்கிலேயன். ஆங்கிலம் ஆதிக்க மொழியானால்தான் ஆட்சிப் பொறுப்பில் ஆங்கிலேயர்களை அமர்த்த முடியும்; ஆங்கிலத்துக்கு உயர்வு ஏற்பட்டால்தான் ஆங்கிலேயர்களுக்கு உயர்வும், மரியாதையும், மதிப்பும் ஏற்படும் என்று கருதி, தனது தாய்மொழியைப் பல்வேறு மொழி பேசும் மாறுபட்ட தேசிய இனங்களைக் கொண்ட துணைக் கண்டத்தில் ஆங்கிலத்தை ஆட்சி மொழியாகவும் ஆக்கினான். அந்தக் காலத்தில் ஆங்கிலம் படித்தால்தான் அந்தஸ்து, அதிகாரம், ஆதிக்கம் என்ற நிலை பிறந்தது. ஆங்கிலேயர்களைக் கண்டாலே ஏன், ஆங்கிலம் படித்தவர்களைக் கண்டாலே, நம்மை விட உயர்ந்தவர்கள் என்ற எண்ணம் பாமர மக்களிடையே தோன்றியது.

அப்படிப்பட்ட ஒரு நிலையை ஹிந்தி மொழிக்கும், ஹிந்தி பேசுவோருக்கும் இன்றும் ஏற்படுத்தும் ஒரு காரியம்தான் ஹிந்தியை ஆட்சிமொழியாக்கும் செயல் என்பதை யாராவது மறுக்க இயலுமா?

ஹிந்தி படித்தால் ஹிந்திக்காரனா?

ஹிந்தியை எல்லா மக்களும் படித்து விட்டால் அந்தப் பேதம் நீங்கி விடும் என்று கூறுகிறார்கள். முடியுமா? ஆங்கிலத் திணிப்பு முயற்சி இருநூறு வருடங்களாக நடந்தும் எத்தனை பேர் ஆங்கில அறிவு பெற்றிருக்கிறார்கள்? மேலும் ஆங்கிலக் கல்வி பெற்றவர்கள் அன்றைய நிலையில் ஆங்கிலேயர்கள் ஆகிவிட முடிந்ததா? ஆங்கிலம் படித்தவர்கள் என்றாக முடிந்ததே தவிர ஆங்கிலேயன் ஆக முடியவில்லை என்பதைப் போல் ஹிந்தி படிப்பவன் ஹிந்தி படித்தவன் என்றாவானே தவிர, ஹிந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட ஹிந்திக்காரனாக முடியாதே?

இந்தியாவில் ஹிந்தி ஆட்சி மொழியாவதனால், ஹிந்தி பேசாத பகுதி மக்களுக்கு எந்த விதமான பாதகமும் ஏற்படாது: ஏற்படாமல் பாதுகாப்பு அளிக்கிறோம் என்று இன்று மத்திய ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் கூறுகிறார்கள்.

அபயம் அளிக்கிறார்கள்!

ஹிந்திதான் ஆட்சி மொழி, ஹிந்தியில்தான் ஆட்சி அலுவல்கள் நடைபெற வேண்டும், ஹிந்தி படித்தால்தான் வேலை, ஹிந்திதான் இந்தியாவின் கௌரவத்தைக் காட்டும் மொழி என்று சட்டம் செய்து வைத்துக் கொண்டு, மற்றவர்க்கு, ஹிந்தி பேசா மக்களுக்கு நாங்கள் ஆபத்பாந்தவர்களாக, அனாத ரட்சகர்களாக, கருணாமூர்த்திகளாக இருக்கிறோம்; கவலைப் படாதீர்கள் என்று மேடைகளிலும் பத்திரிகைகளிலும் அபயம் அளிப்பதால் மட்டும் துணைக் கண்டத்தின் பெரும் பகுதி மக்களின் நலன்கள் என்றென்றும் பாதுகாக்கப்படும் என்று ஹிந்தி பேசாத மக்கள் நம்பிக்கை கொண்டிருப்பார்கள் என்று ஹிந்திக்காரர்கள் எதிர்பார்த்தால், ஒன்று அவர்கள் அறியாமைக்காரர்களாக இருக்க வேண்டும்; அல்லது மற்றவர்கள் ஏமாறுவார்கள் என்று கருதுபவர்களாகத்தான் இருக்க வேண்டும்.

முறைப்படி நிறைவேற்றப்படும் சட்டங்கள், நிறைவேற்றியவர்கள் கண் முன்பாகவே செல்லாதவைகளாகி விடும் நிலைமைகள் ஏற்படும் இந்தக் காலத்தில், உறுதிமொழிகள் — நம்பிக்கை உரைகள் — ஒரு பெரிய சமுதாயத்தைக் காப்பாற்றும் என்று எந்த ஏமாளியும் நம்ப மாட்டான்.

பெரிய படுகுழி

தாய்மொழி — ஆங்கிலம் — இதர இந்திய மொழிகளில் ஒன்று — என்று மூன்று மொழித் திட்டத்தைக் கல்வித்துறையில் அமுல்படுத்துவதின் மூலம் எல்லோருக்கும் சம நிலை அளிப்பதாக ஆட்சியினர் கூறுகிறார்கள். மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், நியாயமான ஏற்பாடு போலத் தோன்றும் இத்திட்டம் பச்சிலையால் மூடப்பட்ட பெரிய படுகுழி என்பது கூர்ந்து கவனித்தால் விளங்கும்.

தாய்மொழி — இதர இந்திய மொழிகளில் ஒன்று — ஆங்கிலம் — ஆக மூன்று மொழி என்று கூறினாலும், தாய்மொழி — ஹிந்தி — ஆங்கிலம் என்று தான் ஏற்பாடுகள் உள்ளன. இந்த நிலையில் ஹிந்தி பேசுகிறவர்கள் தமது தாய்மொழியான ஹிந்தியை மட்டும் கற்றாலே போதும். அத்தனை வசதிகளையும் பெற்றுவிடுவார்கள். மற்ற மொழிக்காரர்கள் தமது தாய் மொழியுடன் ஆங்கிலம் கற்றாலும் ஹிந்தியைக் கற்றால்தான், சட்டபூர்வமாக உரிமைகளைப் பெற முடியும் என்ற நிலை ஏற்படும்பொழுது, இந்திய அரசியல் சட்டம் கூறுகிற சம நிலை — சம வாய்ப்பு — எப்படி ஏற்படும்?

ஆட்சியாளர் கூறும் மூன்று மொழித் திட்டத்தை முறியடிக்கும் குரல் ஒன்று இதோ கேளுங்கள்: ''ஹிந்தி பேசும் மாநிலங்களில், ஆங்கிலம்

கற்க வற்புறுத்தக் கூடாது'' — என்று பீகார் சட்ட மன்றத் தலைவர் மத்திய சர்க்காருக்கும், ஹிந்தி மாநிலங்களின் ஆட்சியாளர்களுக்கும் எச்சரிக்கை விடுத்திருக்கிறார். இது சில காலம் கழித்து வெளியாக வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் கருதும் ஒரு பயங்கரமான உண்மை; இப்பொழுதே வெளியாகிவிட்டது.

பயங்கர உண்மை..

ஹிந்தி மொழிக்காரர்கள் ஆங்கிலத்தைப் பயில்வதே கூடாது என்ற உணர்வு கொண்டிருக்கிறார்கள் என்றால் அவர்களுடைய ஹிந்தி மொழி பெறப் போகும் ஆதிக்கத்தை எண்ணி எவ்வளவு வெறியடைந்திருக்கிறார்கள், அதற்கு எவ்வளவு அவசரப்படுகிறார்கள் என்பது தெள்ளத் தெளிவாகப் புலனாகிறதல்லவா?



பதினான்கு தேசிய மொழிகளைக் கொண்ட துணைக் கண்டத்தில் ஒரு மொழிதான் ஆட்சி மொழியாகும் — ஆட்சிமொழியாக ஆக்குவோம் — என்று பிடிவாதத்தோடு கூறுகிறார்கள். சட்டமன்றம் தன் ஆட்சியில் இருக்கின்ற காரணத்தினால் சட்டமும் செய்து விட்டார்கள். ஆனால், ஹிந்தி பேசாத மக்களுக்குப் புதிய சட்டத்தைக் காட்டி, ''ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருக்கலாம் என்று சட்டத்தில் சேர்த்திருக்கிறோம் — அதுவே ஹிந்தி பேசாத பகுதி மக்களுக்கு நாங்கள் அளித்துள்ள வரப்பிரசாதம்'' என்று பேசும் மத்திய ஆட்சியினர், பீகார் சட்ட மன்றத் தலைவரின் ''அபாய அறிவிப்பு''க்கு என்ன விளக்கம் கூறுவார்கள்? 1965க்கு முன்பே ஆங்கிலம் படிப்பது கூடக் கூடாது என்று குரல் எழுப்பும் ஹிந்தி வெறியர்கள் சட்டபூர்வமான அந்தஸ்து ஹிந்திக்குக் கிடைத்தவுடன் என்ன பாடுபடுத்துவார்கள் என்பது புரிகிறதல்லவா?

ஹிந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட பகுதியினர் இப்படி வெறி கொள்ளும் செயல் ஒருபுறம் இருக்க; ஹிந்தி பேசாத பகுதி மக்களுக்கு அபயம் கூறும் ஆட்சியாளர்கள் மறைமுகமாக, ஆனால் அதி வேகமாக அதிகார பலத்தைக் கொண்டு மத்திய ஆட்சியின் ஒவ்வொரு துறையிலும் ஹிந்தியைத் திணிக்கும் காரியத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். ஒருபுறம், ஹிந்தி பேசாத மக்களின் நலன் கருதியே ஆங்கிலமும் ஆட்சிக்கு உபயோகப்படுத்தப்படலாம் என்று சட்டத்தில் சேர்த்திருக்கிறோம் என்று

இரட்டை வேடம்

வெளியில் பிரசாரம் செய்வதும், மறைமுகமாக எல்லா இலாகாக்களிலும் ஹிந்தி கற்றேயாக வேண்டும் என்று வற்புறுத்துவதுமாக மத்திய ஆட்சியில் இருப்பவர்கள் இரட்டை வேடம் போடுகிறார்கள். ஒரு பெரிய பூபாகத்தை ஆளுகிற சர்க்கார் அந்த நாட்டு மக்களின் ஜீவாதாரப் பிரச்சினையில் இப்படி நம்பிக்கைத் துரோகம் என்று சொல்லக் கூடிய அளவில் செயல்படுவது அந்த ஆட்சிக்கும் நல்லதல்ல; நாட்டின் நலனுக்கும் உகந்ததல்ல.



சமீபத்தில் டில்லி சர்க்காரில் உயர்ந்த பதவி வகிக்கும் ஒரு தென்னாட்டுக்காரரிடம் உரையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. 'ஹிந்தி ஆட்சிமொழியானதும் நாங்களெல்லாம் டில்லியை விட்டு வெளியேற வேண்டியதுதான்' என்று மனக் கொதிப்போடு வேதனை ததும்பக் கூறினார். ஓர் உயர் அந்தஸ்தில் உள்ள பெரிய அதிகாரியின் நிலை இதுவென்றால், இலட்சக் கணக்கில் மத்திய ஆட்சியில் தொடர்புடைய ஹிந்தி பேசாத பகுதி உத்தியோகஸ்தர்களின் நிலை என்ன ஆகும் என்பதை நினைத்தாலே உள்ளம் நடுங்குகிறது.

ஆனால் இதற்கு என்ன வழி? சட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டது என்று அடங்கிவிட முடியுமா? சட்டத்தை மாற்றியமைக்க வழி வகை காண வேண்டாமா? இது போல் பத்திரிகைகளில் விவாத அரங்குகள் நடத்துவதால் மட்டும் பலன் ஏற்பட்டு விடுமா? நம்முடைய நாட்டில் மொத்தம் படித்த மக்கள் தொகை — கையெழுத்து மட்டும் போடத் தெரிந்தவன், எழுத்துக் கூட்டி இரண்டு வார்த்தைகள் படிக்கத் தெரிந்தவன் உட்பட — இருபத்தைந்து சத விகிதத்துக்குச் சற்றுக் கூடுதல் என்ற நிலையில் பத்திரிகை படிப்போர் தொகை எவ்வளவு? மற்ற எழுபத்தைந்து சத விகித மக்களுக்கு உண்மை நிலை உணர்த்தப்பட வேண்டாமா? துர்ப்பாக்கியவசமாக நமது நாட்டில் எந்த மக்கள் படித்துணர்ந்து நன்மை தீமைகளை அறிந்து நல்ல பொது அறிவு பெற்றவர்களாக விளங்குகிறார்களோ அந்த மக்கள் ஏனோ தானோவென்று 'நடப்பது நடக்கட்டும், நம்மால் என்ன செய்ய முடியும்?' என்று நம்பிக்கையற்ற நிலையில் வாழ்கிறார்கள். நான் முன்பு கூறிய அதிகாரியைப் போல் இலட்சக்கணக்கானோர் ஹிந்தியால் வரும் நிலைமையைத் தாங்களே நேரில் அனுபவித்தும் கூட வாய் திறவா மௌனிகளாக இருக்க வேண்டும் எனக் கருதுகிறார்கள். இப்பிரச்சினைகள் இந்தத் தலைமுறையோடு முடிகிற காரியங்கள் அல்லவே! வருகிற தலைமுறையின் வாழ்வு யாரிடம் ஒப்படைக்கப்படும்? — ஹிந்திக்காரர்களிடம்தானே?

எழுச்சி தேவை

அதற்கு ஒரு தடை ஏற்படுத்த, படித்தவர்கள், உத்தியோகம் பார்ப்பவர்கள், தமது குடும்ப நலனை, எதிர்கால சந்ததிகளின் நலனைக் கருதியாவது, அரசியல் சட்டம் அளித்துள்ள உரிமைகளுக்குட்பட்டாவது அமைதியான ரீதியில், சட்டபூர்வமாகக் கண்டிக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டாமா?



நல்ல செயல்களுக்காகவே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்திருப்பவர்கள். இதுபோன்ற நிலைமையை, மக்களின் எதிர்கால ஆபத்தை எதிர்க்கும் செயல்களை மேற்கொள்ளும் பொழுது, அவர்களுக்கு அரசியல் வர்ணம் பூசப்படுகிறது. அதனால் அரசியல் இயக்கங்கள் கவனித்துக் கொள்ளும் என்று படித்த, நடுத்தர மக்கள் உத்தியோகத்தில் ஈடுபட்டிருப்போர் வீணே இருந்தால் நமக்கு மட்டுமல்ல, நமது சந்ததியினருக்கும் தீராத தீங்கை நம்மை அறியாமல் வழிவகுக்கிறோம் என்பதுதான் பொருள். இந்த அபாயத்தைத் தடுக்க, தங்களின் வாழ்வைத் தியாகம் செய்ய, உயிரை வேண்டுமானாலும் அர்ப்பணிக்க, தொழிலாளர்கள் பல்லாயிரக் கணக்கில் முன் வருகிறார்கள். ஆனாலும், அந்த நல்லவர்களின் செயலுக்கு ஆட்சியாளர்கள் பல்வேறு காரணங்களைக் கூறி, ஏதுமறியாத பாமர மக்களை — இந்த நாட்டின் ஆட்சியை அமைக்கவும் மாற்றவும் உரிமை பெற்ற ஏழை மக்களை — க் குழப்பும் முயற்சியில் ஈடுபடுகிறார்கள்.

இந்தக் குழப்ப முயற்சிகளை முறியடிக்க, படித்த நடுத்தர மக்கள் துணிந்து செயல்பட வேண்டும். செய்வார்களா?

புரியாத ஹிந்தியைப் புகுத்துவானேன்?

ஜனாப் பஷீர் அகமத் சயீத்



[ஜனாப் பஷீர் அஹமத் சயீத் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றியவர். கல்வித் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டு தென் இந்திய கல்வி டிரஸ்டு என்ற ஸ்தாபனத்தை ஆரம்பித்து, அதன் தலைவராகச் சிறப்புப் பணி புரிந்து வருகிறார். தேனாம்பேட்டையிலுள்ள எஸ். ஐ. இ. டி. கல்லூரி சென்னையிலுள்ள பெண்கள் கல்லூரிகளில் முக்கியமான ஒன்று. ஆகவே நீதிபதி என்ற முறையிலும், உயர் கல்வியைப் போஷிப்பவர் என்ற முறையிலும் ஜனாப் பஷீர் அஹமது அவர்களின் ஆட்சி மொழி பற்றிய கருத்து ஆட்சியாளர்களின் கவனத்துக்கு உரியது.]

ஆட்சி மொழிப் பிரச்னை முழுக்க முழுக்க மொழியைப் பற்றியது. அரசியலைப் பற்றியது அல்ல. இதை மக்களும், மக்கட் பிரதிநிதிகளும் நன்கு மனதில் பதியவைத்துக்கொள்ளவேண்டும். மக்களுடைய உரிமைகளை நிலை நாட்டிக்கொள்ளவும், தீமைகளிலிருந்து பாதுகாப்புக் கோரவும் மேற்கொள்ளக்கூடிய எல்லா விவகாரங்களிலும் அரசியல் அம்சத்தை மொழிப் பிரச்னையிலிருந்து விலக்கியே ஆராய வேண்டும். அரசியல் அமைப்பின்படி பதினான்கு மொழிகள் நாட்டு மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் தனது வளர்ச்சிக்கும் தொடர்ச்சிக்கும் அரசாங்கத்திடமிருந்து ஊக்கமும் ஆதரவும் கோரிப் பெற உரிமை உள்ளவை. இவற்றை வளர்ப்பது சர்க்காரின் கடமையும் கூட. ஸ்விட்ஸர்லாந்து நாட்டில் நான்கு மொழிகள் தேசிய மொழிகளாக ஸ்விஸ் மாவட்டங்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அது போலவே நாமும் நமது நாட்டில் பதினான்கு மொழிகளைத் தேசிய மொழிகளாக அங்கீகரித்திருக்கிறோம். இந்த நிலைமையில் ஹிந்தியை ஆட்சிமொழியாகச் செய்வது அந்த மொழிக்குக் காட்டப்படும் பட்சபாதமாகும்; விசேஷ சலுகையாகும்.

விசேஷ சலுகை

ஹிந்தி ஆட்சிமொழியாக இருக்கத் தகுதி உடையது அல்ல என்பதற்கு அரசியல் நிர்ணய சபையில் இந்தத் தீர்மானம் ஒரே வோட்டு வித்தியாசத்தில் நிறைவேறியதாகக் கூறப்படுவதே நிதர்சனமாக ஆகும். எவ்வளவு பலவீனமான ஆதாரத்தின் மீது ஹிந்தி மொழி வீற்றிருக்கிறது என்பதை இது எடுத்துக் காட்டுகிறது. மக்கட் பிரதிநிதிகளின் பாதிப் பேர் மீது மறு பாதியினரின் கருத்து சபைத் தலைவரின் 'முடிவு' வோட்டுப் பலத்தினால் திணிக்கப்பட்டதிலிருந்து இந்த விஷயத்தில் ஜனநாயக முறை அடியோடு சீர்குலைந்து போயிற்று என்பது வெளிப்படை. கட்சிகளுக்குள்ள 'சமரசத்தை'யும் 'ஒற்றுமை'யையும் பிரதிபலிப்பதுதான் ஜனநாயக முறையில் செய்யப்படும் முடிவுகளின் லட்சணம். ஹிந்தி மொழி விஷயத்தில் இந்த முறை தோல்வியே அடைந்தது.

மக்களில் 42 சத விகிதத்தினர் ஹிந்திமொழியைப் பேசுகின்றனர் என்ற வாதம் உண்மையானதல்ல. புள்ளி விவரக் கணக்கை ஏற்றுக் கொண்டாலும் இந்த 42 சத விகிதத்தினரில் பெரும்பான்மையினர் வடக்கே அடுத்தடுத்துள்ள நான்கு ராஜ்யங்களில் வாழ்பவர்கள். பதினாறு ராஜ்யங்களுள்ள நமது பரந்த பாரதத்தில் ஹிந்திமொழி பேசுபவர்கள் நான்கு ராஜ்யங்களில் அடர்த்தியாக இருக்கிறார்கள் என்ற காரணத்தினால் இந்த மொழி பேசாத மக்கள் வாழும் மற்றப் பன்னிரண்டு ராஜ்யங்கள் மீது திணிக்க வேண்டும் என்பது ஏற்கக் கூடிய வாதமே அல்ல. ஜனநாயக முறை நிலவும் அமைப்பில் ஆட்சி மொழி, தேசிய மொழி போன்ற பிரச்னைகளுக்கு முடிவு காண்பதில் 42 சத விகிதம் என்ற கணக்கும் போதுமானதல்ல.



இதைச் சற்று விரிவாக ஆராயலாம். மகாத்மா காந்தி நாட்டின் பெரும்பான்மை மக்கள் பேசும் ''ஹிந்துஸ்தானி'' மொழியைத் தேசிய மொழியாக, ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று விரும்பினார். அதாவது, நாடு நகரங்களிலும், கடைத் தெருக்களிலும் சந்தைகளிலும் கிராமங்களிலும், வண்டிக்காரர்கள், கூலியாட்கள் போன்ற பாமர மக்கள் தினசரி நடைமுறையில் பேசிக் கொண்டிருக்கும் ஒரு மொழியைத்தான் நாட்டு மொழியாக்க அவர் விரும்பினார். மேலும் பேசப்படும் மொழிக்கு இரண்டு லிபிகள் — ஒன்று தேவநாகரி, மற்றொன்று பெர்ஷிய லிபி — இருக்க வேண்டும் என்று அவர் தெளிவாகவே சொன்னார். ஆனால் நாம் காண்பது என்ன? பெரிய நகரங்களான டில்லி, லக்னோ, அலஹாபாத், கான்பூர், கல்கத்தா, பம்பாய், சென்னை போன்ற இடங்களிலும் பல கிராமப் பகுதிகளிலும் கூட மக்கள் பேசும் மொழியானது இப்போது திணிக்கப்படும் ஹிந்தி மொழியை விட முற்றிலும் மாறுபட்டது என்பது கவனிக்கத்தக்கது. வானொலியில் கேட்கப்படும் ஹிந்தியும், கட்டாய பாடமாக வைக்கப்பட்டுள்ள பள்ளிகளில் சொல்லிக் கொடுக்கப்படும் புத்தக ஹிந்தியும், கடைத் தெரு ஹிந்தியும் முற்றிலும் மாறுபட்டவை. பேசப்படும் ஹிந்திக்கும் பள்ளிக்கூட ஹிந்திக்கும் எவ்வளவோ வித்தியாசங்கள் இருக்கின்றன. மக்கள் பேசும் மொழியைத்தான் நாட்டின் பொது மொழியாகச் செய்ய வேண்டும் என்று காந்திஜி விரும்பினார். இப்போது செய்யப்படுவது அதுவல்ல. ஒரு புது மொழி. ஒரு புதிய வழக்கு. பேசும் மொழிக்கும் வழக்குக்கும் மாறான புது மொழி. சாதாரண மக்களால் சுலபமாகப் புரிந்து கொள்ள முடியாத ஒரு மொழி மக்கள் மீது திணிக்கப்படுகிறது. இந்தத் திணிப்பு நாட்டின் தேசிய மொழியை வளர்க்கும் பணி, நாட்டின் பொது மொழியை அபிவிருத்தி செய்யும் பணி என்ற பெயரில் நடைபெற்று வருகிறது. இது அப்பட்டமான பொய்.





அப்பட்டமான பொய்

வழக்கில் இல்லாததும், ஹிந்தி வெறியர்களால் தேசிய மொழி என்று புதிதாகச் சிருஷ்டிக்கப்பட்டு வருவதுமான இப் புது மொழிக்கு எவ்வித பின்னணி பலமும் இல்லை. சம்பிரதாய வலிமையும் இல்லை. கலாசாரம், வளமூட்டும் வரலாறு இவையும் இல்லை. இலக்கியச் சூழலில் இடம் பெறாதது. பேசும் மொழி மட்டுமே — இதை உருது மொழி என்று சொன்னாலும் சரி, ஹிந்துஸ்தானி என்று சொன்னாலும் சரி, — தேசிய மொழியாக ஆவதற்கு வேண்டிய தன்மைகள் எல்லாம் பெற்றிருக்கிறது. ஆனால் இதுதான் அமுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு வருகிறதே. இதன் விளைவு லட்சக்கணக்கானவர்கள் ஹிந்தியில் பல்வேறு பட்டங்கள் பெற்றிருந்தாலும் பத்து அல்லது பதினைந்து சத விகிதத்தினர் மட்டும் தங்கள் கருத்துக்களைத் தாங்கள் படித்த ஹிந்தி மூலம் சொல்லக் கூடிய நிலையில் இருக்கின்றனர். படித்துப் பயிற்சி பெற்ற பின்னரும் இம்மாதிரி ஒரு நிலை நிலவுகிறது என்றால், இப் புது மொழியை நாட்டின் மீது ஏன் திணிக்க வேண்டும்? பேசாத ஒரு மொழியை, வடக்குப் பிராந்தியங்களில் கூட வழக்கில் இல்லாத ஒரு மொழியை, ஹிந்தி அறிந்தவர்கள் என்று கருதப்பட்டவர்களாலேயே புரிந்து கொள்ள முடியாத ஒரு மொழியை நாட்டின் மற்றப் பகுதியின் மீது திணிப்பானேன்? வளர்ச்சி அடையாததும் உயர் கல்விக்கு முக்கியமாக விஞ்ஞானத் துறையில் தகுதியற்றதுமான ஒரு மொழியை மக்கள் மீது சுமத்துவது மக்களின் முன்னேற்றத்தைத் தடை செய்வதாகும்.



ராஜ்ய மொழிகளும் பிராந்திய மொழிகளும் ஒன்றுக்கொன்று எப்படி விரோதம் பாராட்டிக் கொள்ளுகின்றன என்பதையும், அவற்றின் பரஸ்பர மோதல்களினால் தேசிய ஒருமைப்பாட்டுக்கு எத்தகைய அபாயம் விளைகிறது என்பதையும் உள்ளபடி உணர்ந்தால், ஆட்சிமொழியாக ஆங்கிலத்தை நீடிக்கச் செய்ய வேண்டும் என்பதன் அவசியம் சந்தேகமின்றி நிலைநாட்டப்பட்டு விடும். மொழிவாரி அடிப்படையில் ராஜ்யங்கள் புனரமைப்பினால் ஏற்பட்ட தீமைகளைப் பற்றி நாம் நன்றாகவே அறிந்திருக்கிறோம். கல்லூரிகளிலும் கலாசாலைகளிலும் பிராந்திய மொழிகள் மட்டுமே

போதனு மொழியாக இருக்குமேயானால் ஒரு மொழியில் தேர்ச்சி பெற்றுத் திறமையுடைய எவரும் வேற்று மொழி வழக்கிலுள்ள இதரப் 'பிராந்திய'ங்களில் தேசிய அலுவல்களுக்குத் தகுதியுள்ளவனாகக் கருதப்பட மாட்டான். ஏனெனில் மொழி அடிப்படையில் இரண்டு ராஜ்யங்களுக்கிடையே பொதுவானது என்ற அம்சமே ஒன்றுகூட இருக்காது. முக்கியமான தஸ்தாவேஜுகள் அனைத்தும் பிராந்திய மொழியிலேயே வைக்கப்பட்டு, நீதிமன்றத் தீர்ப்புகளும், கீழ்க் கோர்ட்டுகளிலிருந்து உயர் கோர்ட்டு வரையிலும் அந்தந்தப் பிரதேச மொழிகளில் மட்டுமே கூறப்பட வேண்டும் என்றும் ஆகிவிட்டால் அதற்கின் விளைவுகளை எண்ணிப் பார்க்கவே மனம் கூசுகிறது. இப்போதே பர்மா உயர்நீதி மன்றத் தீர்ப்புக்களை மேற்கோள்களாக இந்திய நீதி மன்றங்களில் எடுத்துக் காட்டுவது நின்றுபோய் விட்டது! ஏனெனில் அவை யெல்லாம் பர்மிய மொழியிலேயே எழுதப்பட்டிருக்கின்றன. அதே போலத்தான் பம்பாய் நீதி மன்றங்களில் மராத்தி மொழியில் எழுதப்படும் தீர்ப்புகளும் அலஹாபாத் உயர் நீதி மன்றங்களில் ஹிந்தி மொழியில் சொல்லப்பட்ட தீர்ப்புகளும், கல்கத்தாவில் வங்க மொழித் தீர்ப்புகளும் சென்னை கோர்ட்டுகளில் தமிழ்த் தீர்ப்புகளும் இதர கோர்ட்டுகளுக்கு ஆதாரங்களாகக் கிடைக்காமல் போய்விடும். இம்மாதிரி தேசிய ஒற்றுமை சிதறிப் போகும்படியான சிந்தனையற்ற நடவடிக்கைகளை நமது அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியது அவசியம்தானா என்பதை ஆழ்ந்து ஆலோசிக்க வேண்டும்.

தேசிய ஒற்றுமை சிதறும்



விஞ்ஞானத் துறையிலும் தொழில் நுட்பக் கலை, பொறி இயல் துறைகளிலும் ஆங்கில மொழி நமக்கு அவசியம்தான் என்பது பொதுவாகவே அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஆரம்ப வகுப்புகளில் இருந்தே ஆங்கில மொழியையும் இலக்கியத்தையும் கற்பித்துப் பலமான அஸ்திவாரம் அமைத்தாலன்றி உயர் படிவங்களில் விஞ்ஞானத்துக்கு மட்டும் ஆங்கிலத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது எவ்வாறு சாத்தியமாகும்? இது வெறும் வாய்ச் சொல் ஆதரவு என்றே ஏற்படும். எந்த மொழியிலும் போதிய அறிவு வளர வேண்டுமானாலும், ஆரம்பக் கட்டங்களிலிருந்தே அந்த மொழி போதனு மொழியாக இருந்தால்தான் முடியும். ஆகவே ஆங்கில மொழி பள்ளிகளில் அடிப் படிவங்களிலிருந்தே இரண்டாவது மொழி, மூன்றாவது மொழியாக இல்லாது, கட்டாய மொழியாகவே செய்யப்பட வேண்டும். எப்படியும் உயர் பள்ளி, கல்லூரிக் கட்டங்களில் நிச்சயமாக ஆங்கிலம் போதனு மொழியாக இருக்க வேண்டும்.

இதர நாடுகளில் ஆங்கிலம் கட்டாய பாடமாகச் சொல்லித் தரப்படுகிறது. அது போலவே நம் நாட்டிலும் இருக்கலாம் என்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் நமது நிலைக்கு இத்தகைய சலுகை போதாது. ஏனெனில் உலகத்தில் எந்த நாட்டிலும் பதினான்கு மொழிகள் தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்படவில்லை. எந்த நாடும் ஒரு புது மொழியை சிருஷ்டி செய்து அதைத் "தேசிய மொழி"யாக நாட்டின் மீது திணிப்பதற்காக முயற்சி செய்ததில்லை. இவ்விரண்டும் நமது நாட்டில் மட்டுமே காணப்படும் நிலைமை. இங்கே மக்கள் பேசும் மொழி அடியோடு காற்றில் பறக்க விடப்பட்டது. அதற்குப் பதிலாக வானொலி மூலமும், பள்ளிகள், கல்லூரிகள், பாடப் புத்தகங்கள் மூலமும், ஒரு புது மொழி உருவாக்கப்பட்டு நாட்டு மக்கள் மீது திணிக்கப்படுகிறது. இதன் மூலம் பன்னிரண்டு ராஜ்யங்களில் உள்ள மக்களுக்கு ஏற்படும் கஷ்டங்களை ஒருவரும் பொருட்படுத்துவதில்லை. மொழி ஒன்றை மட்டும் காரணமாகக் கொண்டு ஒரு பகுதி மக்கள் மற்றப் பகுதி மக்களுக்குப் பாதகம் விளைவிக்கக் கூடிய விசேஷ சலுகை பெறுவது எவ்விதத்திலும் நியாயமல்ல. முற்றிலும் தீமையே விளைவிக்கக் கூடிய இந்த முயற்சியை இப்போதே தேசத்தின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் கருதி முறியடிக்க வேண்டும். காந்திஜியின் உண்மைக் கருத்துக்களையும், கொள்கைகளையும் சாதாரண மக்கள் உணர்ந்து கொண்டிருப்பது போல் செயலில் வடித்துக் காட்ட வேண்டும். அப்போதுதான் நாட்டில் உண்மையான ஒருமைப்பாடும், ஒருமைப்பாட்டுக்கு ஏற்ற சூழ்நிலையும் உண்டாகும்.

ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து

ஹிந்தி ஆட்சி மொழிக்கு எதிராகத் தோன்றியுள்ள எதிர்ப்பு, கட்சிகள் மனப்பான்மையில் தோன்றியதல்ல. இப் பிரச்னையின் தன்மை நிலைகளை ஆராய்ந்து ஆங்கிலத்தினால் ஏற்படும் உபயோகத்தையும் அதனுடைய அவசியத்தையும் கருத்தில் கொண்டு நம்முடைய பொருளாதார வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் சிறுபான்மை மக்களால் பேசப்பட்டாலும் நாடு முழுமைக்கும் ஹிந்தி பேசும் மக்களுக்கும் கூட, ஆங்கிலம் அவசியம் என்பதுதான் நாம் உணர்ந்து கொள்ள வேண்டியது. தேசிய மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் இருப்பதற்கு ஆங்கிலத்தைப் போல் தகுதி வாய்ந்த மொழி வேறு ஒன்று இல்லை.



சிறந்த தரத்துடன் சிக்கனமும்
குடும்பத்தினர் அனைவருக்கும் கிடைக்கிறது
எத்தனை சிக்கனமானது! எத்தனை புத்துணர்ச்சி தருவது! இந்தப் பெரிய சைஸ் டால்க்கில் உங்களுக்கு பெயர் பெற்ற கால்கேட்டின் சீரிய தரம் கிட்டுகிறது.
எத்தனை நறுமண முடையது! எத்தனை நீடித்திருப்பது! ஸ்நானத்திற்கு பின்- வெளியே செல்லுமுன்- தாராளமாக உங்கள் உடலில் தூவிக்கொண்டு நளினமாய் விளங்குங்கள்.
எத்தனை சேர்த்தியானது! எத்தனை மிருதுவானது! கால்கேட் ஆல்-பர்ப்பஸ் டால்க்கை குழந்தை விரும்புகிறது. இளஞ்சருமத்திற்கு அது மிகவும் ஏற்றது.
COLGATE
All Purpose
TALCUM POWDER
கால்கேட்
ஆல்-பர்ப்பஸ் டால்க்
அபூர்வ மலர்களின் நீடித்திருக்கும் நறுமணங்கொண்டது!



கோபால் பல்பொடி
பல் வலி, பல் அரணை, வாய் நாற்றம் பல்லில் இரத்தம் வடிதல், முதலிய பல் வியாதிகளை குணப்படுத்தி பல்களுக்கு வெண்மையும் பலத்தையும் தருகிறது.
GOPAL TOOTHPOWDER
கோபால் பல்பொடி
தயாரிப்பாளர்: எஸ்.பி.எஸ்.ஜெயம் அன் கோ.
25, கீழ நாப்பாளையத் தெரு....... மதுரை.


போஸ்டு
பேஷ்! நல்ல செய்தி!
இதைப் பாருங்க! போஸ்டில் நல்ல செய்தி வந்திருக்கு!
என்ன நல்ல செய்தி? கொண்டா இங்கே!
நீங்க 'இன்கம்டாக்ஸ்' பணம் அதிகமா கட்டி விட்டேளாம். 'ரீபண்டு' ரூபாய் பதினைந்து அனுப்பி இருக்காங்களாம்!
சபாஷ்! சபாஷ்!
அதோட இருபது ரூபாய் சேர்த்து எனக்கு ஒரு புடவை....!
என்ன புரிந்ததா!
சரிம்மா சரி!
அப்பப்பா! இந்த 'இன்கம்டாக்ஸ்' காரன் தொந்தரவு தாங்க முடியலே!



"வெள்ளையணிந்தவள்"

"இந்த அடுத்த வீட்டுக்காரி இருக்கிறாளே....''

''யார்? அந்த வெள்ளைப் புடவைக்காரியா?''

''ஆமாம். அவள் மகா ராங்கிக்காரியாக இருக்கிறாள்.''

''ஏன், என்ன நடந்தது?'' என்று கேட்டவாறு தினசரியிலிருந்து முகத்தை விலக்கி, ராஜத்தை நோக்கினேன்.

''பின்னே என்ன? வெள்ளையாக உடுத்திக் கொள்ளுகிறாளே என்று வெள்ளையான மல்லிகைப் பூவை ஆசைப்பட்டு எடுத்துக் கொடுத்தேன். அது திமிரோடு 'நான் மல்லிகைப் பூவே வைத்துக் கொள்வதில்லை' யென்று சொல்லிவிட்டது. வைத்துக் கொள்ளாவிட்டால் என்ன? கொடுத்தவர் மனம் நோகக் கூடாது என்பதற்காகவாவது வாங்கிக் கொண்டு போய் வீட்டுக்குள் வீசி எறியக் கூடாதா?'' என்றாள் ராஜம்.

''ராஜம்! நீயாகத் தேடிக் கொண்டது தானே இது? நீயாக அவளைக் கூப்பிட்டு வைத்துக் கொண்டு பேசினாய். போதாக் குறைக்குப் பூ வேறு கொடுத்தாய். உனக்கே இது ஒரு கெட்ட குணமாகப் போய் விட்டது. ஊர்ப் பெண்கள் எல்லோரையும் கூப்பிட்டு வைத்துப் பேசுவதும் அவரவர்களுக்கு ஆசை வழிய வழிய உதவி செய்வதும் அதனால் வந்த வினை தானே இது?''

''ஆமாம். யாரைப் பற்றியாவது குற்றம் சொன்னால், உடனே அந்தக் குற்றத்துக்கும் நான்தான் காரணம் என்று சுற்றி வளைத்து என் மண்டையை உருட்டாவிட்டால் உங்களுக்குப் பொழுது போகாது....யாருக்கு வேண்டிக் கிடக்கிறது உங்கள் நியாயம்?''

ராஜம் தன் சிறு முகத்தை முறுக்கிக் கொண்டாள். நான் மேற்கொண்டு தினசரியில் என் இருக் கண்களைச் செலுத்தினேன்.

இரண்டு நிமிடங்கள் ஆகியிருக்கும். ராஜம் திரும்பவும் தொடங்கினாள். ''ஏதோ சிறு வயதுப் பெண்ணாக இருக்கிறாளே என்று தானே கொடுத்தேன். வாங்கிக்கொண்டால் என்னவாம்? இதே போல்தான் கடந்த வெள்ளிக் கிழமை கூட வாசனை கலந்த குங்குமப் பொட்டலத்தை வேணுமென்றே வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தேன்; அதென்னமோ அந்தச் சிறுமை எனக்கு மிகவும் பிடித்துப் போயிற்று. இலட்சணமாக வேறு இருக்கிறாள். என்னவோ மனம் துடிக்கிறதே என்பதற்காகக் கமலா ஞாபகத்தில் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தேன். அதையும் இப்படித்தான் செய்தாள். 'நான் குங்குமமே இட்டுக் கொள்வதில்லையம்மா' என்று சொல்லிப் பிகு செய்து கொண்டாள்; ஆனாலும் மகா ராங்கிதான், இவளுக்கு...''

ராஜம் தன்னிச்சையாகப் பேசிக்கொண்டு போனாள். என் மனம் என்னவோ அந்த அடுத்த வீட்டு வெள்ளைச் சேலைக்காரியைப் பற்றிக் கொண்டது.

இந்த வெள்ளைச்சேலைக்காரி கடந்த மாதம் தான் அடுத்த வீட்டில் வந்து குடியேறினாள். பெரிய கூடார வண்டி வந்து அதிலிருந்த பொருள்களெல்லாம் இறக்கியாகி விட்ட பிறகு, மெல்ல அவள் எங்கள் வாயிற்

படிக்கு வந்தாள், இதே வெள்ளைப் புடவையுடன். அடுத்த வீட்டுக்கு யாரோ குடி வரப் போகிறார்கள் என்று தெரிந்தது முதற்கொண்டே, 'அவர்கள் யார், எந்த ஊரிலிருந்து வருகிறார்கள், குடும்ப உறுப்பினர் எத்தனை பேர், அதன் தலைவன் எங்கு வேலை செய்கிறவன் என்பன போன்ற எண்ணக் கேள்விகளை மனத்தில் ஊற விட்டிருந்த ராஜம் அவர்கள் வருகிறார்கள் என்றபோதே, வாசலுக்கு வந்து நின்று விட்டிருந்தாள்.

நான் இன்றைப் போலவே அன்றும் இதே மாதிரி சாய்வு நாற்காலியில் படுத்துத் தினசரியைப் படித்துக் கொண்டிருந்தேன்.

வாயிலுக்கு வந்தவன் அங்கு ஏற்கனவே நின்றிருந்த என் மனைவிக் கிழவியை நோக்கி, ''வீடு ஒரே அழுக்குப் பரவிக் கிடக்கிறது அம்மா. விளக்குமாறு வேண்டும்'' என்று கூறித் தயங்கினான்.

''விளக்குமாறு? அதை இரவல் கொடுக்கக்கூடாதே அம்மா.''


''இல்லே. நான் இரவல் கேட்க வரவில்லை; எங்களுக்கு ஒன்று வாங்கியாகவேண்டும். அது எங்கே கிடைக்கும் என்று கேட்கிறேன்.''

''ஓ...அதற்குக் கடைத் தெருவுக்குப் போயாக வேண்டும்...''

. ''ம்...ம்'' — அவன் தயங்கி நின்றான்; அதற்குள் ராஜம் உள்ளே நுழைந்து வந்து பயன்படுத்தாமல் வாங்கிப் புதிதாக வைத்திருந்த ஒன்றைக் கொண்டு வந்து அவனிடம் நீட்டினாள். ''புதிசு. எனக்கு வேண்டுமென்று வாங்கி வைத்திருந்தேன்....''

''பரவாயில்லை. நான் நாளைக்கு அவசியம் வாங்கிக் கொடுத்து விடுகிறேன்.!'' அவன் நன்றியோடு விளக்குமாற்றைப் பெற்றுக் கொண்டு சென்றான்.

அவன் சென்ற பிறகு ராஜம் என்னை நோக்கித் திரும்பினாள். ''பெண்ணைப் பார்த்தீர்களா? அதென்னவோ இவளை இந்தப் புடவையிலே பார்த்ததுமே எனக்குக் கமலாவின் நினைவு தான் வந்தது. கிட்டே வந்த பிறகு தான் பார்த்தேன். சாடை மாத்திரமில்லை. மூக்கும் விழியும் கூட அவளைப் போலவேதாம் இருக்கின்றன. அவள்



தா. பி. வரதராசன்

கடைசிக் காலத்தின் போது இதே மாதிரி 'பார்டர்' இல்லாத வெள்ளைப் புடவையைத்தான் கட்டிக் கொண்டிருந்தாள்...உம்'' —ராஜம் இந்த வார்த்தைகளைச் சொல்லுகிறபோதே அவன் கண்கள் கலங்கிவிட்டன. அவன் மனத் திரையில் அவனுடைய காலஞ்சென்ற தங்கை கமலாவின் நினைவு தோன்றியிருக்க வேண்டும்.

ராஜத்தைப் போலவே அவன் தங்கை கமலாவும் சிறந்த அழகிதான். திருமணமான ஒரு வருடம் கழித்துக் கணவனுடன் சிறு பூசல் விளைத்துக் கொண்டு தாய் வீடு வந்தாள். தொடர்ந்து இரண்டு வாரங்கள்வரை பல்லைக் கடித்துக் கொண்டு அவனிடமிருந்து கடிதம் வராமையைப் பொறுத்துக்கொண்டாள். மேற்கொண்டும் வராமற் போகவே, பதினைந்தாவது நாளே கிராம மக்களுக்கென்றே தெரிந்துள்ள ஏதோ ஒரு விதையைத் தின்று உயிரை மாய்த்துக் கொண்டாள். நிலைமை மோசமாகிய பிறகு நாங்கள் இருவரும் கூடத் தந்தி கிடைத்து அங்கே சென்றிருந்தோம்.

'அந்தக் கமலாவைப் போலவா இருக்கிறாள், இந்த அடுத்த வீட்டுக்காரியும்?' நான் சரியாகப் பார்க்காததற்கு வருந்தினேன். ஆனாலும் என்ன, அடுத்த வீட்டில் குடியேறியிருக்கிற காரணத்தால் அடிக்கடி அவளைப் பார்க்க முடிந்தது. ராஜம் சொன்னது உண்மைதான். கமலாவின் சாயல் மாத்திரம் அல்லாமல் முகமும் அப்படியே பொருந்தியிருந்தது. அந்தப் பொருத்தத்தைக் காரணமாகக் கொண்டுதான் ராஜம் அவளுக்கு விழுந்து விழுந்து உபசாரம் செய்கிறாள்.

இந்த ஒரு மாத காலத்துக்குள்ளாக அடுத்த வீட்டு வெள்ளைப் புடவைக்காரியைப் பற்றிச் சில செய்திகள் ராஜம் மூலமாகவும், நேர் தரிசன மூலமாகவும் என் நெஞ்சுக்கு எட்டியிருந்தன. அவற்றுள் முக்கியமாக அவள் பெயரைச் சொல்ல வேண்டும். மாலதி என்பது அது. மேற்கொண்டு அந்தப் பெரிய வீட்டில் அவளும் அவள் தாயாரும், அவளுடைய தம்பியும் ஆகிய மூவர்தாம் இருக்கிறார்கள். அவள் கலெக்டர் அலுவலகத்தில் வேலை பார்க்கிறாள். அவள் ஊதியத்தில் அந்த மூன்று பேரும் பிழைத்து வருகிறார்கள்.

மாலதியின் தம்பி ஏழாவது வகுப்புப் படிக்கிறானாம். அவனுக்குரிய டி. ஸி. வந்ததும், பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர் என்ற ஹோதாவில் என் பள்ளியில் சேர்த்துக் கொள்ள, மனைவி என்ற ஹோதாவில் ராஜம் கட்டளை பிறப்பித்திருந்தாள். கணவன் என்ற ஹோதாவில் நான் அதை ஏற்றுக் கொண்டிருந்தேன்.

ராஜம் குங்குமம் கொடுத்ததை மறுத்த பிறகு மாலதியின் நெற்றியை நன்கு கவனித்தேன். குங்குமம் இல்லைதான். ஆனால், நாகரிக முறை என்றெண்ணியோ என்னவோ சிவப்புச் சாந்து இட்டிருந்தாள். அன்றைக்கே ராஜத்திடம், ''அவள்தான் குங்குமம் இட்டுக்கொள்வதில்லையே, சிவப்புச் சாந்து வாங்கிக் கொடேன்'' என்றுகூடச் சொன்னேன்.

''ஆமாம்! எனக்கும் அவளுக்கும் இங்கே உறவு கொடி கட்டிப் பறக்கிறது. அவளுக்குத் தேவையானதாக வாங்கித் தருகிறேன்.''

''உறவுக்கு மாத்திரம் வாங்கித் தருவதாக இருந்தால், பின் ஏன் குங்குமம் மாத்திரம் வாங்கித் தந்தாய்?''

அவன் ஒன்றும் பேசவில்லை.

இன்று மல்லிகையின் மறுப்புக்குப் பிறகு சற்றுப் பொறுத்துத் திரும்பவும் பேச்சுக் கொடுத்தேன். ''அவள் மல்லிகை வைத்துக்கொள்வதே இல்லையோ?''

''மல்லிகை மாத்திரம் இல்லை. எந்தப் பூவையுமே வைத்துக் கொள்வதில்லையாம். அவள் அம்மாக்காரி சொன்னாள்.''

''ஓகோ... பூ வைத்துக் கொள்வதில்லை; குங்குமம் இட்டுக் கொள்வதில்லை. வெள்ளைப் புடவை உடுத்திக் கொள்கிறாள்.... ராஜம்... எனக்கென்னவோ அவள் மேல் சந்தேகமாக இருக்கிறதே?''

அவள் உடனே கன்னங்களில் 'பட்பட்' என்று போட்டுக் கொண்டாள். ''உஸ்... சும்மா சொல்லாதீர்கள்... பாவம். அதைப் பார்த்தால் எனக்கு அந்த மாதிரி எண்ணம் ஏதும் ஏற்படவில்லை. ரொம்ப நல்ல பெண்.''

''சற்றுமுன்தான் நீ ராங்கிக்காரி என்றாய்''

''நல்ல பெண்களுக்கு ராங்கியும் கொஞ்சம் இருக்கத்தான் செய்யும்.''

''அப்படியா? உன்னிடம் இனி மனோதத்துவம் கற்றுக்கொள்ள வேண்டும்.''

நான் அன்று தினசரியைப் புரட்டிக் கொண்டு சாய்வு நாற்காலியில் விழுந்து கிடந்தேன். ராஜம் என் முன் வந்தாள். ''மாலதிக்கு என்ன வயது தெரியுமோ?''

ஆர்வத்துடன் அவளை நோக்கினேன்.

''பதினெட்டு; இன்னும் கலியாணம் ஆகவில்லை....''

''இல்லாவிட்டால் ஆகி....'' என்று நான் தொடர்வதற்குள், ''அப்படியெல்லாம் நீங்கள் அந்தக் குழந்தையை ஒன்றும் சொல்லாதீர்கள்... நிச்சயமாக அவளுக்குக் கலியாணம் ஆகவில்லை....''

''பின் ஏன் அவள் வெள்ளை யுடுத்தி, நெற்றிக்குச் சாந்திட்டு, பூ வெறுத்து...''

''பாவம்! அவள் அம்மா அழுகிறாள், அழுகிறாள், அப்படி அழுகிறாள்.'' என்று என் தொடர்ச்சிக்கு முற்றுப் புள்ளி வைத்தாள். ''பாவம்... யாரோ ஒரு பிள்ளையாண்டானை அவள்....''

''ஓ... அது வேறா? அதுதான் எல்லா இடத்திலேயும் சந்தி சிரிக்கிறதே!'' இப்பொழுது எனக்கு அவளிடம் வெறுப்புத் தோன்றியது.

''நீங்கள் சும்மா இருங்கள். கடைசியில் அந்தப் பிள்ளையாண்டான் அவளை விட்டு விட்டானாம். உடனே, வெறுத்துப்போய்...''

''இப்படி விதவைக் கோலம் பூண்டு விட்டாள். இல்லை?'' எனக்கு இந்த நாகரிகம் முன்னேற்றம் என்று சொல்லிக் கொண்டு பழகும் சமுதாயத்தின் மீதே கோபம் பற்றிக் கொண்டு வந்தது. ''இதோ பார், ராஜம், இந்தப் பெண்ணைக் காதலித்தானே....அந்தக் கழுதை உயிரோடு இருக்கிறானா?''

''இருக்கிறானாம். எங்கே என்றுதான் தெரியவில்லை.''

''இருக்கிறானல்லவா? அப்பொழுது உண்மையிலேயே அவன் மீது ஆசை வைத்த இவள் அவன் இறந்த பிறகு பூண வேண்

டிய இந்தக் கோலங்களை அவன் உயிரோடு இருக்கையிலேயே பூணலாமா?''

''நீங்கள் அழகாக வாதம் பண்ணுகி றீர்கள். இதை அவளிடம் எப்படி நாம் கேட்க முடியும்?''

''நீ கேட்காவிட்டால், இப்படி அழைத்து வா; அவளை. நான் கேட்கிறேன்...கழுதை கள்! இந்தச் சினிமா க் கதைகளையும், காதல் கதைகளையும் படித்துப் படித்து இந்த இள வட்டங்களே இப்படித்தான் கெட்டுவிடுகின் றன. சரி, இதுதான் இப்படிக் கிடக்கிறதே, அவள் அம்மா என்ன செய்தாளாம்?''

''என்ன செய்வது? கலியாணம் என்று தொடங்கினாலே அவள் மூன்று நாளைக்குச் சாப்பிட மாட்டேன் என்கிறாளாம். 'இனி, இந்தப் பிறவியிலே எனக்குக் கலியாணமே இல்லை' என்கிறாளாம்.''

''வெட்கம், வெட்கம். கழுதையை நான்கு இழுப்பு இழுத்து மணையில் உட்காரவைத்து ஒருவனை விட்டுக் கழுத்தில் தாலியைப் பூட்டடா என்று சொல்ல வேண்டாம்?''

''நீங்கள் செய்வீர்கள்...''

''ஏன்? நான் செய்யாமல் என்னடி? நம் கழுதை-ஒன்று இருந்ததே.. அதைத் திருத்த வில்லை நான்?''

''ஆமாம். நன்றாகத் திருத்தினீர்கள்! அப் படி என்னதான் திருத்தினீர்களோ நீங்கள்! இன்றைக்கு வந்த கடிதத்தில்கூட அது கலி யாணமே வேண்டாம் என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறது....''

''உம். சொல்லும், சொல்லும். எத்தனை நாளைக்குச் சொல்லும்?''

''என்னவோ போங்கள். வீட்டுக்கு வீடு வாசற்படிதான்!''

மாலதியின் தாய்மாமா என்று சொல்லிக் கொண்டு ஒரு கிழவர் ஒரு நாள் என் முன் வந்தார். மாலதியின் தாயாரும் ராஜூவும் தான் அவரை எனக்கு அறிமுகப்படுத்தி னார்கள். தங்கை வீட்டைப் பார்த்துவிட்டுப் போக வந்திருந்தாராம்.

அவர்கள் வீட்டுக் குடும்பச் செய்தி முழு வதும் எங்களுக்கும் தெரியாகி யிருக்கவே, நாங்கள் இரண்டு பேருமே அது குறித்து நன்றாகப் பேச முடிந்தது. ஆனால், பாவம் பெண் பிள்ளைகளைப் போலவே அவரும் வருத்தப்படவே செய்தார். ''என்ன செய் வது? இரண்டு வருடங்களாகத் திருத்திப் பார்த்து விட்டேன். ஒன்றும் முடியவில்லை. சாம பேத, தான, தண்டம் எதுவும் மீதி யில்லை. ஒன்றுக்கும் படிய மாட்டேன் என் கிறாள். சரி, அவனையாவது சரிப்படுத்தலாம் என்றால், அவன் யார் என்றே எங்களுக்குத் தெரியாது. நாங்கள் பார்த்ததும் இல்லை. அவள் புகைப்படமும் இல்லை. அவன் முக வரியைக் கூடச் சொல்ல மாட்டேன் என் கிறாள். அவனாக விரும்பாதபோது, அவன் பெயரையோ, முக வரியையோ மற்றவருக் குத் தெரிவிப்பதே தவறு என்கிறாள் சார்.''

இப்பொழுது அவளுடைய கதை எனக்கே சற்று வருத்தத்தை அளித்தது. ''இருந் தாலும் கொஞ்ச நாட்கள் அதன் போக்கில் விட்டுப் பாருங்கள்'' என்றேன்.

''கொஞ்ச நாள் என்ன? வருடம் இரண் டாகிறது சார்'' என்றார் அவர்.

பௌராணிகர் ஒருவர் பிரவசனம் நடத்திக்கொண்டிருந்தார். கூட்டத் தில் நாஸ்திக வாதம் பேசும் கம்யூ னிஸ்ட் ஒருவன் புகுந்தான், ஏதாவது தொந்தரவு கொடுப்பது என்ற தீர் மானத்தோடு.



''தினம் ராமா யணத்தைக் கேட் டாலோ, நாலு சுலோகம் படிச் சாலோ ரொம்ப நல்லது. சொர்க்க லோகம் அடைய லாம்'' என்றார் பௌராணிகர்.

நாஸ்திகவாதி எழுந்து நின்றான். ''சொர்க்கத்துக்காவது போகலாவது? எல்லாம் முட்டாள்தனம்!'' என்றான்.

''நீ கெட்டிக்காரத்தனமாய் நர கத்துக்கே போ! நாங்கள் முட்டாள் தனமாய்ச் சொர்க்கத்துக்குப் போகி றோம்!'' என்றார் பௌராணிகர்.

''நான் இப்படிக் கேட்கிறேனே என்று நீங்கள் தவறாக நினைக்க வேண்டாம். வாயும் செவியுமாக இரண்டு குடும்பங்களும் கலந்து விட்டன. இனிமேல் உங்கள் பிள்ளை வேறு, எங்கள் பிள்ளை வேறு அல்ல....'' என்று அடிப்படையோடு தொடங்கினேன்.

''அநேகமாக நம் குழந்தையை அந்தப் பிள்ளையாண்டான் தனியிடத்தில் இங்கு எங்காவது சந்தித்திருக்கிறான் என்று நான் நினைக்கிறேன். இல்லாவிட்டால் ஒரு பெண் ணால் இரண்டு வருட காலம் இப்படி இருக்க முடியாது சார்'' என்றேன்.

உடனே அவர் முகம் கோவைப் பழமாகச் சிவந்து விட்டது. இருப்பினும் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, ''சார்! இந்த வார்த்தை களை வேறு யாராவது சொல்லி யிருந்தால் நான் சும்மா இருந்திருக்க மாட்டேன். பழகின தோஷத்துக்காக உங்களை விடுகிறேன். எங்கள் பெண்ணை நீங்கள் அந்தமாதிரி கேவலமாக நினைக்க வேண்டாம். அவள் நெருப்பு. அவள் வைராக்கியக் கொழுந்து'' என்றார்.

என் நிலைமை தர்ம சங்கடமாகி விட்டது. ''மன்னிக்க வேண்டும், உங்கள் மனத்தைப் புண்படுத்தியதற்காக.''

''இல்லை. பரவாயில்லை. நீங்களும் உங்கள் பெண்ணாக நினைத்துக் கேட்டீர்கள். நானும் எங்கள் பெண்ணாக இருக்கவே கோபம் கொண்டேன். இருவர் செயலிலுமே நியாயம் இருக்கிறது. அதனால் பரவாயில்லை...... மாலதியை அவள் தாயார் எப்படி வளர்த் தாளோ அதை விட ஒரு மடங்கு அதிக மான அன்போடு நான் என் தங்கையை வளர்த்தேன் சார். இன்று தன் மகளைக் கண்டு அவள் கண் கலங்குவதைப் பார்த் தால் என் மனம் தாங்கவில்லை... அதனால் நான் இவ்வளவு பேசிவிட்டேன் சார்.''

நான் ஒன்றும் விளங்காத நிலையில் கல் லாக அமர்ந்திருந்தேன். மாலதி என்ற ஒரு சிறு பெண்ணுடன் ஒரு வார்த்தை கூடப்

பேசாமலேயே நான் அவனுக்குத் தோல்வி அடைவது போன்ற ஓர் உணர்ச்சி என்னுள் ஏற்பட்டது.

திரும்பவும் அவள் மாமா தொடங்கினார்: ''இதோ பாருங்கள், சார். இந்த இரண்டு வருடங்களில் அவளைப் பற்றி ஒரு தகவல்கூட எனக்குக் கிடைக்க வில்லை, சார். நேற்றுத்தான் அவள் எதையோ தன் கைப் பையில் வைத்து வைத்து மறைத்துக் கொள் கிறாள் என்பதைக் கண்டு பிடித்து என்னிடம் சொன்னாள் சார், அவள் அம்மா. விஷயத்தைக் கண்டு பிடிக்கவே இரண்டு வருடமாயிற்று எங்களுக்கு. உடனே அந்தக் கடிதத்தை நோக்கிப் பாய்ந்தேன் சார். அதில் கீழ்ப் பகுதிதான் எனக்கும் கிடைத்தது மேற் பாதியை அவள் கிழித்துப் போட்டுவிட்டாள்''

''அதைக் காட்டுங்கள், பார்க்கலாம்.''

அவர் சரி பாதியாகக் கிழித்திருந்த அந்தக் கடிதத்தை என்னிடம் நீட்டினார். நான் அதை வாங்கினேன். முகத்துக்கு நேரே பிடித்தேன். என் தலையும், மனமும் 'கிர்'ரெனச் சுழன்றன. ஐயமே இல்லை! அந்தக் கடிதம் நான் எழுதியதுதான்! அதாவது நான் சொல்லி என் மகன் எழுதியது!

இரண்டு வருடங்களுக்கு முன்பு...

என்னுடைய ஒரே மகனான சந்திரசேகரன் சென்னைக் கல்லூரி ஒன்றில் பட்டப் படிப்பு மாணவனாகச் சேர்ந்திருந்தான். அங்கு அவனுடைய சிற்றப்பனுடைய வீட்டிலிருந்து கொண்டு கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். அங்கு அவனுக்கு அவர்களுடைய செல்லம் அதிகமாயிருக்க வேண்டும். பள்ளியில் முதல் மாணவனாக இருந்தவன் அங்கு கல்வியில் சரிவரக் கருத்தைச் செலுத்தவில்லை. ஒருகால், கிராமத்துச் சூழலிலிருந்து நகரத்துச் சூழலுக்குச் சென்றதனால், திடீரெனத் தன் நிலையை மாற்றிக் கொள்ள இயலாமல் இப்படி இருக்க வேண்டும் என்று நினைத்து அப்பொழுதைக்குச் சும்மாயிருந்தேன்.

ஆனால் அடுத்து இரண்டாவது மாதமே அவனுடைய செயல்கள் யாவும் தனக்குத் திருப்தியளிக்க வில்லை என்று எழுதிய என் சகோதரன், அவனுடைய ஒழுங்கீனத்தையும் சற்று வெளிப்படையாகவே எழுதியிருந்தான். அடுத்த விநாடியே விளக்கமாக ஒரு கடிதம் எழுதி அவனைக் கல்லூரியிலிருந்து நிறுத்திவிடுமாறு உத்தரவிடக்கூடிய சூழலுக்கு என்னைக் கொண்டு வந்து நிறுத்தக் கூடிய நிலையில் இருந்தது அந்தக் கடிதம். அடுத்த ரயிலிலேயே அவன் அத்தை ஊரான தஞ்சைக்குப் பெட்டி, படுக்கைகளுடன் அனுப்பி விடுமாறும் கண்டிப்பான உத்தரவிட்டேன். தஞ்சைக்குப் போகாமல் இங்கே வந்தால் ராஜத்தின் செல்வத்தால் நான் போட்ட திட்டம் எதுவும் நடைபெறாமல் போகக்கூடும் என்று நினைத்தே இவ்வாறு செய்தேன்.

கடிதம் எழுதிய அடுத்த நாளே, நானும் வண்டியேறித் தஞ்சை போய்ச் சேர்ந்தேன். அங்கு அடங்கி நடக்கும் பயங்கொள்ளிப் பிள்ளையான அவனை மிரட்டி, உருட்டி என் உத்தரவுக்குப் பணியச் செய்தேன். அதன்படி நாற்காலியில் உட்கார்த்தி வைத்து நான் சொல்லச் சொல்ல அதன்படி இது நாள்வரை அவனுடன் தொடர்பு கொண்டிருந்த பெண்ணுக்கு அவனை விட்டே எழுதச் செய்தேன்.

அன்றைக்கு அவன் அழுகைக்கும், அச்சத்துக்குமிடையில் ஊசலாடும் பெண்டுலமாக எழுதியது இத்தகைய ஒரு வைராக்கியப் பெண்ணுக்கு என்று தெரிந்திருந்தால்...... ... அன்று நான் அவனைப் பெற்றேனே தவிர, அவனுடைய மனம், உணர்ச்சி, ஆசை, இலட்சியம் எதையும் பெறவில்லை என்பதை மறந்து அவற்றுக்கும் நானே தகப்பன் என்ற அகங்காரத்துடன் நடந்து கொண்டேன். அவனை விட்டே மேலுறையில் அவளுடைய முகவரியை எழுதச் சொல்லி, அவள் பெயரைக் கூடப் பார்க்காது நானே கொண்டு போய்த் தபாலில் சேர்த்தேன். தொடர்ந்து அவன் அவளுக்குக் கடிதம் எழுதக்கூடாது என்பதற்காக அவன் அன்புக்குரிய தாயின் மேல் ஆணையிட்டு இனி அவளுக்குக் கடிதம் எழுதுவதில்லை என்ற உறுதிமொழியை வாங்கிக் கொண்டு, ஊர் வந்து சேர்ந்தேன்.

அவனுடைய அத்தையின் கணவன் அவனை அங்கு தொடர்ந்து படிக்க வைத்துக் கொண்டிருக்கிறான் இப்பொழுது. — எங்கள் வீட்டு வாசற்படியின் கதை இதுதான்.

அன்றைக்கு என் மகனை விட்டு நான் எழுதச் சொன்ன அதே கடிதத்தின் கீழ்ப் பகுதியைத்தான் இன்று நான் மாலதியின் தாய் மாமன் தரப் படித்துக் கொண்டிருக்கும் கடிதம். மாலதியின் கைகளுக்குத்தப்பி, அவள் தாய் மாமனுக்குச் சிக்கிய இத்துணுக்கில் கிடைத்திருக்கும் கடைசி இரண்டு வரிகளே கடிதத்தின் பொருளையும் விளக்கவல்லன:

''....மாலதி, இனி இந்தப் பிறவியில் உன்னைப் பொறுத்த வரை நான் இறந்து விட்டவனாகவே நினைத்துக் கொள். நம்முள் நடந்த யாவும் கனவுகள்! கனவுகள்! மறந்து விடு அவற்றை. வ. சந்திரசேகரன்''

சற்று முன்பு என்னை வெற்றி கொண்டவளாக நினைத்த மாலதி, இப்பொழுது முழுதுமாக என்னை வென்று வாகை சூடிய காளி தேவியாக என் மனக் கண்முன் நின்றாள். நான் 'இறந்து விட்டதாக நினைத்துக் கொள்' என்று எழுதியதை இன்று வரையிலும் அவள் செயல் படுத்தி என்னைத் தலை குனியச் செய்து விட்டாள். அன்று இந்தக் கடிதத்தை எழுதுவதற்கும், எழுதிய பின்னர் அஞ்சல் செய்வதற்கு முன்பும் என் மகன் கதறிய கதறல்கள்.... இன்று வரையிலும் பிரம்மச்சாரியாகவே இருந்து விடப் போவதாகக் கடிதம் எழுதும் அவன் பிடிவாதம்..... அத்தனைக்கும் தகுதியுடையவள்தான் இவள் என்று என் நெஞ்சு எனக்கு ஆணையிட்டது.

நான் தலை குனிந்து, என் கண்ணீரைக் கண்டு அதிர்ச்சியும், வியப்பும், கவலையும் கொண்டு ஆழ்ந்திருந்த ராஜமும், மாலதியின் தாய், அவளுடைய தாய் மாமன் ஆகிய மூவரையும் நோக்கி, ''இந்தக் கடிதத்தை எழுதியது என் மகன்தான்'' என்றேன்.

ராஜம் உள்பட மூவருமே ஒரு கணம் அதிர்ச்சியுற்றார்கள். நான் முழுக் கதையையும் விவரித்தேன். பின் சொல்ல முடியாத வெட்கத்தோடும், மகிழ்ச்சியோடும் அவர் கரங்களைப் பற்றிக் கொண்டு ''தயவுசெய்து என்னை மன்னிக்க வேண்டும். இனி, நாம் சம்பந்திகள்'' என்றேன். மகிழ்ச்சிக் குதூகலத்தில் அனைவருமே வாயடைத்துப் போயிருந்தனர்.

வில்வண்டி

கு.வேங்கடரமணி



ராமையன் தலைக் கயிற்றைத் தளர விட்டதும், கொம்புக் காளைகள் பெரு நடை போட்டு ரயிலடியை விட்டுப் புறப்பட்டுச் சாலையை நோக்கிப் பாய்ந்தன. புத்தம் புதிய நீல வண்ண 'வில் வண்டி' அது. ஆறுபாதி ஷண்முக ஆசாரியின் பட்டறையை விட்டு வந்து இன்னும் ஒரு மாதம் கூட ஆகவில்லை. வண்டிக்கு ஏற்ற மேற்கத்திக் கொம்புக் காளைகள். ராமையன் சவாரி வண்டி ஓட்டுனரும், தன் வண்டி மாடுகளுக்கு ஏற்றபடிதான் வாடகை பேசுவான்; பிரயாணிகளைத் தேர்ந்தெடுப்பான். செம்பொன்னூர் கோவில் ஸ்டேஷனில் வாரத்தில் இரண்டு நாட்கள் அப்படிப்பட்ட பிரயாணிகள் வந்தால் பெரிது. மற்ற நாட்களில் ராமையனின் வண்டி காலியாகத் தான் வீடு நோக்கித் திரும்பும். இன்றும் அப்படித்தான்.

கடைத் தெருவைக் கடந்ததும், இளைப் பாதையில் திரும்பியது ராமையனின் வில் வண்டி. பக்கத்தில் ஒரு மைலில், மருதூரில் தான் அவனுக்கு வீடு. எதிரே சாலையில் இரண்டு பேர்கள், வண்டி வருவது தெரியாமலே நடந்துகொண்டிருப்பதைக் கண்டு, தலைக் கயிற்றை இழுத்துப் பிடித்த படி சத்தம் கொடுத்தான் ராமையன். வீட்டுக்குத் திரும்பும் ஜோரில் காளைகள் முண்டிக் கொண்டு ஓடின. ஒரு வழியாக அவர்களை நெருங்கியதும் வண்டியை நிறுத்தினான் அவன்.

ஓர் இளம் பெண் நடக்க முடியாமல் தடுமாறிய கிழவியின் கையைப் பிடித்துச் சாலையின் ஓரமாக அழைத்துக் கொண்டு ஒதுங்கினாள்.

''இப்படித்தான் வண்டி ஓட்டுவாங்களா?'' என்று ராமையனைத் தன் முறைப் பார்வையாலும் பார்த்துக் கொண்டே கேட்டாள் அந்தப் பெண்.

''இப்படித்தான் வண்டி வருகிறது தெரியாமல் நடுச் சாலையோடு நடப்பாங்களா?'' என்று பதில் கேள்வியுடன், பதில் பார்வையும் பார்த்தான் ராமையன்.

''என்னடி, தங்கம்! இதுவும் உங்க ஊருன்னு நினைச்சியோ?'' என்று கூட வரும் பெண்ணை அதட்டி விட்டு, ராமையன் பக்கம் திரும்பினாள் கிழவி.

''நீ போ, தம்பி! அது தெரியாமல் பேசுது. நாங்க இதோ ஒதுங்கிக்கிட்டோம்.''

ராமையன் இப்போதுதான் இழனி யைச் சரியாகத் திரும்பிக் கவனித்தான்.

''அடடா! நம்ம குப்பம்மாப் பாட் டியா?'' என்றான் ராமையன் அடை யாளம் புரிந்ததும்.

''நீ யாரு தம்பி, தெரியலியே?'' என்று குறிக்குள் பதுங்கிய விழிகளைப் புரட்டினாள் இழனி.

''எனக்கும் மருதூர் வடக்குத் தெரு தான் பாட்டி. ராமையன்.''

''ஆ... எந்த ராமையன், நடு வூட்டுக் கன்னம்மா மவனா?''

''அவனேதான் பாட்டி!'' என்று உற் சாகத்தோடு, தானெப்படியோ இழனிக்கு வேண்டியவனாகி விட்ட பெருமையும் உரிமையும் போட்டியிடச் சொல்லி விட்டு, அந்தப் பெண்ணின் பக்கம் பார்த்தான் ராமையன்.

'தங்கமான பெண்தான். பெயரும் தங்கந்தானா?' என்று வியந்தது அவன் பார்வை. ஆனால் அவனுடைய 'சூடு' இன்னும் தணியவில்லை போலும். 'உர்' ரென்றே இருந்தான். 'இருக்கட்டும், நம்ம குப்பம்மா பாட்டியோடு நம்ம மருதூருக்கு வரப் போகிறவள்தானே!' ராமையனின் மனத்தில் எழுந்த இந்த நினைப்பு இனித்தது.

''பாட்டி! வண்டியிலே ஏறிக் குந்திக்க வேன்'' என்று அழைத்தான் ராமையன்.

''வேண்டாம், பாட்டி! நாம்ப நடந்தே போயிடலாம்'' என்று மறுத் தாள் அவள்.

ராமையன் பாட்டியைப் பார்த்தான்: இழனி வண்டியைப் பார்த்து நெருங்கிக் கொண்டு வந்தாள்.

''சும்மா வா, தங்கம். நம்ம கன் னம்மா மவன். நான் தூக்கி விளை யாடின புள்ளே கூப்பிடுது. உம்! நீ முன் னாடி ஏறிக் குந்திக்க.''

பாட்டியின் வார்த்தையைத் தட்ட முடியவில்லை பேத்தியால்.

ராமையனின் வில்வண்டி புறப்பட் டது. வாடகை கொடுக்கப் போகாத இரு பிரயாணிகளுடன் காளைகளின் வேக நடையைத் தேக்கி மெதுவாகச் செல்ல விட்டு வண்டிக்குள் திரும்பினான் ராமையன். பாட்டி இன்னமும் இந்தப் பேத்தியைப் பற்றி எதுவும் சொல்ல வில்லையே?

''ஏன், தம்பி ராமையா! வண்டி எல்லாம் எப்போ வாங்கினே? எங்கோ ஆலையிலே இல்லே வேலே பார்த்துக்கிட் டிருந்தே?'' என்று ஆரம்பித்தாள் இழனி.

''அது ரெண்டு மாசம் ஆவுது பாட்டி. மில் வேலே உடம்புக்கு ஒத்துக்கல்லே. வெரோடே வந்துட்டேன். அதுதான் இந்த வண்டி; மாட்டை வாங்கிச் சவாரி விட ஆரம்பிச்சுட்டேன். ஆமாம் பாட்டி, உன்னே எங்கே ஊரிலே காணோம்? இப்போ நீ எங்கே இருந்து வரே?''

இழனியை மெள்ளத் தான் விரும் பிய பாதைக்குத் திருப்பி விட்டான் ராமையன்.

''இவதான் என் மகனோட மகள். பட்டணத்திலே இருந்து அழைச்சுக்கிட்டு



வரேன். ம்.... இவ ஆத்தா —என் பொண்ணு — போய்த்தான் வருஷம் ரெண்டாவுதே. தாயில்லாப் பொண்ணு. இதுக்கும் கலியாண வயசு ஆயிப்போச்சு. என்னை விட்டா இதுக்கு யாரும் இல்லே. அவன் — இவளோட அப்பனும் — கவலை இல்லாமலே இருக்கான். பார்க்கலாம்னு போனேனு. அப்படியே கூட்டிக்கிட்டு வந்தேன். ம்.... வயசுக் காலத்திலே இந்தக் கவலை யெல்லாம் படணும்னு என் தலையெழுத்து. இவளோட அம்மா இருந்தாட்டா எனக்குத் தவிடா இல்லே... அவ மகராசி போயிட்டா!'' கிழவி கண்களைத் துடைத்துக் கொண்டு, மகளைப்பற்றிய சோக நினைப்புக்களில் ஆழ்ந்து போய் விட்டாள்.

''கவலைப்படாதே, பாட்டி! நீதான் பேத்திப் பொண்ணுக்கு. அது இஷ்டப்படி கல்யாணம் கட்டி வைப்பேன்'' என்று தனக்குத் தோன்றியபடி ஆறுதல் சொல்லி விட்டுப் பேத்தியின் பக்கம் பார்வையைத் தாவ விட்டான் ராமையன்.

தங்கம் சட்டென்று தன் பார்வையை வண்டிக்கு வெளியே பாய்ச்சினாலும், அவளிடம் இப்போது கோபம்இல்லை என்பதைப் புரிந்து கொண்டான் அவன்.

சாலையோரச் சவுக்கைத் தோப்புக்களைக் கடந்து வண்டி ஓடும்போது 'சோ'வென்று இரைச்சல் கேட்டது. ராமையன் மெதுவாக ஒரு தெம்மாங்கை முனகினான்.

காவிரிப் புதுப் பாலம் வந்தது.

தங்கம் குனிந்து எட்டிப் பார்த்தாள்.

''இதுதான் காவேரி''என்றான் ராமையன்.

''ஓ! ஆறு தண்ணியே இல்லியே?'' தங்கம் கேட்டாள், குழந்தை மாதிரி, நடு வழியில் அவனைப் பார்த்து முறைத்ததை மறந்து.

''இன்னும் ஒரு மாசம் போகணும். ஆனி மாசக் கடைசியிலே நுப்பும் நுரையுமா புது வெள்ளம் வந்து விடும்.''

மாடுகள் நடையை எட்டிப் போட்டன. 'போ ராஜா!' என்று தினம் அவைகளை விரட்டும் ராமையன் இன்று அவை ஏன் இப்படி அவசரப்பட்டு ஓடுகின்றன என்று வருத்தப்பட்டான். இப்படியே காலமெல்லாம் தங்கத்தோடு வண்டியில் போய்க் கொண்டிருக்க மாட்டோமா என்று ஏங்கியது அவன் மனம்.

அதற்குப் பிறகு வந்த நாட்களும் அவசரமாகவே போய்க் கொண்டிருந்தன.

ராமையன் காலையில் 'ஆறே முக்கால்' ரயிலுக்கு வண்டியை ஓட்டிக் கொண்டு போகும் போதும், மாலையில் 'ஐந்தே கால்' வண்டியைப் பார்த்துச் சவாரியை முடித்துத் திரும்பும்போதும் கிழவியை அவசரமாக ஒரு தடவை எட்டிப் பார்க்கத் தவறமாட்டான்.

''பாட்டீ!'' என்று அழைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தாலும் பேத்தியைத்தான் அவனது கண்கள் தேடும். தங்கமும் அவனோடு சில நாட்களிலேயே தாராளமாகப் பேசினாள். 'பட்டணக் கரையிலே வளர்ந்த பெண்!' என்று அவன் மனம் பெருமையோடு நினைக்கும். அவளுக்குத் தேவைப்பட்ட நாகரிக அழகுப் பொருள்களை அவன் செம்பொன்னார் கோவிலில் இருந்து வாங்கிக் கொண்டு வந்து கொடுத்து உதவினான்.

கிழவி அவனை வைத்துக் கொண்டே பேத்தியிடம் 'ராமையன் தங்கமான பிள்ளை!' என்று நூறு தடவைகள் சொல்லி விட்டாள். கூடவே அவள் பெருமூச்சோடு, 'உம்! தங்கத்தோட கல்யாணத்தைப் பண்ணிப் பார்த்துட்டால், நான் நிம்மதியாக் கண்ணை மூடிப்புடுவேன்' என்று சொல்வதில் அர்த்தமும் ராமையனுக்குப் புரியாமல் இல்லை.

'ஆகட்டும். தை பிறந்ததும் முதல் வேலையாய்ப் பரிசம் போட்டுட வேண்டியதுதான்!' என்று அவசரப்பட்ட மனத்துக்குச் சமாதானம் சொல்லிக் கொண்டிருந்தான் ராமையன்.

இப்படி அவன் தன் கனவெல்லாம் 'அவளாகி' இருந்த வேளையில்தான் ஒரு நாள் — காலை நேரம்.

ராமையன் காளைகளை வண்டியில் பூட்டிக் கொண்டிருந்தான்.

அவசரமாக ஓடி வந்தாள் தங்கம். அவளுடைய கண்களில் திரண்டு எட்டிப் பார்த்த நீர் முத்துக்களைக் கண்ட ராமையன் திடுக்கிட்டான்.

''என்ன தங்கம்? என்ன விஷயம்?''

''உடனே வீட்டுக்கு வாங்களேன்.''

''இதோ வந்துவிட்டேன்'' என்று காளைகளின் தலைக் கயிற்றை அப்படியே விட்டு விட்டு ஓடினான் ராமையன்.

அங்கே போய்ப் பார்த்த போது கிழவி தரையில் மயங்கிக் கிடந்தாள். ''பாட்டீ, பாட்டீ!'' என்று விக்கினாள் தங்கம்.

''ஒன்றுமில்லே, கவலைப்படாதே! மயக்கந்தான்'' என்று சொல்லிக் கொண்டே கிழவியைப் பிடித்துக் கூடத்தில் கொண்டு போட்டு விட்டு வீட்டுக்கு ஓடினான் ராமையன்.

அடுத்த நிமிஷம் அவனுடைய வில்வண்டி வாசலில் வந்து நின்றது. அவனும் தங்கமும் கிழவியை வண்டியில் தூக்கிப் போட்டார்கள்.

வழி நெடுகத் தங்கத்துக்குத் தைரியம் சொல்லிக் கொண்டே வந்தான் ராமையன். அவன் சொன்ன மாதிரியே, திரும்பி வரும் போது கிழவி எழுந்து உட்கார்ந்து கொள்ளா விட்டாலும், கண்களைத் திறந்து பார்த்து இரண்டு வார்த்தைகள் பேசினாள். தங்கமும் நிம்மதியாக மூச்சு விட்டாள்.

ஒரு வாரம் வரை தினம் காலையில் ராமையனின் வில் வண்டி, தங்கத்தையும் அவள் பாட்டியையும் சுமந்து கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போய் வந்தது. கிழவி மெதுவாக நடமாடக்கூட ஆரம்பித்து விட்டாள்.


அன்றைக்கும் மாலை ஐந்தேகால் மணி வண்டியில் ராமையனின் வில்வண்டிக்குச் சவாரி எதுவும் கிடைக்க வில்லை. ஊரை நோக்கித் திரும்பிய வண்டி கடைத் தெருவைக் கடந்ததும், ராமையனுக்கு ஏதோ நினைவு வந்தது. ஆஸ்பத்திரிக்கு ஓட்டினான் வண்டியை.

'இனி மேல் ஊசி போட வேண்டாம். மருந்து எழுதித் தருகிறேன். அதை வாங்கிக் கொடுத்தால் போதும்' என்று சொல்லியிருந்தார் டாக்டர். அவரைக் கேட்டு மருந்துச் சீட்டை எழுதி வாங்கி வரலாம் என்று நினைத்தான் ராமையன்.

அவன் உள்ளே நுழையும்போது டாக்டர் சாவகாசமாய் எதையோ படித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

''என்னப்பா, ராமையன்! கிழவி எப்படி இருக்கிறாள்?'' என்று விசாரித்தார் டாக்டர்.

கார்டினல் பாலிஷ்



இதுவே உங்கள் வீட்டிற்குப்பெருமை!

உங்கள் வீட்டின் தரை, மங்கலாகவும் பளபளப்பின்றியும் இருந்தால் வீட்டின் அழகையே குறைத்துவிடும். ஆதலால், ரெட் கார்டினல் பாலிஷ் மூலம் உங்கள் வீட்டின் தரையை செக்கிற ஒளியுடன் கூடி பிரகாசிக்கும்படி வைத்துக்கொள்ளுங்கள். சாதாரண கல் தரையானாலும், சிமிட்டித் தரையானாலும், பளபளப்பைக் கொடுப்பதில் ''கார்டினல் பாலிஷ்'' அற்புதமாக வேலை செய்யக்கூடியது. கண நேரத்தில் மங்கலான தரையை செக்கிற ஒளியுடன் பிரகாசிக்கச் செய்யும்.

உங்கள் அழகான வீட்டின் தரையை அழகாகவும் பளபளப்பாகவும் வைத்துக்கொள்ள இன்றே ''கார்டினல் பாலிஷை'' உபயோகியுங்கள்.

ரெட்
கார்டினல்
பாலிஷ்



அட்லான்டிஸ் (ஈஸ்ட்) லிட். (இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)

JWTCP 5088 CP 2

ஒரு நகைக் கடையில் இரண்டு திருடர்கள் புகுந்தனர். அலமாரியை உடைத்து நகைகளை எடுத்துப் பார்த்த ஒருவன், "அண்ணே! இந்தக் கடைக்காரனுக எப்படிப் பகற்கொள்ளை அடிக்கிறானுக பார்த்தியா? யானை



விலை, குதிரை விலை யாகவல்ல நகைகளுக்கு விலைபோட்டிருக்கிறான்!" என்றான்.

"ஆமாம் தம்பி! நாம் இதை எடுத்துப் போய் எவ்வளவு சகாய விலைக்குக் கொடுத்தாலும் இந்த நன்றி கெட்ட ஜனங்க வாங்க மாட்டேங்கறதுங்களே! இவங்க பகற்கொள்ளை அடிக்க மாட்டாளுங்களா?" என்றான் மற்றவன்.

"தேவலீங்க. சாதாரணமா இருக்குது. மருந்து எழுதித் தரேன்னீங்களே....?"

"ஓ! இரு, எழுதித் தரேன்."

டாக்டர் பேனாவைத் திறந்து எழுதத் தொடங்கினார். அந்தச் சமயத்தில்தான் ராமையனுக்குத் தொண்டையை அடைத்துக் கொண்டு இருமல் வந்தது. ஒரு வாரமாய் விடாமல் புகைந்து கொண்டேயிருந்த இருமல் இப்போது தாங்க முடியாமல் புரண்டு வந்தது. டாக்டர் எழுதுவதை நிறுத்தி விட்டு அவனைப் பார்த்தார்.

"என்னப்பா, இது! எத்தனை நாட்களாய் இந்த இருமல்?"

"முன்னே போன வருஷம், ஆலையிலே வேலை பார்த்தப்போ இப்படித்தான் இருமிச்சுங்க. அப்போ ஏதோ மருந்து சாப்பிட்டேன். அப்புறம் அதிகமா இல்லீங்க. மறுபடியும் ஒரு பத்து நாளா சாயங்காலம், ராத்திரியெல்லாம் இதேமாதிரி இருமல் தாங்க...."

ராமையன் மீண்டும் இருமினான்.

நாலைந்து இரத்தத் துளிகள் சிதறின. டாக்டர் அவசரமாக எழுந்தார்.

"இது சாதாரண இருமல் இல்லே. இப்படி உள்ளே வா, பார்க்கலாம்!"

சோதனை முடிந்தது. டாக்டர் சொன்னார். "படம் பிடித்துப் பார்க்கணும். ஒரு வருஷமாய் உனக்குள்ளே இந்த வியாதி இருந்திருக்கிறது. இப்பொழுது நன்றாய் வளர்ந்து விட்டது. ஆரம்பத்திலேயே கவனித்திருந்தால் நல்லது."

"அப்படின்னு?"

ராமையன் தடுமாறினான்.

"அவசரமாய் உடனே வைத்தியம் செய்து கொள்ள வேண்டிய வியாதி. இதற்கு மேல் உனக்குப் புரியாது."

உணர்ச்சியற்ற ஜடமாக வெளியேறினான் ராமையன்.

வண்டி மெதுவாக நகர்ந்தது. மறுபடியும் இருமல் — இரத்தம்! அப்படியானால்....

'எனக்கு வந்திருக்கிற வியாதி முழுக்கக் குணமாகிறது சந்தேகம்....'

ஆசையும் ஏக்கமும் அவனைச் சூழ்ந்து கொண்டன. தங்கத்தின் அழகுத் தோற்றம் அவனது மனவெளியில் தோன்றியது.

'தங்கம்! தை பிறந்ததும் உனக்குப் பரிசம் போடலாம்னு நினைச்சேன். ஹூம்! நான் இருமல்காரன். இனிமேல் இப்படியே இருமிக் கொண்டேதான் இருப்பேன். ரத்தம் ரத்தமாகத் துப்பி விட்டு ஒரு நாளைக்கு நானும் இந்த இருமலோடே....' ராமையன் தலையைப் பலமாக அசைத்தான்.

ராமையனின் மனம் அலை பாய்ந்தது. கடைசியில் ஊரின் எல்லையை அடைந்து தங்கத்தின் வீட்டு வாசலில் வண்டியை நிறுத்தும்போது, 'யாரிடமும் விவரத்தைச் சொல்லக் கூடாது. தை பிறந்ததும் கல்யாணத்தை முடித்து விடவேண்டியதுதான்!' என்ற முடிவுக்கு வந்தான்.

உள்ளே பேச்சுக் குரல் கேட்டது. ராமையன் நிலைப் படியிலேயே தயங்கி நின்றான். தங்கமும் அவள் பாட்டியும்தான் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"அந்தப் பிள்ளை ராமையன் இல்லேன்னு நான் பொழச்சு எழுந்திருந்திருப்பேனு?" கிழவி பலத்த குரலில் கேட்டாள்.

"நான் அதை இல்லேன்னு சொல்றேன் பாட்டி?"

"அப்போ ஏன் அவனை வேண்டாம்னு சொல்றே? இத்தனை நாளும் நான்-உனக்கும் ராமையனுக்கும் கல்யாணத்தை முடிச்சுடலாம்னு நினைச்சேன்!"

"நான் அப்படி நினைக்கலியே பாட்டி!"

"பின்னே நீ என்னதான் நெனச்சே?"

"பாட்டி! எனக்கும் அவர் கிட்டே மதிப்பு உண்டு. ஆனா, நான் அவரைக் கூடப் பிறந்த அண்ணனு நெனைச்சுத்தான் — பழகினேன்.. எனக்கு வந்து பாட்டி...."

"சொல்லித் தொலை!"

"நீ புதுசாய்த் தேட வேண்டாம் பாட்டி. பட்டணத்திலே டிரைவர் வேலை பாக்குதே, என் அத்தை மகன்..."

"மாணிக்கத்தையா சொல்றே? உன்னோட அத்தை சம்மதிக்குமா? பெரிய இடமா,- சீர்வரிசையுமா பொண் தேடுவாளே..."

தங்கத்தின் விசும்பல் கேட்டது.

ராமையன் கதவைப் பிடித்துக்கொண்டு அப்படியே நின்றான். அவன் நினைப்பும் ஆசையும் எங்கோ தூரத்தில் மங்கி மறைந்தன.

நினைப்பு வந்ததும் அவன் தடுமாறிக் கொண்டே படியிறங்கினான்.

தை பிறந்தது.

செம்பொன்னூர் கோயில் ரயிலடியில் கல்யாணப் பெண்ணும் மணமகனுமாக எவ்வளவோ பேர்கள் 'ஐந்தேகால்' ரயிலில் வந்து இறங்கினார்கள். ஆனால் அவர்களுக்கு ராமையனின் அழகான வில் வண்டியில் பிரயாணம் செய்யும் பாக்கியம் கிட்டவில்லை. அவன்தான் தன் வண்டிகளையும் கொம்புக் காளைகளையும் விற்றுவிட்டானே? தன் தங்கை தங்கத்தை அவள் விரும்பியவனுக்கே கல்யாணம் செய்து வைக்கச் சொல்லி வண்டி மாடுகளைப் பணமாக்கி அவளுடைய பாட்டியிடமே கொடுத்து விட்டு அவன் ஊரை விட்டே போய்விட்டானே!



அத்தியாயம் நாற்பத்தொன்று

பிள்ளைப் பாசம்

பாழடைந்து கிடந்த அநந்தமதியின் இல்லத்து வெளித் திண்ணை யோரம் தூணைப் பிடித்துக்கொண்டு நின்றிருந்த ஆபத்துதவி சம்புவராயன் துயரம் தாளமாட்டாமல் குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருந்ததைக் கண்டு திகிலடைந்தவர்களாய் வெளிப்புற வாசலருகிலேயே தயங்கி நின்று விட்டார்கள் சேதியக் கலைஞரும், முத்தரையரும். அவர்களைப் பார்த்த சம்புவராயனுக்கு அழுகை மேலும் அடைத்துக்கொண்டு வந்து விட்டது. 'கோ'வெனக் கதறிப் புலம்பியவாறு அவர்களிடம் ஓடி வந்தான் அவன்.





பிரமித்து நின்ற முத்தரையர் 'என்ன நடந்தது?' என்று கேட்பதுபோல் அவனை ஏறிட்டு நோக்கினார். ''சிங்கம் தானாகவே வலையில் சிக்கிக் கொள்ளப் போய்விட்டது ஐயா! அந்தக் கொலைபாதகர்களின் இருப்பிடமான பல்லவபுரம் அரண்மனைக்கே பழையாறைச் சோழர் போய் விட்டார் ஐயா!'' என்றான் சம்புவராயன் விம்மலும் பொருமலுமாக.

துணுக்குற்ற முத்தரையர், ''என்ன?'' என்று கண்களை அகல விரித்தார்.

''ஆம், பிரபு! பழி பாவத்துக்கு அஞ்சாத சளுக்கிய இளவரசனால் தம் அருமைக் குமாரிக்கு ஏதேனும் மானபங்கம் ஏற்பட்டு விடுமோ என்று பதறித் துடித்த அவர், புத்தி பேதலித்தவராய், எல்லாவற்றையும் மறந்து, எதையும் இலட்சியம் செய்யாமல், பல்லவ புரம் அரண்மனைக்குப் போய் விட்டார்!''

''அப்படியானால் சோழ இளவரசியை விநயாதித்தன் சிறைப் பிடித்துக்கொண்டு விட்டானா என்ன?''

''இதோ, இந்த இல்லத்தைப் பாருங்கள் ஐயா! இது பாழடைந்து கிடப்பதிலிருந்தே அந்த அநியாய அக்கிரமம் நடந்து விட்டது என்பது தெரியவில்லையா?''


''வழக்கம் போல் பழையாறைச் சோழர் இந்த விஷயத்திலும் அவசரப்பட்டு விட்டார் என்றே எனக்குத் தோன்றுகிறது.''

''இல்லை, ஐயா! நானும் எங்கெங்கோ தேடி அலைந்து விட்டேன். சோழ இளவரசியைப் பற்றியோ, அவருடன் இருந்த அநந்தமதியைப் பற்றியோ எவ்விதத் தகவலும் கிடைக்கவில்லை. ஆகவே அவர்கள் விநயாதித்தனால்தான் கடத்திச் செல்லப்பட்டிருப்பார்கள்.''

பத்தினிக் கோட்டம்

ஆழ்ந்த கவலையுடன் ஒரு கணம் மௌனமாயிருந்த முத்தரையர், ''ஆமாம், இந்த நிலைமையில் பழையாறைச்சோழர் பல்லவபுரம் அரண்மனைக்கு ஏன் போனார்? அப்படிப் போனதால் அவருக்கு ஆபத்து ஏற்படுமே தவிர, பயனேதும் காண முடியாதே!'' என்று கரகரத்த குரலில் கேட்டார்.

''இதையேதான் நானும் பல முறை சொல்லி அவரைத் தடுத்துப் பார்த்தேன் ஐயா! ஆனால் அதற்கெல்லாம் அவர் செவி சாய்க்கவே யில்லை. 'சளுக்கிய இளவரசனின் காலில் விழுந்து கெஞ்சிக் கடைசிவரை அவனுக்கு அடிமையாய் இருக்கச் சாசனம் எழுதிக் கொடுத்தாவது என் மகளை மீட்க முயலுவேன்; அது இயலவில்லையானால் அவன் எதிரிலேயே சோழ இளவரசியைக் கொன்று, நானும் உயிரை மாய்த்



ஜகசிற்பியன்

துக்கொள்வேன்' என்ற ஆவேச முடிவோடு அந்த நள்ளிரவு நேரத்திலேயே நிராயுதபாணியாகப் புறப்பட்டுப் போய் விட்டார்.'' — முகத்தைப் பொத்திக் கொண்டு விம்மிக் கதறினான் சம்புவராயன்.

இவ்வளவு நேரம் திகைத்து விறைத்து நின்றுகொண்டிருந்த பரவாதிமல்லர் மெல்லப் பெருமூச்சு விட்டு நிமிர்ந்து, ''அன்றைய தினம் அந்த ஜினலயத்திலிருந்து அவர் நம்மிடம் ஏதும் சொல்லிக்கொள்ளாமல் பித்துப் பிடித்தவர் போல் எழுந்து ஓடியபோதே, இப்படி ஏதாவது ஒரு விபரீதம் நடக்கலாம் என்று நினைத்தேன். அது சரியாகவே ஆகிவிட்டது!'' என்றார் வேதனைக் கமறலான குரலில்.

முத்தரையர் இதைக் கேட்டு வெறுப்புடன் முகத்தைச் சுளித்தார். ''ஹூம்! கோழையிலும் கோழை, கடைந்தெடுத்த கோழை அவர். கேவலம் தம் பெண்ணுக்காக மாபெரும் இலட்சியங்களைக் கைவிட்டு எதிரிகளிடம் போய்ச் சரணுகதி அடைய எப்படித்தான் மனம் துணிந்தாரோ? கடமை, இலட்சியம், தியாகம் என்றெல்லாம் சிலர் வாய் வீரம் பேசிக்கொண்டு பிரமாதமாகக் காரியமாற்றுவது போல் முன் வருவார்கள்; எதிர்பாராத விதமாகத் தமது சொந்த நலத்தில் சிறு நஷ்டம் ஏற்பட்டு விட்டாலோ, அந்தக் கணமே தங்கள் இலட்சிய மூட்டையை இறக்கிப் போட்டு விட்டு ஓடி ஒளிந்துவிடுவார்கள்; அப்படிப்பட்ட சுயநலக்காரர்களில் ஒருவர்தான் இந்தப் பழையாறைச் சோழரும்.''

பரவாதிமல்லர் தலையை அசைத்துத் துயரப் புன்முறுவல் பூத்தார். ''நண்பரே! பிள்ளைப் பாசத்தின் மகா சக்தியை நீங்கள் உணராமல் பேசுகிறீர்கள். பெற்ற மனத்தில் அந்தப் பாசம் முழு வலிமையோடு தலை தூக்கிவிட்டால்

எந்த இலட்சியத்தாலும் அதைத் தடுத்து நிறுத்த இயலாது. அதிலும் ஓர் ஆண் பிள்ளையைப் பெற்ற தந்தையின் பாசத்தைவிடப் பெண் பிள்ளையைப் பெற்ற தந்தையின் பாசமே அதிக சக்தி வாய்ந்தது. சோழ இளவரசன் என்று ஒருவன் இருந்து அவனைச் சளுக்கிய விநயாதித்தன் கடத்திச் சென்றிருந்தால் பழையாறைச் சோழர் இந்த அளவுக்கு மனம் பேதலித்திருக்க மாட்டார். அவனைக் கண்ணெதிரே குத்திக் கொன்றிருந்தாலும் அவர் வருந்தியிருக்க மாட்டார். ஆனால், கடத்திச் செல்லப்பட்டவளோ அவருடைய ஒரே மகள்; அவரது மானம், மரியாதை, கௌரவம், குலப் பெருமை ஆகிய அனைத்தின் சின்னமாகவும், அவற்றைப் பூட்டி வைத்துக் காப்பாற்றும் பொக்கிஷமாகவும் விளங்கியவள். எனவேதான் அவளுக்காக அவர் தம்மை அந்த அளவுக்குத் தாழ்த்திக் கொள்ளத் துணிந்திருக்கிறார். எந்த ஓர் ஆண் மகனும் தனக்குரிய மானத்தைத் தன்னிடமே வைத்திருப்பதில்லை; தன் தாயிடமோ, தாரத்திடமோ, மகளிடமோதான் அதை ஒப்படைத்து வைத்திருக்கிறான். அதனாலேயே அவர்களுக்கு அல்லது அவர்களால் ஏற்படும் எத்தகைய மான பங்கத்தையும் அவனால் எள்ளளவும் சகித்துக்கொள்ள முடிவதில்லை. இந்த மாபெரும் இயற்கை விதிக்குப் பழையாறைச் சோழர் மட்டும் எப்படி விலக்காகி விடுவார்?''

வெறுப்புடன் முகத்தைச் சுளித்து வேகமாகத் தலையை ஆட்டிய முத்தரையர், ''என்ன இருந்தாலும் இதைச் சரி என்று ஏற்க என்னால் இயலாது. ஏனென்றால், தேசத்தின் மானத்தை விடத் தன் பெண்ணின் மானமே பெரிது என்று எந்தத் தேச பக்த வீரனும் நினைக்க மாட்டான்'' என்று குரோதக் குரலில் கூறிக் கொண்டே அங்கிருந்து புறப்படத் திரும்பினார்.

''சந்திரலேகைச் சிற்றரசர் மீண்டும் பழையாறைச் சோழரின் மேல் தவறான முடிவையே எடுக்க ஆரம்பித்து விட்டாரே!'' என்று வருத்தம் தோய்ந்த புன்சிரிப்புடன் கரகரத்தார் பரவாதிமல்லர்.

''அப்படியில்லை, கலைஞரே! அதற்கெல்லாம் அவர் இடம் வைக்காமல் தம்மைப் பற்றித் தெளிவாகவே சொல்லி விட்டுப் போய் விட்டார். நீங்கள்தாம் அதை மறந்து பேசுகிறீர்கள்.''

''நண்பர் எதை எனக்கு நினைவு படுத்துகிறார்?''

''அந்த ஜினாலயத்தில் பழையாறைச் சோழர் கடைசியாகச் சொன்னதை மறந்து விட்டீர்கள் போலிருக்கிறது! பல்லவ மன்னர் ஒரு துரோகி என்றும், அவரைத்தான் முதலில் ஒழிக்க வேண்டும் என்றும் அவர் சொல்லவில்லையா? அப்படிச் சொன்னவருக்கு நான் எவ்வாறு இனி நண்பனாக இருக்க முடியும்?''

பரவாதிமல்லர் இதற்குப் பதில் ஏதும் சொல்லாமல் வாயடைத்துப் போனார். பிறகு ஒருவாறு தம்மைச் சமாளித்துக் கொண்டு, ''ஓ.....அதைச் சொல்கிறீர்களா? அவருடைய நிலையில் வேறு யார் இருந்தாலும் அப்படித்தான் சொல்லியிருப்பார் என்பது என் தாழ்மையான அபிப்பிராயம்!'' என்றார்.

தலையைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு சற்று நேரம் மௌனமாயிருந்த முத்தரையர் சட்டென்று நிமிர்ந்து, ''கலைஞரே! ஆந்திர இளவரசி உத்தமசீலியை நம் பல்லவ மன்னர் காதலிக்கிறார் என்று பழையாறைச் சோழர் சொன்னாரே, அது உண்மையாக இருக்குமா?'' என்று இரகசியக் குரலில் வினவினார்.

''கடுகளவு கற்பனையும் கலவாத உண்மை அது!'' என்று இளநகையுடன் கூறினார் பரவாதி மல்லர். ''ஆம், அன்பரே! ஆந்திர இளவரசி என் இல்லத்தில் வந்து தங்கியிருந்த போதே அந்தக் காதல் அரும்பி விட்டது என்பதை நான் அறிவேன். அதனால் தான் பழையாறைச் சோழர் அவ்விஷயத்தை நம்மிடம் தெரிவித்தபோது நான் சிறிதும் ஆச்சரியப்படவில்லை.''

''அப்படியானால், பழையாறைச் சோழர் நினைப்பது போல் இந்தக் காதலால் பல்லவ நாட்டின் விடுதலை முயற்சி பாழ்பட்டுவிட்டது என்பதும் சரிதானா?''

''நிச்சயமாக நான் அவ்வாறு நினைக்கவில்லை. என்னைக் கேட்டால், 'பல்லவ நாட்டின் மகோன்னத எழுச்சிக்கு அது ஒரு சுப சூசகம்' என்றே சொல்வேன்.''

''ஆந்திர இளவரசியைச் சளுக்கியர் தம் எதிரியாகப் பாவிக்கத் தொடங்கியிருப்பதால் இப்படிச் சொல்லுகிறீர்களா, கலைஞரே?''

''ஆமாம்; அந்த எதிர்பாராத காதல் அவர்களுக்கு ஒரு பேரிடி என்பதில் ஐயமில்லை. இதை உணர்ந்துதான் ஆந்திர இளவரசியைப் பழி தீர்க்க முயன்று வருகிறான் சளுக்கிய வில்வேலி.''

''அவ்வாறானால் பரமேசுவர வர்மர் இதையெல்லாம் முன்கூட்டியே திட்டமிட்டுத் தம் சொந்த நலத்துக்காகவே ஆந்திர இளவரசியைக் காதலிக்க முற்பட்டிருக்கிறார் என்று சொல்லுங்கள்?''

''அப்படி நினைப்பது பல்லவ மன்னரை மட்டுமல்ல; அவருடைய பரிசுத்தமான காதலையும் நாம் அவமதிப்பதுபோல் ஆகி விடும். ஏனென்

ளால், எந்த ஒரு சிறு நலத்துக்காகவும் அவர் யாரையும் ஏமாற்றக் கனவிலும் கருதாதவர்.''

தலையை மேலும் கீழும் ஆட்டியவாறு சிறிது நேரம் பேசாதிருந்த முத்தரையர் திடுமெனத் தலையைத் தூக்கி, ''கலைஞரே! எனக்கொரு சந்தேகம்...'' என்று இழுத்தார்.

பரவாதிமல்லர் அவரைப் புன்முறுவலுடன் ஏறிட்டு நோக்கினார்.

''அதாவது சளுக்கியத் தளபதி வில்வேலி ஆந்திர இளவரசியைப் பழி வாங்கும் எண்ணத்தோடு நமது அரி வாரணத்தின் மீது ஏற்றி அனுப்பியதாகவும், அந்த ஆபத்திலிருந்து அவளைப் பரமேசுவர வர்மர் காப்பாற்றி அவளுடன் காதல் உரையாடிக் கொண்டிருந்ததைத் தாம் பார்த்ததாகவும் பழையாறைச் சோழர் நம்மிடம் சொன்னார். பிறகு ஆந்திர இளவரசி தங்கள் இல்லத்தில் தனியே வந்து நுழைந்ததாகவும், அப்போது சளுக்கிய வீரர்கள் அந்த இல்லத்தை வளைத்துச் சூழ்ந்து கொண்டதாகவும் இளங்காரிக்குடையான் என்னிடம் சொன்னான். இவ்விரண்டு தகவல்களையும் தொடர்பு படுத்திப் பார்க்கும் போது ஏதோ ஒரு விபரீத பயம் என் மனத்தில் படர்வது போல் இருக்கிறது....''

''நண்பரின் பயத்துக்குக் காரணம் என்ன? இரகசியப் படையணி திரட்டுமாறு தங்களிடம் சொல்லிச் சென்ற பல்லவ மன்னர் இன்னமும் தங்களை வந்து சந்திக்கவில்லை என்பதா?''

''ஆமாம், கலைஞரே! அவர் கட்டளைப்படி இதுவரை ஆறாயிரம் பல்லவ வீரர்களைத் திரட்டிக் கொண்டு போய் என்னுடைய சந்திரலேகை அரண்மனைக் கோட்டையில் இரகசியமாக நிறுத்தி வைத்துவிட்டு அவரைச் சந்திப்பதற்காகப் பல இடங்களிலும் சுற்றி அலைந்து கொண்டிருக்கிறேன். ஆனால் அவர் இருக்கும் இடமே தெரியவில்லை.''

''இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், நண்பரே?''

''ஆந்திர இளவரசியிடம் தம் மனத்தைப் பறி கொடுத்துவிட்ட பரமேசுவரவர்மர், சளுக்கிய வீரர்களால் தங்கள் இல்லத்திலே அவள் சிறைப் படுத்தப்பட்டுவிட்டாள் என்னும் செய்தி அறிந்து, அவளைக் காப்பாற்ற முடியாத நிலையில் தாம் இருப்பதால் மனம் உடைந்து ஏதேனும் விபரீத முடிவுக்குத் தம்மை உட்படுத்திக் கொண்டிருப்பாரோ என்று...''

முத்தரையர் இவ்வாறு சொல்லி முடிப்பதற்குள் பெரிதும் பரபரப்படைந்த பரவாதிமல்லர், ''ஓ..... அப்படியும் இருக்குமா? அப்படியும் நடக்கக் கூடுமா?'' என்று திகைத்திருந்து குழறினார். பிறகு தம்மையும் மீறிய ஒரு துடிப்புடன் நிமிர்ந்து, ''அன்பரே! தயவு செய்து எனக்கு விடை கொடுங்கள். இப்போதே நான் பெருவளநல்லூருக்குப் புறப்பட வேண்டும்'' என்றவாறு அவருடைய பதிலுக்கும் காத்திராமல் அங்கிருந்து வேகமாக நடக்கலானார்.

அத்தியாயம் நாற்பத்திரண்டு

புழுதித் தேர்

"சந்திரலேகைச் சிற்றரசர் அவர்களுக்குப் பணிவன்பான வணக்கம் உரித்தாகும்.''

வற்றிய ஓலைச் சருகென வதங்கித் துவண்டு நின்ற முத்தரையர் திடுக்குற்றுப் பின்னால் திரும்பினார். அங்கே, ஆந்திர இளவரசியின் சிவிகை தூக்கியான நாகோதரன் கைகட்டி நின்று கொண்டிருந்தான்.

''என் பெயர் நாகோதரன். ஆந்திர இளவரசியாரின் சிவிகைதூக்கி நான். ஆனால் இப்போது பல்லவ மாமன்னரின் அந்தரங்கத் தூதுவனாக — அவர் சொல்லியனுப்பிய ஒரு நற்செய்தியுடன் —தங்களைக் காண வந்திருக்கிறேன்.''

வியப்பால் கண்கள் அகல விரிய அவனை விழித்துப் பார்த்தார் முத்தரையர்.

''ஆதிக்க வெறி கொண்ட சளுக்கியரை அழித்து ஒழிப்பதற்காக ஆந்திர மன்னரிடம் படை உதவி பெற்றுப் போர்க் கோலத்தோடு புறப்பட்டு வந்து கொண்டிருக்கிறார் பல்லவ மாமன்னர் பரமேசுவரவர்மர்! இந்தச் செய்தியைத் தங்களிடம் முன்கூட்டி அறிவிக்கவே என்னை இங்கு அனுப்பி வைத்திருக்கிறார் அவர்!''

தொய்ந்து துவண்டு நின்ற முத்தரையருக்கு எங்கிருந்துதான் அத்தனை ஆவேசக் குதூகலம் அலை மோதி வந்ததோ தெரியவில்லை. மலைபோன்ற தம் உடலை உலுக்கிக் குலுக்கி ஓங்கி நிமிர்ந்து, ''வாழ்க, பரமேசுவர வர்மர்! ஓங்குக, பல்லவ நாடு!'' என்று மகிழ்ச்சிக் கர்ஜனை இட்டுக்கொண்டே பாய்ந்தோடிப் போய் அந்த எளிய சிவிகை

> என்னுடைய உபதேசத்துக்கு நான் ஹிந்து மதத்தின் உருவைத் தர மாட்டேன்; கிறிஸ்துவ மத உருவைத் தர மாட்டேன்; எந்தச் சமய உருவும் தர மாட்டேன். அதற்கு என்னுடைய உருவையே தருவேன். விடுதலை; முக்தி —இவையே என் மதம் அவ்வளவும்.
>
> — சுவாமி விவேகானந்தர்

தூக்கியான நாகோதரனை அப்படியே சேர்த்து அணைத்துக் கட்டிக்கொண்டார்.

அதே சமயம், ''வாழ்க, சோழ இளவரசி! வாழ்க, அநந்தமதி அம்மையின் தியாகம்!'' என்று இன்னொரு பெருங்குரல் எழுந்து எதிரொலித்தது. ஆச்சரியத்துடன் தலை நிமிர்ந்தார் முத்தரையர்.

பல்லவபுரம் அரண்மனைக்குரிய தனிச் சாலையொன்றின் பக்கமிருந்து அவரை நோக்கி சந்தோஷ ஆரவாரத்துடன் ஓடி 'வந்தான் இளங்காரிக்குடையான். அவனுக்குப் பின்னால், அன்றொரு நாள் இரவு ஆலம்பாக்கம் ஏரிக் கரையிலே தீப்பந்தத்துடன் வந்து சோழ இளவரசியிடம் பேசிய அந்த முதியவனும் வெற்றிக் களிப்போடுவந்துகொண்டிருந்தான்.

''சந்திரலேகைச் சிற்றரசே! நம் சோழ இளவரசியும், என் அன்னை அநந்தமதியும் சேர்ந்து, பல்லவபுரம் அரண்மனையில் இத்தனை காலமும் கொட்டமடித்துக் கொண்டிருந்த சளுக்கிய அரக்கர்களை விரட்டியடித்துவிட்டு, அங்கே சிறைப்பட்டிருந்த மகாராணி காடவன்மா தேவியை மீட்டு விட்டனர்'' என்று மகிழ்ச்சிப் பரவசத்தோடு கூறிய இளங்காரிக்குடையான் சட்டென முகத்தைப் பொத்திக் கொண்டு, ''ஆனால், நான் எப்படிச் சொல்வேன்?'' என்று மேலே பேச முடியாமல் விம்மிப் பொருமி அழலானான்.

இருளும் ஒளியும் போர் நிகழ்த்தி உஷையரசிக்கு முடிசூட்டத் தொடங்கிய விடியற்சாம நேரம்.

கால் சோர்ந்து பின்னலிடப் பெருவளநல்லூரை வந்தடைந்த சேதியக் கலைஞர், தம் இல்லம் இருந்த இடத்தில் ஏதோ ஓர் பூகம்பக் காட்சியைக் கண்டவர்போல் நடுங்கிப் பதறிநின்றார். நிலைகொள்ளாமல் சுழன்ற அவர் கண்கள், நோக்கும் திறனை இழந்து மங்கிச் சொருகிவிட்டன. மார்பை இரு கைகளாலும் அழுத்திப் பிடித்தவாறு தள்ளாடித் தள்ளாடி நடந்து போய், ஒரு மரத்தின் பின்னால் சாய்ந்து நின்ற அவர், சற்று நேரம் கழித்து, தம் கண்களைக் கசக்கி விட்டுக்கொண்டு மெல்லத் தலைநிமிர்ந்து நோக்கினார்.

எழிலும் அமைதியும் நிறைந்து, சாந்தி தேவனின் சயனக் கிருகம் போல் விளங்கி வந்த அவரது இல்லம், இப்போது இருக்கும் இடமே தெரியவில்லை! அது இருந்த இடத்தில் வெறும் கற்களும், தூண்களும், மரப் பலகைகளும்தான் தாறுமாறாகச் சிதறிக் கிடந்தன! அவற்றையும் அங்கே அந்த ரூபத்தில் விட்டு வைக்க விரும்பாதவர்கள் போல் கோபாவேசத்துடன் நொறுக்கிப் பொடிப்பொடியாக்கிக் கொண்டிருந்தனர் சளுக்கிய வீரர்கள்!

நெஞ்சைப் பஞ்சாக்கும் இந்தக் காட்சியைக் கண்டு நிலைகுலைந்து போன சேதியக் கலைஞரின் மனத்தில் வேதனைமயமான கேள்வியொன்று எழுந்தது:

'பல்லவ மாமன்னர் பரமேசுவரவர்மரின் உள்ளங் கவர்ந்த ஆந்திர இளவரசி உத்தமசீலி எங்கே? இந்த இல்லத்தில்தானே அவள் சளுக்கியரால் சிறைப் பிடிக்கப்பட்டதாக முத்தரையர் சொன்னார்? இவ்வழகிய இல்லத்தின் நிலையே இப்படி என்றால், அந்த எழிலரசியின் கதி என்னவாகியிருக்கும்?'

துக்கம் தாள மாட்டாமல் பொருமிக் கண்ணீர் வடித்த பரவாதிமல்லர், ஏதோ ஒரு பயங்கர ஒலி கேட்டுப் பரபரப்புடன் பார்வையை நிமிர்த்தினார். அவருடைய இல்லத்தை இடித்துத் தரைமட்டமாக்கிக் கொண்டிருந்த சளுக்கிய வீரர்கள் ஏனோ நாலாபுறமும் தலைதெறிக்க ஓடிக் கொண்டிருந்தனர்.

இதைக் கண்டு ஒன்றும் புரியாதவராய் மரத்தின் மறைவிலிருந்து வெளியே வந்த பரவாதிமல்லர், மீண்டும் தம் பார்வையைச் சுற்றுமுற்றும் ஓட்டினார்.


மிகத் தொலை தூரத்துக்கு அப்பால் மதம் கொண்ட யானை ஒன்று தன் துதிக்கையை மேலுயர்த்திப் பயங்கரப் பிளிறலுடன் உருண்டோடி வருவது தெரிந்தது. அந்த யானைக்குப் பின்னால் வானுக்கும் பூமிக்குமாக மேலெழும்பிய புழுதித் தேர் மெல்ல மெல்ல நகர்ந்து வருவதும் புலனாகிறது. அப்புழுதித் தேரைப் பொன்மலையாக்குவதுபோல் அப்போதுதான் கீழ்த்திசைத் துரியத்தில் செங்கதிர்ச் சூரியன் தலைதூக்கி நிமிர்ந்தது.




Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

உங்கள் குழந்தைகளுக்கு

இருமல், ஜலதோஷம் இருந்தால்





ஸிரோலின் 'ரோஷ்'

கொடுத்து பூர்ண நிவாரணம் பெறச் செய்யுங்கள்

இருமலுக்கும் ஜலதோஷத்திற்கும் ஏற்ற இந்தியாவின் குடும்ப மருந்து



உங்கள் குழந்தைகளுக்கு இருமல் அல்லது ஜலதோஷமிருந்தால் அசட்டையாய் இருக்காதீர்கள்—ஸிரோலின் கொடுத்து அபாயமின்றி துரிதமாக பூர்ண நிவாரணம் பெறச் செய்யுங்கள். அதன் இனிய ருசியை உங்கள் குழந்தைகள் பெரிதும் விரும்புவார்கள். ஸிரோலின் உங்களுக்கும் மிகச் சிறந்தது! அது உங்கள் இருமலை நிறுத்துவதோடு மட்டுமல்லாமல், இருமலை உண்டுபண்ணும் கிருமிகளைக் கொல்லவும் செய்கிறது. ஸிரோலின் தொண்டைப் புண்களுக்கு சமனமூட்டுகிறது. கபம் மற்றும் சளியைப் போக்குகிறது. அது எவ்வளவு கடுமையான இருமலிலிருந்தும் அபாயமின்றி துரிதமாக நிவாரணமளிக்கிறது.

உங்கள் வீட்டில் எப்பொழுதும் ஸிரோலின் வைத்திருங்கள்

'ரோஷ்' தயாரிப்பு

ஸோல் டிஸ்டிரிப்யூட்டர்கள்: வால்டாஸ் லிமிடெட்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

